பக்கங்கள்: இருபத்துநான்கு

02 JUN 2010

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 19 புதன்கிழமை (02.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 188

## போர்க்கால விவகாரங்களை ஆராய விசாரணைக்குழு தேவை:

# நவநீதம்பிள்ளையின் கூற்றுக்கு இலங்கை அரசு கடும் கண்டனம்

## அவருக்கு பேச உரிமை இல்லை என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஜூன் 02

**இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றன என்று கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்த கருத்துகளுக்கு இலங்கை அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச விசாரணைகள் தேவையில்லை என்று சர்வதேச நாடுகள் கூறுகின்றமையைக்கூட கணக்கில் எடுக்காது, இலங்கைக்கு சேறு பூசும் விதத்தில் நவநீதம்பிள்ளை செயற்படுகிறார் என்றும் இலங்கை அரசு கூறியுள்ளது.

வெளிவிவகார அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு இதுதொடர்பாகக் கூறியவை வருமாறு:-

நவநீதம்பிள்ளை ஐ.நாவில் உள்ள ஓர்

(23 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக் குற்ற விசாரணை: ஐ.தே.க. எதிர்க்கிறது

கொழும்பு, ஜூன் 2

இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுகள் குறித்து ஆலோசனை பெறுவதற்கு சர்வதேச நிபுணர்கள் குழு ஒன்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தால் அமைக்கப்பட்டுகின்றமையை பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில் ஐக்கிய தேசிய கட்சி எதிர்க்கின்றது - என்று அக்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஆனால், ஐக்கிய நாடுகளின் செயலாளர்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## வைத்தியசாலைகள், மக்கள் மீதான படையினரின் தாக்குதல்களை உறுதிப்படுத்துகின்றன ஆதாரங்கள்!

### லூயிஸ் ஆர்பர் அம்மையார் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 02

மனிதாபிமான உதவி நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் பொதுமக்கள் மீது இலங்கைப் படையினர் திட்டமிட்ட வகையிலேயே தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்பதை அங்கிருந்து கிடைக்கும் ஆதாரங்களின் மூலம் உறுதிப்படுத்த முடிகிறது என்று சர்வதேச நெருக்கடிகள் குழுவின் தலைவர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் ஊடகச் செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை நிராகரிக்கும் போக்கையே இலங்கை அரசு கொண்டிருக்கிறது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாகக் கடந்தவாரம் நாம் வெளியிட்ட அறிக்கையில் இலங்கைப் படைத்தரப்பினருக்கும், தமிழீழ விடுதலைப்

(23 ஆம் பக்கம் பார்க்க)

## துவாரகாவை விடுதலை செய்யுமாறு மாணவர் ஒன்றியம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 2

கடந்த 2009 நவம்பர் மாதம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பேராதனை பல்கலைக்கழக மாணவி இராசையா துவாரகாவை விடுதலை செய்யுமாறு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் அகதி முகாம்களுக்குள் வாழ்ந்து வருகின்றனர் என்றும் அவர்களை சுதந்திரமாக நடமாட அனுமதிக்க வேண்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நடந்த இறுதிப் போரில் குறைந்தது 30,000 பொதுமக்கள் பலி!

### இந்திய வைத்தியர் தகவல்

கொழும்பு, மே 2

வன்னிப் போரில் குறைந்தது 30 ஆயிரம் தமிழர்கள் பலியாகியிருக்கின்றனர் - என்று திருமலை புல்மோட்டையில் செயலாற்றிய பெயர் குறிப்பிட விரும்பாத இந்திய வைத்தியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இந்தியாவில் இருந்து வெளிவரும் 'த ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் அதனைத் தெரிவித்துள்ளார்.

இறுதிப் போரின் பொழுது நாள்தோறும் நூற்றுக்கணக்கான காயக்காரர்களுக்கு சிகிச்சையளித்தனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறு சிகிச்சையளிக்கப்பட்ட காயக்காரர்களில் 80 சதவீதமானோர் அவரவர் குடும்பங்களில் ஒருவரையேனும் இழந்தவர்களாகவே இருந்தனர் என்றும் அந்த வைத்தியர் தெரிவித்துள்ளார்.

## வாகன இறக்குமதி வரி 50 சதவீதத்தால் குறைப்பு

கொழும்பு, ஜூன் 02

வாகனங்களுக்கான இறக்குமதி வரி நேற்று முதலாம் திகதி முதல் ஐம்பது சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது என இலங்கை நாணயக் கொள்கையின் பணிப்பாளர் நாயகம் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் கார் இறக்குமதியில் மேலதிக வருமானத்தைப் பெறுவதற்கு அரசு எதிர்பார்ப்பதாகவும், தற்போது வாகனங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தவரி குறைப்பு சுற்றுலாத்துறைக்கான வாகனங்களை இறக்குமதி செய்வதற்குப் பெரிதும் உதவும் என்றும் அவர் கூறினார்.

தற்போது வாகனங்கள் மீது இறக்குமதி வரி, கலால் வரி, வட்ஸ் என 183 சதவீத வரிகள் விதிக்கப்படுகின்றன. நேற்று முதல் இந்த வரிகள் 90 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கைக்கடிகாரங்கள், புகைப்படக்கருவிகள் போன்ற பொருள்கள் மீதான வரி 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த வரிக்குறைப்பினால் தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற கிழக்காசிய நாடுகளில் இருந்து பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இலத்திரனியல் உபகரணங்கள் மீதான மேலதிக வரி 15 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

(ஒ-சி)

## பூநகரி - குருநகர் படகு சேவை இன்று ஆரம்பம் என அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 2

வடபகுதி மக்களின் போக்குவரத்து வசதி கருதி பூநகரிக்கும், குருநகருக்கும் இடையிலான படகுச்சேவை இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உட்படப் பலர் கலந்து கொண்டு படகுச்சேவையை உத்தியோகபூர்வமாகஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

சுமார் ஆறு கிலோ மீற்றர் தூரத்திற்கு இந்தப் படகுச்சேவை நடத்தப்படவுள்ளதுடன், முதற் கட்டமாக நான்கு படகுகள் ஈடுபடுத்தப்படவுள்ளன என்றும் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

தரை வழியாக இரண்டரை மணிநேரம் மேற்கொள்ளும் பயணத்தை படகுச் சேவையின் மூலம் சுமார் 45 நிமிடங்களுக்குள் மேற்கொள்ள முடியும். அத்துடன், இதன் மூலம் மக்கள் பெரும் நன்மையடையவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பஸ் கட்டணத்தைவிட குறைந்ததாக பயணமொன்றுக்கு 40 ரூபா அறவிடப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வட பகுதிக்கு [illegible]

(24 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்ற ஆட்சேபனை மனு மீதான விசாரணையிலிருந்து இரு நீதியரசர்கள் விலகல்!

கொழும்பு, ஜூன் 2.

தனக்கு எதிரான இராணுவ நீதிமன்றத்தை ஆட்சேபித்து ஜெனரல் சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனு தொடர்பான விசாரணையில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் இருவர் நேற்று விலகிக்கொண்டனர்.

அனில் குணரட்ன மற்றும் ரஞ்ஜித் சில்வா ஆகிய நீதியரசர்களே விலகியவர்களாவர்.

இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் சத்யா ஹெட்டிகே மற்றும் தற்போது விசாரணையில் இருந்து விலகிக்கொண்ட மேற்படி இரண்டு நீதியரசர்கள் ஆகியோரால் இது வரை விசாரிக்கப்பட்டு வந்தது.

விலகிய இந்த இரண்டு நீதியரசர்களும் இதற்குமுன் பொன்சேகாவுக்கு எதிரான இராணுவ நீதிமன்ற நடவடிக்கையை நிறுத்தித் தீர்ப்பு வழங்கியிருந்தனர். அந்தத் தீர்ப்புக்குத் தலைமை நீதியரசர் இணக்கம் தெரிவிக்கவில்லை.

அதைத் தொடர்ந்து அந்த இரண்டு நீதியரசர்களும் வழங்கிய தீர்ப்பு பின்னர் ஒதுக்கப்பட்டது.

(ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் புதைகுழிகள் காரணமாகவே அரசு மீள்குடியேற்றத்தில் தாமதம்!

## சந்தேகம் வெளியிடுகிறார் அரியநேத்திரன் எம்.பி

இறுதி நாள்களில் யுத்தம் இடம்பெற்ற நிலப்பரப்புகளில் மனித உடல்கள் வகை தொகை இன்றி புதைக்கப்பட்டருப்பதாலேயே அரசு மீள்குடியேற்றத்தைத் திட்டமிட்டுத் தாமதித்துக் கொண்டிருக்கிறது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் சந்தேகம் வெளியிட்டார்.

சர்வதேச புகைத்தல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் நாவற்குடா கிராமத்தின் நொச்சிமுனை பகுதியில் அமைந்திருக்கும் காந்தி சமுர்த்தி சங்கத்தில் நேற்று நடத்தப்பட்ட விழிப்புணர்வுப் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து நேற்று மனிதப் புதைகுழிகள் மீட்கப்பட்டன.

இதையடுத்து எம்மக்கள் மத்தியில் பாரிய சந்தேகங்கள் எழுந்துள்ளன. அரசு நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை அகற்றிய பின்பே மீள்குடியேற்றங்களைச் செய்யலாம் என்று கூறிக்கொள்வதில் உண்மை இராது என்றும் இறுதி நாட்களில் யுத்தம் இடம்பெற்ற நிலப்பரப்புக்களில் இருந்து மனிதப் புதைகுழிகள் மீட்கப்படலாம் என்பதாலேயே மீள்குடியேற்றங்களை அரசு தாமதப்படுத்துகிறது என்றும் ஐயம் கொண்டுள்ளார்கள்.

யுத்தம் முடிவடைந்து ஓராண்டு கழிந்துவிட்டது. காணாமல் போனோர் குறித்து எந்தத் தகவல்களும் இல்லை. இந்நிலையில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுகின்றமை மக்கள் மனதில் பெரும் பீதியையும் ஏற்படுத்தி உள்ளது.

சர்வதேச புகைத்தல் தினம் ஒவ்வோராண்டும் மே மாதம் 31 ஆம் திகதி அனுட்டிக்கப்பட்டு வருகிறது.

இப்படி ஒரு புகைத்தல் தினத்தில் தான் 1981 ஆம் ஆண்டு மே 31 ஆம் திகதி யாழ். பொதுநூலகம் எரிக்கப்பட்டது. புகைத்தல் தினத்தை அனுட்டிக்கும் இந்நாளில் யாழ்.பொது நூலகத்தில் இருந்த புத்தகங்கள் எரிந்து போயின.

புகைத்தல், மதுபான ஒழிப்பு போன்ற விடயங்களில் மாத்திரம் சமூக விழிப்புணர்வை ஏற்படுகின்றமை மாத்திரம் போதாது. அரசியலிலும் மக்கள் விழிப்படைய வேண்டும். மக்கள் அவர்களின் வாக்குரிமையை சரியாகப் பயன்படுத்துகின்றமை குறித்து அறிந்திருத் தல் வேண்டும்.

புகைத்தல், மதுபான பாவனையில் இருந்து ஆண்களை பெண்கள் தான் காப்பாற்ற முடியும். பிள்ளைகளைத் தாயும், கணவனை மனைவியும் வழி நடத்த முடியும் - என்றார்.

## மாத்தறையில் தமிழ் இளைஞர் கைது

மாத்தறை பஸ் நிலையத்திற்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான வகையில் நடமாடிய தமிழ் இளைஞர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட நேரமாக சந்தேகத்திற்கு இடமான வகையில் செயற்பட்ட 18 வயது மதிக்கத் தக்க தமிழ் இளைஞரையே பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

### புலம்பெயர்ந்துள்ள தமிழரின் பெயர்களை வாக்காளர் பதிவுகளிலிருந்து அகற்றும்

# தேர்தல் திணைக்களத்தின் செயற்பாடு அரசியல் உள்நோக்கம் கொண்டதா?

## மனோ கணேசன் கேள்வி

கொழும்பு, மே 02

வடமாகாணத்தின் யாழ். வன்னித் தேர்தல் மாவட்டத்திலிருந்து நாட்டைவிட்டு வெளியேறிவிட்டவர்களின் பெயர்களை வாக்காளர் பதிவுகளிலிருந்து அகற்றுவதற்கு தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இதன் மூலம் தமிழர்களின் அரசியல் பலத்தைக் குறைக்க நினைப்பவர்கள், தென்னிலங்கையின் 10 தேர்தல் மாவட்டங்களினது வாக்காளர் பதிவுகளில் இடம் பெறாத சுமார் 3 லட்சம் தமிழர்களைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. இது அரசியல் உள்நோக்கம் கொண்ட செயற்பாடா என தேர்தல் திணைக்களம் தமிழ் மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

'பப்ரல்' அமைப்பினால் வாக்காளர் பதிவு தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இந்நாட்டின் சனத்தொகையில் 69 வீதமானோர் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களாவர். ஆனால், தென்னிலங்கையிலே வாழும் தமிழர்களை பொறுத்தவரையில் சுமார் 45 வீதமானோரே வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த குறைபாடு தொடர்பிலே தேர்தல் திணைக்களம் பொறுப்பேற்க வேண்டும்.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, நுவரெலிய, பதுளை, புத்தளம் ஆகிய மாவட்டங்களை சார்ந்த பெருந்தொகையான தமிழர்கள் தகுதி இருந்தும் வாக்காளர்களாக பதிவு செய்யப்படவில்லை. வாக்காளர் பதிவு தொடர்பில் வழமையான முறைமைகளிலிருந்து வெளியேறி புதிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும்படி தேர்தல் ஆணையாளரை நான் ஏற்கனவே கோரியுள்ளேன். இதற்கு பவ்ரல் போன்ற சமூக நிறுவனங்களும் உதவிட வேண்டும்.

புலம்பெயர்ந்து சென்றுள்ள தமிழர்களின் பெயர்களை வாக்காளர் பதிவுகளிலிருந்து அகற்றுவதற்கு இன்று தேர்தல் திணைக்களம் மும்முரமாக நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதன் மூலம் சம்பந்தப்பட்ட மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகையும் குறையும். இது பேரினவாதிகளை சந்தோசப்படுத்துகின்றது. ஆனால் இதை ஆர்வத்துடன் செய்கின்ற தேர்தல்கள் திணைக்களம் பதிவு செய்துகொள்வதற்கான தகுதியுள்ள தமிழர்களை பதிவுசெய்வதற்கு அக்கறை காட்டாதது ஏன்? இது இனி மேலும் தொடர முடியாது.

இந்நிலையில் வாக்காளர் பதிவுகளில் நமது மக்கள் வாக்காளர்களாக பதிவு செய்யப்படாவிட்டால் அது நிலைமையை படு மோசமாகிவிடும். தேர்தல் ஆணையாளர் திணைக்களம் இதுதொடர்பாக அக்கறை காட்டாவிட்டால் நாம் எதிர் நடவடிக்கையில் ஈடுபடுவோம். இதை இந்நாட்டில் உள்ள பெரும்பான்மை இன அரசியல்வாதிகளும் புரிந்துகொள்ள வேண்டும்.

- இப்படி மனோகணேசன் கூறினார்.

(அ-சி)

## முதலாம் வகுப்பு மாணவர் பற்றிய சுற்றுநிருபம் இன்று வெளியீடு

2011ஆம் ஆண்டில் முதலாம் வகுப்பில் மாணவர்களை அனுமதிப்பது பற்றிய சுற்று நிருபம் இன்று வெளியிடப்படுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய 2011 ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்படவுள்ள விண்ணப்பப் படிவங்களும் இன்று வெளியிடப்படுமென கல்வியமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்தார்.

புதிய சுற்று நிருபத்தின் படி இவ்வாண்டில் முதலாம் தரத் துக்கு மாணவர் களைத் தேர்ந்தெடுக்கும் பூரண பொறுப்பு பாடசாலை அதிபர்களையே சாருமெனவும் இவ்விடயத்தில் அமைச்சின் தலையீடு இருக்காது எனவும் அவர் மேலும் கூறினார்.

## பொதுநலவாய நாடுகளின் மாநாடு அம்பாந்தோட்டையில்

பொதுநலவாய நாடுகளின் மாநாடு 2013 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இடம் பெறுமென்றுஇலங்கை அறிவித்துள்ளது.

அமைச்சர் டி.யூ. குணசேகர கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் இத்தகவலைத் தெரிவித்தார்.

எனினும், அம்மாநாடு நடைபெறும் சரியான திகதி மற்றும் அது தொடர்பான விவரம் குறித்து தற்போது கூறமுடியாதுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.


## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் கணக்கீட்டு ஆசிரியர்
பாலகஜன் அவர்களின் தந்தையாராகிய
**கந்தசாமி பாலசுப்பிரமணியம்**
அவர்களின் மரணத்தையிட்டு துயருற்று இருக்கும்
அவரது குடும்பத்தவர்களுக்கு எமது கண்ணீர்
பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குருநகர், யாழ்ப்பாணம். BPI கல்விச் சமூகம்

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்
பா. கஜேந்திரன் அவர்களின் அன்புத் தந்தை
**கந்தசாமி பாலசுப்பிரமணியம் (J.P.)**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

சுடர் ஒளி THE SUDAROLI
[மே 30 - ஜூன் 05]
இப்போது விற்பனையில்...



- அரசு பழைய நிலையில் தானா?
- அனைவராலும் போற்றப்படும் தலைவராக ராஜபக்ஷ உயர்வாரா?
- தனியார் பஸ்களும் பயணிகளும்
- பதுங்கு குழியும் பால்மாவும்
- உயிர் வலிக்கும் கணங்கள் தொடர்...
- திருமணத்துக்கு முன் மருத்துவப் பரிசோதனை அவசியமா?

மற்றும் வறுமையான பல்சுவை அம்சங்களுடன்

உங்கள் உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்.
இப்போது கொழும்ப விலையிலேயே (ரூ.25) விற்பனையாகிறது

SHAMEOCK
ஏச்சமோட்டை, யாழ்.
A/L 2012
★ கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள், GIT, ஆங்கிலத்துடன்
தமிழ் - S.சிவா
அரசியல் - S.C.செந்தூரன்
புவியியல் - A.ராஜா
அளவை - S.றொகேஸியன்
கிறிஸ்.நாகு கிறிஸ் } S.K ஜூட்
நாடகம் - N.கஜீதரன்
★ O/L Day Class

## 31 ஆம் நாளில்... நீங்கா நினைவலைகள்



**செல்வன் மகாலிங்கம் சதீஷன்**

மண்ணுலகில் 09★09★1984

விண்ணுலகில் 02★05★2010

*மாதம் ஒன்று ஓடி மறைந்தாலும்*
*நீண்டதோர் நீங்கா நினைவுகளுடன்*
*நிலையற்ற இவ்வுலகில் வாழ்கின்றோம்*
*வேண்டாம் இவ்வுலகென்று - ஆண்டவன் தான்*
*உனை அழைத்தனனோ?*
*வையகத்தில் வளமோடு வாழ எண்ணி*
*''கலர் லாப்'' திறப்பதற்காய் கனாக் கண்டாய் - உன்*
*கனவு நனவாகி கனிகின்ற காலம் வர*
*சாந்தி செய்வதற்காய் நீ சங்கமித்த வேளையிலே*
*உன் ஆத்ம சாந்திக்காய் நாம் பிரார்த்திக்க நேர்ந்ததுவோ -*
*அகிலமே அலறுதையா*
*உன் அன்றலர்ந்த வதனம் காண்பதற்காய்*
*சாந்தகுணம் கொண்ட சதீஷா - உன்*
*பிரிவுத்துயர் தாங்காது துவளுகின்றோம்.*

பிரிவுத் துயரால் வாடும்:
அப்பா, அம்மா, சித்தப்பாமார், சித்திமார், பேரன், பேர்த்திமார், மாமன்மார், மாமிமார், அக்கா, தங்கைமார், தம்பிமார், மைத்துனர்மார், மைத்துனிமார், பெறாமக்கள், மருமகன்.

பிள்ளையார் கோயில் ஒழுங்கை, தம்பனை, பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கருணாநிதிக்கு மற்றொரு சந்தர்ப்பம்

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு இதுவரை எடுத்த நடவடிக்கைகள் போதிய மன நிறைவு அளிக்கவில்லை என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி கூறி இருக்கிறார்.

தி.மு.கவின் உயர்நிலை செயற்றிட்ட குழுக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்ட முடிவில் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே கருணாநிதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முதல்வர் கருணாநிதியைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது என்ன என்பதே இன்று எழும் கேள்வி ஆகும்.

* இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவால் அனுப்பப்பட்ட பொருள்கள் இன்னும் அவர்களுக்குச் சரிவர விநியோகிக்கப்படவில்லை.
* தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியா இன்னும் குடியுரிமை வழங்கவில்லை.
* வன்னியில் முகாம்களில் வைக்கப்பட்டுள்ள மக்கள் இன்னும் தமது சொந்த இடங்களில் முழுமையாகக் குடியமர்த்தப்படவில்லை.

மேற்கண்டவைதான் கருணாநிதிக்குத் தெரிந்த இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் போலும்.

கருணாநிதியைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அவர் ஒருபோதும் நீதியாக நடந்துகொள்ளவில்லை என்பதே யதார்த்தம்.

கடந்த காலங்களில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தமிழ்நாட்டு அரசியலுக்குப் பயன்படுத்தப்பட்டதன் விளைவையே இலங்கைத் தமிழர்கள் இன்று அனுபவிக்கிறார்கள்.

தற்போது மத்தியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் அரசு தி.மு.கவின் தயவிலேயே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது. தி.மு.க. தலைவர் நியாயமாகச் சிந்தித்திருந்தால் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் அரசுக்கு எப்போதோ நெருக்குதல்களைக் கொடுத்திருக்க முடியும். இலங்கைத் தமிழ்மக்கள் வரலாறு காணாத அழிவுகளைக் கடந்த ஆண்டு சந்தித்தபோது, உலகத் தமிழ்மக்களின் தலைவர் என்று கூறப்படும் கருணாநிதி இந்திய மத்திய அரசுக்குத் துணைபோகும் விதத்தில் நடந்து கொண்டதன் மூலம் இலங்கைத் தமிழர்களுக்குப் பெரும் துரோகம் இழைத்துள்ளார் என்பதை இலகுவில் மறந்துவிட முடியாது.

இந்திய மத்திய அரசின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் மறைமுகமாகவோ, நேரடியாகவோ கருணாநிதி துணைபோய் இருந்தார். இலங்கைத் தமிழர்களை சரியான தருணத்தில் கைவிட்டுவிட்டு, இலங்கைத் தமிழர் விடயத்தில் மத்திய அரசு இதுவரை எடுத்த நடவடிக்கைகள் திருப்தி தரவில்லை என்று கருத்து வெளியிடுவது வெறும் கண்துடைப்பாகும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கருணாநிதி கடந்த காலங்களை மறந்து இனியாவது உரிய முறையில் செயற்படுவாரானால், அதற்காக அவருக்கு இன்னும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகிடைக்க அவர் நடவடிக்கை எடுக்க முடியும்.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ எதிர்வரும் 8 ஆம் திகதி புதுடில்லி வருகிறார். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான இலங்கை அரசின் யோசனைகளை புதுடில்லிக்கு எடுத்து வருகிறார். அதேசமயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தீர்வு யோசனை ஒன்றைத் தயாரித்து இந்திய அரசிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஆகவே, கருணாநிதிக்கு தான் செய்த தவறுகளுக்குப் பிராயச்சித்தம் பெற ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு ஒன்றை இலங்கை அரசு மீது திணிக்கலாம். கருணாநிதி செய்வாரா?

### வலி.வடக்குப் பகுதியின் தற்போதைய நிலை:

# முருகைக் கற்கள் அகழ்வதால் சூழல் பாதிப்பு; எமது வளங்கள் சூறையாடப்படும் அவலம்

### விநாயகமூர்த்தி எம்.பி. யாழ். அரச அதிபரின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 2

வலி.வடக்குப் பகுதியிலுள்ள முருகைக் கற்களை அகழ்ந்து சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்துவது குறித்தும் எமது வளங்கள் சூறையாடப்படுவது குறித்தும் யாழ். அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளேன்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார். அண்மையில் அவரது இல்லத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது அவர் மேலும் கூறியவை வருமாறு :-

வலி.வடக்குப் பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருப்பதால் எமது மக்கள் அங்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மக்கள் குடியமர மறுப்பது மனித உரிமை மீறலாகும். வலி. வடக்கில் மக்கள் மீண்டும் குடியமர அனுமதிக்க வேண்டும் என வழக்குத்தாக்கல் செய்திருந்தோம். ஆனால் எவ்வித பயனும் கிடைக்கவில்லை.

நிபந்தனைகளுடன் குடியமர அனுமதிப்பதற்காக தீர்ப்பு வழங்கப்பட்டது. பத்தாயிரம் பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 9 ஆயிரம் பேர் நேர்காணல் செய்யப்பட்டனர். அவர்களில் 8 ஆயிரம் பேரின் காணி உறுதிகள் பரிசீலிக்கப்பட்டிருந்தன. ஆனால் இதுவரை குடியமர இறுதிவரை அனுமதிக்கப்படவில்லை.

தெல்லிப்பழைச் சந்தியிலுள்ள தடை முகாமை மாற்றியமைக்க கோரிக்கை செய்திருந்தோம். பிரபல பாடசாலைகள், புற்றுநோய் வைத்தியசாலை போன்றன அப்பகுதியில் அடைபட்டுப்போயுள்ளன.

**விவசாயத்துக்கு ஏற்ற மண்**

குடாநாட்டின் முப்பது வீத நிலப்பரப்பை உடைய வலி.வடக்குப் பகுதி விவசாயத்துறைக்கு ஏற்ற மண்ணைக் கொண்டுள்ளது. அவ்வாறு வளமான பிரதேசம் மக்களின் தேவைக்கு மறுக்கப்பட்டுள்ளதுடன் அங்குள்ள வளங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன.

முருகைக்கல் அகழப்படுகின்றன. இதனால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கடல்நீர் உட்புகும் அபாயம் உள்ளது. மக்கள் மீளக்குடியமர முடியாத வகையில் பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆயிரம் பேருக்கு மேல் வேலை செய்து முருகைக்கல் அகழ்வில் ஈடுபட்டுள்ளனர். எமது பகுதி வளம் சூறையாடப்படுவது, அழிக்கப்பதுவது, அகற்றப்படுவது குறித்து யாழ். அரச அதிபரின் கவனத்துக்கும் கொண்டுவந்துள்ளேன் - என்றார்.

(ஒ-14)

## கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டமையை அடுத்து மலேஷியாவில் இலங்கையரின் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, ஜூன் 02

மலேஷிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் மேற்கொண்டிருந்த உண்ணாவிரதப் போராட்டம் எட்டு நாள்களின் பின்னர் நேற்றுமாலை கைவிடப்பட்டது.

அகதிகளாக ஏற்றுக்கொள்ளும் மூன்றாவது நாட்டுக்குத் தங்களை அனுப்புமாறு குறித்த அகதிகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அந்நாட்டுப் பிரதமர் அலுவலகம் ஏற்றுக் கொண்டு விரைவில் நடவடிக்கை எடுக்கப்போகிறது என உறுதி அளித்தமையை அடுத்தே அவர்களின் இந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டுள்ளது.

மலேஷிய கடல் பகுதியில் தத்தளித்துக்கொண்டிருந்த நிலையில் பெண்கள், குழந்தைகள் உட்பட இலங்கைத் தமிழர்கள் 75 பேர் அந்நாட்டுக் கடற்படை அதிகாரிகளினால் கடந்த மாதம் 19 ஆம் திகதி பினாங்கு கடற்கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், தங்களை அகதிகளாக ஏற்றுக்கொள்ளும் நாடுகளுக்கு அனுப்பி வைக்கும்படி மலேஷிய அரசை அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

இந்தக் கோரிக்கையை முதலில் ஏற்றுக்கொண்ட மலேஷிய அரசு, பின்னர் ஏற்க மறுத்ததால் கப்பலை விட்டு இறங்காமல் தொடர்ந்து இரண்டு நாள்களாகப் பழுதடைந்த அந்தக் கப்பலிலேயே இருந்தனர். அதனையும் மீறித் தங்களை இறக்க முயற்சி செய்தால் கடலில் குதித்து தற்கொலை செய்துகொள்வோம் என்றும் அவர்கள் எச்சரித்தனர்.

இதனையடுத்து, பினாங்குதுணை முதல்வர் ராமசாமி, அவர்களை சமாதானம் செய்து கரைக்கு அழைத்துச் சென்றார். அதன் பின்னர் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனத் தனித்தனி முகாம்களில் அவர்கள் அடைக்கப்பட்டனர் .

இதுகுறித்து பல்வேறு அமைப்புகளிடம் கோரிக்கை விடுத்தும் கூட முகாம்களைவிட்டுத் தம்மை வெளியே அனுப்பவில்லை என்று முகாமில் உள்ள 67 ஆண்கள் கூறினர்.

இந்நிலையில், தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி மேற்படி ஆண்கள் மாத்திரம் கடந்த 23 ஆம் திகதி முதல் உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டிஷ் மகாராணி இலங்கை வருவார்

கொழும்பு, ஜூன் 2

பிரிட்டிஷ் எலிஸபெத் மகாராணி 2013ஆம் ஆண்டு இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுவதாக பிரிட்டிஷ் தூதரகத்தின் பேச்சாளர் டொமினிக் வில்லியம்ஸ் தெரிவித்தார்.

இலங்கையில் 2013 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்ளும் முகமாகவே இவர் இலங்கை வர இருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மாநாடு 2011ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறும். அதற்கு அடுத்ததாக இலங்கையில் நடைபெறவிருப்பதாக டொமினிக் வில்லியம்ஸ் குறிப்பிட்டார்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பிரிட்டன், ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, கனடா ஆகியவை உட்பட 54 நாடுகள் தற்போது பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகித்து வருகின்றன.

## இலங்கையின் நல்லிணக்கக் குழுவுக்கு அமெரிக்கா பெரு வரவேற்பாம்!

### வெளிவிவகார அமைச்சர் பெருமிதம்

கொழும்பு, ஜூன் 2

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக் குழுவுக்கும், அவரது ஏனைய வேலைத்திட்டங்களுக்கும் அமெரிக்கா பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சில் அவர் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடியபோதே இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வேலைத்திட்டத்தை அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கையின் கொள்கை மீது அந்நாடு அதீத நம்பிக்கை கொண்டுள்ளது. அந்த நம்பிக்கை காரணமாக இலங்கைக்கான பயண எச்சரிக்கையையும் தளர்த்தியது.பயண எச்சரிக்கையை அமெரிக்கா தளர்த்தியமைக்குக் காரணம் நாட்டில் பாதுகாப்பு சீரானது மட்டுமல்ல, அரசின் மீது அமெரிக்கா கொண்டுள்ள நம்பிக்கையும்தான் என அமெரிக்கா எம்மிடம் தெரிவித்தது.

நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டிருப்பது தொடர்பிலும் அமெரிக்கா மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளது. உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உள்நாட்டிலேயே முடிவெடுக்கப்பட வேண்டும். வெளிநாட்டில் இருந்து தீர்வு இறக்குமதி செய்யக்கூடாது என்ற இலங்கையின் நிலைப்பாட்டை அமெரிக்கா ஏற்றுள்ளது.

அகதிகளின் மீள்குடியேற்ற விடயத்திலும் அமெரிக்கா மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளது. பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு அமெரிக்கா உதவி வழங்கப்போவதாக எமக்கு உறுதியளித்துள்ளது. - என்றார்.

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 20 | 03.06.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி | : ஷஷ்டி |
| | மு.ப. 11.54 |
| நட்சத்திரம் | : அவிட்டம் |
| | பி.இ. 12.10 வரை |
| சுபநேரம் | : 07.22 - 08.52 |
| ராகுகாலம் | : 01.22 - 02.52 |

## இலங்கையர் உட்பட 60 பேர் மெக்ஸிக்கோவில் கைது!

### கொள்கலனுக்குள் ஒளித்திருந்தபோது பிடிபட்டனர்

கொழும்பு, ஜூன் 2

இலங்கையர்கள் உள்ளிட்ட சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் எனக் கருதப்படும் 60 பேர் தென் மெக்ஸிக்கோ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மெக்ஸிக்கோவின் சமூகப் பாதுகாப்பு நிறுவனத்தின் சின்னம் பொறிக்கப்பட்ட கொள்கலன் ஒன்றின் ஊடாக சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் பிரவேசித்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தென் மெக்ஸிக்கோ மாநிலமான சிப்பாஸில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் இந்தியா,இலங்கை, மத்திய அமெரிக்கா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் காணப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

'எக்ஸ்கதிர்' மூலமான பரிசோதனையின்போதே குறித்த கொள்கலனில் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் மறைந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொள்கலனில் இருந்தவர்கள் உரிய ஆகாரமின்றி மிகவும் நலிந்த நிலையிலிருந்தனர்.

இவர்களில் 15 பேர் பெண்கள். அனைவரும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் அமெரிக்காவில் சட்டவிரோதமான முறையில் குடியேறும் நோக்கில் மெக்ஸிக்கோவுக்குச் சென்றிருக்கலாம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




வடமராட்சி கிழக்கு மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கருதி கௌரவ அமைச்சர்

**கே.என். டக்ளஸ் தேவானந்தா**

அவர்களினாலும் வடமராட்சி அமைப்பாளர் (ஈ.பி.டி.பி)

**ஐ.சிறீரங்கேஸ்வரன்** அவர்களினாலும்

அமைக்கப்பட்ட நியூட்டன் அக்கடமியினால் நடத்தப்பட்ட தரம்-05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திறனாய்வு பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்கள்

| | |
|---|---|
| 01. யோகதாசன் மேரி டிபூவிவி | யா/மணற்காடு றோ.க.த.க. பாடசாலை. |
| 02. ஜெகதீசன் தர்சிகன் | யா/குடத்தனை அ.த.க. பாடசாலை. |
| 03. செபஸ்தியாம்பிள்ளை மேரி அஞ்சனா | யா/மணற்காடு றோ.க.த.க. பாடசாலை. |
| 04. உதயகுமார் தர்மிவி | யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை. |
| 05. தாஜ்மோகன் தேனுஜா | யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை. |
| 06. அன்ரன்மரியராசா மரியறோசானா | யா/மணற்காடு றோ.க.த.க. பாடசாலை. |
| 07. பாலசிங்கம் ஆரிக்குமரன் | யா/குடத்தனை அ.த.க. பாடசாலை. |
| 08. மதீஸ்வரன் ஜெஸ்ரின் | யா/குடத்தனை அ.த.க. பாடசாலை. |
| 09. சிவராசா தனுஷா | யா/அம்பன்அ.மி.த.க. பாடசாலை. |
| 10. ரவிமாறன் எப்சிபா | யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை. |

இவர்கள் மென்மேலும் கல்வியில் சிறந்து சாதனை படைக்க வாழ்த்துகின்றோம்.

இவர்களுக்கான வங்கிக்கணக்குப் புத்தகங்கள் இன்று (02.06.2010) பிற்பகல் 3.30 மணிக்கு எமது நிறுவனத்தில் வழங்கப்படும். இதில் மாணவர்கள், பெற்றோர் நலன்விரும்பிகள், கல்வி ஆர்வலர்கள் யாவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குடத்தனை,
வடமராட்சி கிழக்கு.

நிர்வாகம்
நியூட்டன் அக்கடமி

(வி/568067)



## அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்
### 91 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் மாவட்ட ரீதியான விளையாட்டுப் போட்டிகள்

★ கரப்பந்தாட்டம் Setup
★ கரம் - ஆண், பெண் (16 வயதின் கீழ், மேல்)
★ சதுரங்கம் - ஆண், பெண் (16 வயதின் கீழ், மேல்)

* கரப்பந்தாட்டத்துக்கான விண்ணப்பப்படிவங்களை "காவேரிசில்க்ஸ்" இல.48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் கரம், சதுரங்கத்துக்கான விண்ணப்பப்படிவங்களை "ஜெயாஸ் டிஜிட்டல் வீடியோ அன் போட்டோ" இல. 203/5, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம்.
* விண்ணப்ப முடிவுத்திகதி:- 08.06.2010. மேலதிக விவரங்களுக்கு நிலையக் காப்பாளர் நி.துஸ்யந்தனுடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இலக்கம் - 0777430910

விளம்பர அனுசரணை:- நவீன முறையில் சிறப்பாக படம் பிடித்திட நாடுங்கள்...
JEYA'S DIGITAL VIDEO AND PHOTO, இல.203/5, கண்டி வீதி, அரியாலை.

## மரண அறிவித்தல்
### திருமதி ரதி தங்கமயில்



மஞ்சவனப்பதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட செட்டித் தெரு, பிரபல வர்த்தகர் திரு.திருமதி தம்பிமுத்து விஜயரட்ணத்தின் அருமைப் புதல்வி ரதி கொழும்பில் காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை தங்கமயிலின் அன்பு மனைவியும் லோஜனாவின் பாசமிகு தாயாரும் சுதுமலை வடக்கைச் சேர்ந்த செல்லப்பா பொன்னுத்துரை தம்பதியினரின் மருமகளும் ராஜ்குமார், யோகநாதன், சண்முககுமாரன், அரவிந்தன், பிரபா, மஞ்சுளா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.06.2010) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு கொழும்பு கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

167, புதுசெட்டித்தெரு,
கொழும்பு - 13. (வி/567896)

தகவல்:
பொன்னுத்துரை தங்கமயில்

## சுகாதாரப் பரிசோதகர் மருந்தாளர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 02

வடமாகாண சுகாதார அமைச்சினால் பொதுச்சுகாதார பரிசோதகர் மற்றும் மருந்தாளர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் கிடைக்கப்பெற்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதியில் காலை 8.30 மணிக்கு நேர்முகப்பரீட்சை நிலையமான யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குச் சமுகமளிக்குமாறு சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-1)

## சேவைநலன் பாராட்டு விழா

நல்லூர், ஜூன் 02

நல்லூர் சென்.பெனடிக்ற் வித்தியாலய அதிபர் அருட்சகோதரி மரியமலர் யோசப் பின் சேவைநலன் பாராட்டு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை உப அதிபர் திருமதி விமலன் ஜெயபாரதி தலைமையில் திருப்பலியுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## விஞ்ஞானமாணிக் கற்கைநெறி; 9 ஆம் திகதி பதிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 02

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இயற்றை விஞ்ஞானபீடத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானமாணிக் கற்கை நெறிக்கான பதிவுகளும் புதிய மாணவர்களுக்கான அறிமுகநிகழ்வும் எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை யாழ். பிராந்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

விஞ்ஞானமாணிக் கற்கைநெறிக்கான பதிவுகள் காலை 8.30 மணிமுதல் நடைபெறும். புதிதாகப் பதிவு செய்த மாணவர்களுக்கான அறிமுகநிகழ்வு முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும்.

இந்தக் கற்கை நெறி யாழ். பிராந்திய நிலையத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படுவதனால் பதிவுசெய்ய அனுமதி கிடைத்தவர்கள் அன்றையதினம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிராந்திய இணைப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-10)


### மாடி வீடு வாடகைக்குண்டு

கே.கே.எஸ். வீதியில் சிவன்கோயிலுக்கும் மனோகராச் சந்திக்கும் இடையில் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு உடன் வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0779616895

### வீடு விற்பனைக்கு

வைத்தீஸ்வரா லேன், உரும்பிராய் மேற்கில் 2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 7914905

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

யாழ்.மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் சிறிய நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொ.பே. இல. 021 3211735

### தவறிவிட்டன

24.05.2010 அன்று முல்லைத்தீவு வற்றாப்பளையில் ஜீவரட்ணம் தவமணிதேவி (456201652V), ஜீவரட்ணம் ஜேயதீஸ் (760092460V) ஆகியோரின் அடையாள அட்டைகளும், சாரதி அனுமதிப்பத்திரம், வங்கி அட்டைகள் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P.: 0714977019, 021 3211968

### முகாமைத்துவ வேலை வாய்ப்பு

யாழ். மண்ணில் 8 மாத காலமாக வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கும் DS.Max நிறுவனமொன்றின் புதிய இரு கிளைகளுக்கான முகாமைத்துவப் பயிற்சியாளர்கள் தேவை.

ஆரம்ப சம்பளம்:- 5250 ரூபா
20 பேர் மட்டும் போதும்
* தகைமை:- G.C.E. O/L, A/L
* தொடர்புகளுக்கு:- யாழ். - 021 4900001, நல்லூர் - 021 4900350, நெல்லியடி - 021 4905001

### தவறிவிட்டது

6A, 1,1 மெண்டிஸ் பிளேஸ், தெகிவளை என்னும் முகவரியைச் சேர்ந்த சின்னத்துரை குமாரசாமி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (570437788V), வாகன சாரதிப்பத்திரம் (JF 008505), வரிப்பத்திரம் என்பன சுன்னாகத்துக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

எஸ்.குமாரசாமி,
பிரதேச செயலக வீதி, உடுவில் கிழக்கு,
சுன்னாகம். T.P. 0772253341



### மணமகள் தேவை

யாழ். கௌரவ படித்த குடும்பத்தைச் சேர்ந்த 43+ வயதும், கனடிய பிரஜா உரிமையும் உடைய, விவாகரத்துப்பெற்ற, கொம்பியூற்றர் டிப்ளோமா உடைய ஸ்கில் வேலைபுரியும் வசதியான, அமைதியான, பொதுநிறம், ஒழுக்கசீலர், இளமைத்தோற்றம் கொண்ட 5' 8½" உயரமும் உத்தராடம் 4 ஆம் பாதமும் கொண்ட மணமகனுக்கு 38 - 41 வயதுக்குட்பட்ட சராசரியான கல்வி அறிவு உடைய மணமகள் தேவை. விதவைகள், விவாகரத்துப்பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். ஸ்பொன்சர் செய்யலாம்.

பொருத்தமானவர்கள் tn3107918@gmail.com எனும் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 03 |
| 09 | 05 |
| 1934 | 2010 |



### அமரர் தம்பிஜயா கதிர்காமநாதன் (தில்லையர்)

கடந்த 03.05.2010 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்திகேட்டு, நேரில் வந்தும், தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தும், அஞ்சலி செலுத்தி இறுதிச்சடங்கில் ஒத்துழைத்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் நினைவாக இன்று (02.06.2010) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சைவப் பாடசாலை லேன்,
திருநெல்வேலி. (99018)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 15 |
| 12 | 05 |
| 1964 | 2009 |



அமரர்

### இராசு துரைராஜசிங்கம் (மோகன்)

நீங்கள் எம்மை தவிக்கவிட்டுச் சென்று
ஆண்டொன்று ஓடிமறைந்தாலும்
உள்ளத்தில் நினைவுகள் நிறைந்துள்ளன
ஈரவிழிகளுடனும் ஏங்கும் உள்ளத்துடனும்
தங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

9, பழம்வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (99015)

மனைவி,
பிள்ளைகள்,
சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்
### திருமதி கந்தையா அன்னலட்சுமி



பூநகரி, ஆலங்கேணியைப் பிறப்பிடமாகவும் நல்லூர், பூநகரியை வாழ்விடமாகவும் கொண்ட அமரர் பரமு கந்தையா (கிராம சபை முன்னாள் உப தலைவர், உறுப்பினர்) அவர்களின் அன்புத் துணைவியார் அன்னலட்சுமி பிரான்ஸில் நேற்று (01.06.2010) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சந்திரசேகரா (முன்னாள் அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) மற்றும் மகாதேவா (முன்னாள் தலைவர், பூநகரி ப.நோ.கூ.சங்கம்), மகாலிங்கம் (நோர்வே), பத்மநாதன் (கனடா), நவீந்திரராசா (நோர்வே), சிவமலர் (கனடா), கோமளாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கோமளேஸ்வரி, நாகபூசனி, கோகிலா, நிரஞ்சினி, புனிதாம்பிகை, கனகறஞ்சன், சிவநேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.06.2010) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி: நல்லூர், பூநகரி.
தற்காலிக முகவரி: மூநலாம் ஒழுங்கை,
கற்குழி, சாவகச்சேரி. (வி/568071)

தகவல்:
க.மகாதேவா (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் தாக்கலான முதலாவது வழக்கு

# நுளம்புப் பெருக்கத்துக்குக் காரணமானவர் நீதிமன்றத்தால் எச்சரிக்கப்பட்டு விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்2

நுளம்புப் பெருக்கம் ஏற்படக் கூடிய வகையில் தனது வீட்டு வளவினைச் சுத்தமின்றி வைத்திருந்த ஒருவருக்கு மல்லாகம் நீதிமன்ற நீதிவானால் தண்டப் பணம் விதிக்கப்பட்டது. அத்துடன் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

2007ஆம் ஆண்டு கொண்டுரவப்பட்ட நுளம்புப் பெருக்கத் தடைச் சட்டத்தின் கீழ் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவில் சுதுமலைப் பகுதியின் பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் சம்பந்தப்பட்ட நபருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கின் பிரகாரம் இத்தகைய தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நுளம்புப் பெருக்கம் ஏற்படக்கூடியதாக தனது வளவினுள் பற்றைகள், சிரட்டைகள், பிளாஸ்ரிக் பொருள்கள் என்பவற்றை வைத்திருந்ததாகவும் -

அவற்றைச் சுத்தம் செய்யுமாறு சுதுமலைப் பகுதியின் பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் 14 நாள்களுக்கு முன்னர் 'நோட்டீஸ்' மூலம் குறிப்பிட்ட வளவின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் -

அந்த அறிவுறுத்தலை கருத்திற்கொள்ளாது அவர் வளவினை சுத்தம் செய்யாதிருந்ததை அறிந்த அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குறிப்பிட்ட நபருக்கு எதிராக மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

கடந்த 26ஆம் திகதி வழக்கினை விசாரித்த மல்லாகம் மாவட்ட பதில் நீதிவான் அ.தம்பிமுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் தண்டப்பணம் அறவிட்டதுடன் எச்சரிக்கையும் செய்தார்

2007ஆம் ஆண்டு நுளம்புப் பெருக்கத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டதில் இருந்து முதன்முதலாக வழக்குத் தொடரப்பட்டதும் -

குற்றவாளிக்கு எதிராக தண்டப்பணம் அறவிடப்பட்டதும் - யாழ்ப்பாணத்தில் இதுவே முதற்தடவையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (1-9)

## 'நஷனல் ட்ரஸ்ட்' வங்கி கிளை யாழ்.நகரில்

யாழ்ப்பாணம்,ஜூன்2

'நஷனல் ட்ரஸ்ட்' வங்கியின் கிளை ஒன்று எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.நகரில் திறந்து வைக்கப்படவுள்ளது. -

ஸ்ரான்லி வீதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இக்கிளை நிறுவப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் இயங்கி வரும் பல தனியார் வங்கிகளுடன் நஷனல் டிரஸ்ட் வங்கியும் இணைந்து கொள்கிறது. (50-236)

## பாஷையூர் கடலின் நடுவே உள்ள அந்தோனியார் சொரூபத்தில் வழிபாடு

கொழும்புத்துறை,ஜூன்2

பாஷையூரில் கடலின் நடுவே அமைக்கப்பட்டுள்ள புனித அந்தோனியாரின் தொழிலாளர் பாதுகாப்பு திருவுருவ அமைவிடத்தில் இன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

இன்று மாலை 4.30 மணிக்கு மக்கள் படகுகளில் கடற்பகுதிக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் பாதுகாப்பு காரணங்களுக்காக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கடல் அந்தோனியாரின் அமைவிடத்திற்கு மக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இம்முறை எவ்வித கட்டுப்பாடும் இன்றி சென்றுவர முடியும் எனவும் போதிய படகு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (50- 135- 224)

## கோப்பாய் பகுதியில் அடிக்கடி ஏற்படும் மின்தடையால் பாதிப்பு

நாவற்குழி,ஜூன்2

கோப்பாய் சந்தியில் பருத்தித்துறை வீதியில் பகல் வேளைகளில் அடிக்கடி ஓரிரு மணி நேரம் மின்தடை ஏற்படுகிறது.

இதனால் கோப்பாய் பிரதேச செயலகத்தில் தமது கருமங்களைப் பார்க்க வருவோர், போட்டோ கொப்பி எடுக்கும் தேவை ஏற்படின் வெளிக்கடைகளில் எடுக்கமுடியாமல் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

பிரதேச செயலக அதிகாரிகள் நேரத்துடன் அலுவல் முடித்துத் தருகின்றபோதும் தேவைப்படும் ஆவணங்களின் பிரதிகளை போட்டோ கொப்பி வெளிக்கடைகளில் எடுப்பதால் தாமதிக்கிறதெனப் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இலங்கை மின்சார சபையின் முன் அறிவிப்பு இன்றிய பகல்நேர மின்வெட்டுத் தொடர்வதையிட்டு பொருத்தமான மாற்று நடவடிக்கைகளை எடுக்குமாறும் பொதுமக்கள் கோருகின்றனர். (1-121)

மாகாணப் பேச்சுத் திறன் போட்டியில்

## யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் ரி.அபிநாத் முதலிடம்

யாழ்ப்பாணம்,ஜூன்2

வடக்கு மாகாணத் தமிழ்மொழித் தினப்போட்டியில் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாண வன் ரி.அபிநாத் பேச்சுத்திறன் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

ஐந்தாம் தரத்தில் கல்வி பயிலும் அபிநாத்தைப் பாடசாலை சமூகத்தினர் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் வே. ஞானகாந்தன் ரி.அபிநாத்துக்கு பாராட்டுப் பத்திரத்தை வழங்கிக் கௌரவித்தார். (50-224)






## மீளக்குடியமர்ந்தவர்களின் தொழில் திறமை தரவு சேகரிப்புப் பணி பிரதேச செயலங்களில் ஆரம்பம்

நாவற்குழி,ஜூன் 2

மீளக்குடியேறிய மக்களின் தொழில் ரீதியான திறமைகளை அளவிடும் தரவு சேகரிப்புப் பணிகள் தற்போது பிரதேச செயலக ரீதியாக நடைபெறுகின்றன.

கிராம அலுவலர்கள் பிரதேச செயலருக்கு இத்தரவுகளை அறிக்கையிடும் பணியை மேற்கொண்டுள்ளனர்.

மீளக்குடியேறியோர் தொழில் திறமைகள் அடிப்படையில் தனித்தனியாக வகைப்படுத்தப்படுகின்றனர்.

இவர்களுக்கு எதிர்காலத்தில் பொருத்தமான தொழில்வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்குடன் இத்தகவல்கள் திரட்டப்படுவதாக அறியவருகின்றது. (1-121)

## 175 குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகள்

கோப்பாய்,ஜூன்2

வளலாய், இடைக்காடு பிரதேசத்தில் நோர்வே அகதிகள் பேரவையினால் இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்களில் 175 குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-72)

## மணிப்புரி, உதயபுரம் பகுதிகளில் வெடிபொருள் அபாயம்

கொழும்புத்துறை,ஜூன்2

மணிப்புரி, உதயபுரம் பகுதிகளில் தமது காணிகளைச் சுத்தம் செய்துவரும் மக்கள் அப்பகுதிகளில் மிதிவெடி அபாயம் இருக்கலாமென அச்சம் தெரிவிக்கின்றனர்.

சில காணிகளில் உருக்குலைந்த நிலையில் மிதிவெடி மற்றும் வெடிபொருள்களின் பாகங்கள் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

சுமார் 15 வருடங்களாக போர்ப் பகுதியாக இருந்த இப்பிரதேசம் முறையாக மிதிவெடிப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்று கூறப்படுகின்றது. (50-135)

## உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகளின் உரிமையாளர்களை பதிவு செய்யக் கோரிக்கை

கோப்பாய்,ஜூன்2

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அடங்கும் பத்தமேனி, தம்பாலை, கதிரிப்பாய், இடைக்காடு, வளலாய், அச்சுவேலி மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் வருகின்ற காணிச் சொந்தக்காரர்கள் அதன் விவரங்களை தங்களின் கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலருக்குத் தெரியப்படுத்துமாறு பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் இ. கிருஷ்ணராசன் அறிவித்துள்ளார். (50-72)



ஐ.தே.கவின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு அராலி வாழ் மக்கள் ஆகாய குளம் விநாயகர் ஆலயத்தில் அளித்த வரவேற்பின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவதையும் பதிலுரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## சந்தைவாய்ப்பு அதிகரித்துள்ளதால் பொருள்களின் தரத்தைப் பேணுவதில் அக்கறை காட்டவேண்டும்

### யாழ்.அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஜூன் 2

உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான சந்தை வாய்ப்புக்கள் அதிகரித்துள்ள இன்றைய சூழலில் இந்த உற்பத்தியாளர்கள் தமது பொருள்களின் தரத்தைப் பேணுவதில் அக்கறை காட்டவேண்டும்.

இவ் வாறு தெரிவித்துள்ளார் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ்.

யாழ்.மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட 'உள்ளூர் உற்பத்தியால் உயர்வோம்' என்ற கருப்பொருளில் வடமாகாண பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்வில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் உரையாற்றும்போதே யாழ். அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் 'உள்ளூர் உற்பத்தியால் உயர்வோம்' என்ற இக்கண்காட்சி வடமாகாணப் பிரதேசங்களில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களுக்குச் சிறந்த களமாக அமைந்துள்ளது.

அதேவேளை, தற்போது ஏ-9 வீதி திறக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துசெல்லும் மக்களின் தொகை அதிகரித்துள்ளது. இதனால் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான சந்தைவாய்ப்பு அதிகரித்துள்ளது.

எனவே இச்சந்தர்ப்பதைப் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது பொருள்களின் உற்பத்தியை அதிகரித்துக்கொள்ள வேண்டும்.

அதேவேளை தமது உற்பத்திப் பொருள்களின் தரத்தை நல்லமுறையில் பேணிக் கொள்வதும் அவசியமாகும். - என்றார்.

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலக்சுமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண பிரதம செயலாளர் ஏ.சிவசுவாமி, யாழ். மாநகர மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் வெற்றிபெற்ற உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் விருந்தினர்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

அத்துடன் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (1-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
06.09.1965

இறப்பு
16.05.2009

### அமரர் வைத்திலிங்கம் தங்கவேல்

கடந்த 16.05.2009 அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் வைத்திலிங்கம் தங்கவேல் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நாளைமறுதினம் (04.06.2010) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்த ருணம் தாங்கள் அனைவரும் வருகைதந்து அன்று நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

முகவரி:
4ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

(99001)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியில் விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர்
திருமதி ச.மலர்விழி அவர்களின் அன்புத் தந்தை

### தம்பிப்பிள்ளை ஸ்ரீ சண்முகன்

அவர்களின் மறைவினால் கவலையுறுவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர்
பா.கஜேந்திரன் அவர்களின்
அன்புத் தந்தை

### க.பாலசுப்பிரமணியம்

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்**

## மரண அறிவித்தல்

### நடனசபாபதி அருந்தவராஜா

நடனசபாபதி அருந்தவராஜா 29.05.2010 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடனசபாபதி கண்மணி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - நாகம்மா தம்பதியினரின் மருமகனும், சகுந்தலா தேவியின் அன்புக் கணவரும், தனுஜா, தர்சனா, கஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராணி, கோகிலராணி, நித்தியராஜா, உதயராஜா, விக்கினராஜா ஆகியோரின் சகோதரனும், மனோகரன், தெட்சணாமூர்த்தி, பவராஜேஸ்வரி, யோகரஞ்சினி, இராஜேஸ்வரி, நாகராஜா, நடேசபிள்ளை, வன்னியசிங்கம், மகேஸ்வரன், நகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2010) ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரவணை கிழக்கு,
சரவணை.
(சி/567895)
004923896196 (ஜேர்மனி)
0773822680

தகவல்:
ஜெயராணி மனோகரன்.

# தனுன திலகரட்னவை நீதிமன்றில் ஆஜராகுமாறு துண்டுப் பிரசுரம்

கொழும்பு, ஜூன் 01

ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரட்னவை இந்த மாதம் 30ஆம் திகதி காலை 9மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கோரி துண்டுப்பிரசுரங்களை ஒட்டுமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இது தொடர்பிலான துண்டுப்பிரசுரங்களை நீதிமன்ற வளாகம், பொது இடங்கள் மற்றும் அவரது வீட்டுக்கு அருகில் ஒட்டுமாறும் கொழும்புகோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தனுன திலகரட்னவை சரணடையுமாறு 30 நாள்கள் கால அவகாசம் ஏற்கனவே நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் இணைந்து தனுன திலகரட்ன ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில், அவரைக் கைது செய்யுமாறு கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி கொழும்பு நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் அவர் தொடர்ந்து தலைமறைவாக இருந்து வருகிறார். (சி)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 ஆம் ஆண்டு பிறந்த கார்த்திகை நட்சத்திரம், செவ்வாய்க்குற்ற மற்ற, கிரகபாவம் 73 உடைய பட்டதாரி ஆசிரியைக்கு, பெற்றோர் பட்டதாரி தொழில் புரியும் மணமகனை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புக்கு:
0213218452, 0774661915

## பொறியியல் மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 2

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பொறியியல் துறைக்கு தம்மைப் பதிவு செய்த மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக் கோழி உடன் விற் பனைக்குண்டு.
தொடர்பு: 0214904267

## ஆங்கில மொழியில் தரமான மூன்று நூல்கள்

Three Guide Books to better Your Writing Skills

ஆக்கியோன்: த.நடராஞ்சாட்சரம்

01. Beginnings of Writing Composition for Grades Six to Nine
02. Writing Letters in English
03. 165 Model Essays

யாழ்.நகர் முன்னணி புத்தகசாலைகள் அனைத்திலும் கிடைக்கும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் அதிபர்
திருமதி

### விஜயலட்சுமி சுகுமாரன்

(B.Ed., S.L.P.S - I, S.L.E.A.S. - III)

அவர்கள் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றமையையிட்டு பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்

கல்லூரிச் சமூகம்

வதிரி,
கரவெட்டி.

**யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.**

(சி/568063)

## வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட கொத்தணிகளுக்கான நெல்சிப் திட்ட கலந்துரையாடல்

வடக்கு - கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மக்கள் பங்குபற்றலுடன் அபிவிருத்தித் திட்டங்களை இனங்காண்பதற்கும், முன்னுரிமைப் பட்டியலைத் தயாரிப்பதற்கு வசதியாக கொத்தணி ரீதியான கலந் துரையாடல் வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் தலைமையின் கீழ் நடை பெறவுள்ளது.

மேற்படி கொத்தணிகளுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளின் கீழ் உள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், பாடசாலைப் பிரதிநிதிகள், சமூகசேவையாளர்கள், கல்வியாளர்கள், நலன்விரும்பிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோரை குறித்த கலந்துரையாடலில் கலந்து பிரதேச திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்து ஒத்துழைக்குமாறு சபையின் செயலாளர் கேட்டுக்கொள்கின்றார்.

கலந்துரையாடல் நடைபெறும் விபரம்.

| இல | கொத்தணி | உள்ளடங்கும் கிராம அலுவலர் பிரிவுகள். | நடைபெறும் திகதி | நடைபெறும் காலம். | நடைபெறும் இடம். |
|---|---|---|---|---|---|
| 01 | நீர்வேலி | J/268,J/269,J/270,J/271,J/272, J/273 | 04.06.2010 வெள்ளிக்கிழமை | மாலை 02.30 | நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி |
| 02 | அச்சுவேலி | J/281,J/282,J/283,J/284,J/285, J/286,J/287 | 05.06.2010 சனிக்கிழமை | காலை 09.30 | அச்சுவேலி மத்திய கல்லூரி |
| 03 | புத்தூர் | J/273,J/274,J/275,J/276,J/277, J/278,J/280 | 05.06.2010 சனிக்கிழமை | மாலை 02.30 | புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி |
| 04 | உரும்பிராய் | J/263,J/264,J/265,J/266,J/267. | 06.06.2010 ஞாயிற்றுக்கிழமை | காலை 09.30 | உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| 05 | கோப்பாய். | J/257,J/258,J/259,J/260,J/261, J/262. | 06.06.2010 ஞாயிற்றுக்கிழமை | மாலை 02.30 | கோப்பாய் நாவலர் தமிழ் கலவன் பாடசாலை |

செயலாளர்,
வலி.கிழக்குப் பிரதேச சபை,
புத்தூர்.

(568057)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
18.08.1940



உதிர்வு:
24.04.2009

அமரர்
**கணபதிப்பிள்ளை சுந்தரமூர்த்தி**

மலர்வு:
06.06.1944



உதிர்வு:
14 . 06 . 2009

திதி:- 02.06.2010

திருமதி
**சுந்தரமூர்த்தி விஜயலட்சுமி**

ஒளி விளக்காயிருந்து எமக்கு
வழிகாட்டிய அன்பின்-தெய்வங்களே!
இளம் பொழுதில் எம்மைவிட்டு பிரிந்ததேனோ
அன்புடனே எம்மை அரவணைத்து அவனியிலே வாழவைத்தீர்கள்
தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் என்றும்
எம் நெஞ்சங்களில் நீங்காமல் நிறைந்துள்ளீர்கள்.

என்றும் தங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (99005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புக்கு வெளியே முதல்முறையாக யாழ்ப்பாணத்தில் ஜேர்மன் வார நிகழ்வுகள்

## யாழ்.மக்கள் மீதான அக்கறையின் வெளிப்பாடு இது என்கிறார் தூதரக அதிகாரி



யாழ்ப்பாணம், ஜூன் 2

கொழும்புக்கு வெளியே நாட்டிலேயே முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் ஜேர்மன் வாரம் கொண்டாடப்படவிருக்கின்றது. இது யாழ்ப்பாண மக்கள் மீதான ஜேர்மன் நாட்டின் அக்கறைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும் என இலங்கைக்கான ஜேர்மன் தூதரக முதலாவது செயலாளர் குயிடோ பாமன் தெரி வித்தார்.

இந்த மாதம் 14ஆம் திகதியிலிருந்து 18 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படவிருக்கும் ஜேர்மன் வாரம் தொடர்பான பத்திரிகையாளர் மாநாடு யாழ்ப்பாணம் கோயில் வீதியிலுள்ள ஜி.ரி.இசற். விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றபோதே ஜேர்மன் தூதரக முதலாவது செயலாளரான குயிடோ பாமன் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்ப்பாணம் மிகவும் அழகாகக் காட்சியளிக்கின்றது. இந்த மக்கள் வருடக் கணக்காக நீடித்த யுத்தம் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

தற்போது ஓரளவு அவர்கள் சுதந்திரமாக இருக்கக் கூடிய நிலை காணப்படுகின்றது. யாழ்ப்பாண மக்கள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள் என்பதை நானறிவேன். மாணவர்களுக்கு சிறப்பான கல்வியைப் புகட்டக் கூடிய தரமான பாடசாலைகளும் இங்கே காணப்படுகின்றன. இதைவிட ஜேர்மன் நாட்டுக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே இன்னுமொரு நெருங்கிய தொடர்பும் காணப்படுகின்றது. உதைபந்தாட்டத்தை ஜேர்மன் மக்கள் அதிகம் நேசிக்கின்றனர். இதைப் போலவே யாழ்ப்பாண மக்களும் உதைபந்தாட்டத்தை அதிகம் விரும்புவதாக அறிகிறேன். இந்த ஜேர்மன் வாரம் சிறப்பாக அமைய வேண்டுமானால் அதிக மக்கள் வருகை தந்து சிறப்பிக்க வேண்டும். இதற்காக யாழ்ப்பாண ஊடகங்கள் சிறந்த முறையில் தமது பங்களிப்பை நல்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்-என்றார்.

ஜேர்மன் வார நிகழ்ச்சிகள் 14 ஆம் திகதி மாலை 5 மணியளவில் யாழ். பொது நூலக மண்டபத்தில் ஆரம்பித்துவைக்கப் படவிருக்கின்றன. இதில் அழைக்கப்பட்ட விருந்தினர்கள் மட்டும் கலந்துகொள்வர்.

15 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையான நிகழ்ச்சிகள் யாவும் யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள கலைத்தூது கலையகத்தின் வளாகத்தில் நடைபெறும். 15 ஆம் திகதி மாலை 5 மணிக்கு தமிழ் மொழியிலான அரங்க நிகழ்வு நடைபெறும். 16 ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஜேர்மனியில் கல்வி கற்றல் என்னும் தலைப்பில் 'டாட்' நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதியான ஹெய்டி ஸ்ரெயினர் உரையாற்றுவார். அதேதினம் மாலை 5 மணிக்கு ஜேர்மன் மொழித் திரைப் படம் திரையிடப்படும். 17 ஆம் திகதி மாலை 5 மணி, 18 ஆம் திகதி பிற்பகல் 2.30 ஆகிய நேரங்களிலும் ஜேர்மன் மொழியிலான திரைப்படங்கள் திரையிடப்படும். 18 ஆம் திகதி பிற்பகல் 4.45 மணிக்கு தென்னாபிரிக்காவில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் ஜேர்மன் அணிக்கும் சேர்பிய அணிக்கும் இடையிலான போட்டி ஆறு மீற்றர் நீளமான திரையில் ஒளிபரப்பப்படும். நிகழ்ச்சிகளுக்கான கட்டணங்கள் யாவும் இலவசம் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## எழுத்துப் பிழைகளுடன் வீதிகளின் பெயர்ப்பலகைகள்

கொழும்புத்துறை,ஜூன் 2

யாழ்.மாநகரப் பகுதி வீதிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வீதிப் பெயர்ப் பலகைகளில் பல எழுத்துப் பிழைகளும், கருத்து மாற்றமும் இடம்பெற்றுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குருநகர்ப் பகுதியில் புனித கார்மேல் மாதா ஆலயத்தைக் குறிக்கும் மவுண்ட் கார்மேல் வீதி 'மவுண் கானல் ரோட்' என்றவாறு கருத்துப் பிழைபட குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை - நாவலர் வீதியில் கஸ்தூரியார் வீதிக்கு 'கஸ்துரியார்' வீதி எனவும், இராசாவின் தோட்டம் வீதிக்கு ராசவின் தோட்டம் வீதி எனவும் "தமிழ் கொலை" இடம் பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ்ப் பகுதிகளில் இவ்வாறு தமிழ் எழுத்துப் பிழைகளுடன் வீதிக் குறியீட்டு பெயர்ப்பலகைகள் நிறுவப்பட்டமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (50 - 135)



சுமார் 15 அடி நீளம் கொண்ட திமிங்கிலம் ஒன்று இறந்த நிலையில் கடந்த வாரம் நயினாதீவு தெற்கு வெள்ளை மண் கடற்கரையில் கரையொதுங்கியது. பெரும் எண்ணிக்கையான மக்கள் இதனைப் பார்வையிட்டனர். அந்தத் திமிங்கிலத்தையே படத்தில் காண்கிறீர்கள். (படம்: லக்ஸ்மன்)

## வாராந்த இசை நிகழ்வு

வடமராட்சி,ஜூன்2

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பிரதி வெள்ளி தோறும் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கலாசார மன்றம் வழங்கும் இசை நிகழ்வு இடம்பெறும். (50 - 236)




# யாழ்.முனீஸ்வரன் வீதியில் நடைபாதைக் கடைத் தொகுதி

## மாநகர சபை அமைக்கிறது



யாழ்ப்பாணம்,ஜூன் 2

யாழ்.மாநகரசபை முனீஸ்வரன் வீதியில் நடைபாதைக் கடை தொகுதி ஒன்றை அமைக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

இதற்கெனத் தகரங்களைக் கொண்டு பெரிய அளவிலான கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

முனீஸ்வரன் வீதியில் புல்லுக் குளத்துக்கு முன்பாக அமைக்கப் பட்டு வரும் இந்த கடைத் தொகுதியை விரைவில் நடைபாதை வியாபாரிகளிடம் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நடைபாதை வியாபாரத்திற்கென முன்னர் ஒதுக்கப்பட்ட இடத்திலேயே இந்த கடைத் தொகுதி மீண்டும் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த இடத்தில் முன்னர் அமைக்கப்பட்ட கடைத் தொகுதியின் கூரைத் தகரங்கள், இரும்புக் குழாய்கள் போன்றவற்றை விசமிகள் சிலர் களவாகப் பிடிங்கிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (50-224)

# 'லைலா' புயலினால் பாதிக்கப்பட்டோரின் விவரங்களை யாழ்.செயலகம் திரட்டுகிறது

யாழ்ப்பாணம்,ஜூன் 2

அண்மையில் இடம்பெற்ற "லைலா" புயலினால் பாதிக்கப்பட்டோரின் விவரங்கள் பிரதேச செயலக ரீதியாகத் திரட்டப்படுகின்றன.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் இத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குடாநாட்டில் அண்மையில் இடம் பெற்ற "லைலா" புயல் காற்றினால் பாதிப்படைந்தவர்களின் விவரங்கள் பிரதேச செயலக ரீதியாக அந்தந்தக் கிராம உத்தியோகத்தர்களினால் திரட்டப்படுகின்றன.

கிராம உத்தியோகத்தர்களால் திரட்டப்படுகின்ற விவரங்கள் யாவும் பிரதேச செயலர்களால் மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

அவ்வாறு விவரங்கள் கிடைக்கப் பெற்றதும் பாதிக்கப்பட்டோருக்கு அவர்களின் பாதிப்புக்கேற்ற வகையில் அனர்த்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

'லைலா' புயலினால் பாதிக்கப்பட்டோர் விவரங்களை திரட்டுவதற்கான விண்ணப்பங்கள் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன- என்றார். (50-9)

# பனம் விதைகள் நடும் திட்டம் இவ்வாண்டிலும் முன்னெடுக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 2

பனை அபிவிருத்திச் சபை இவ்வாண்டிலும் பனம் விதைகளை நடுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த ஆண்டில் நடப்பட்ட பனம் விதைகளைப் போன்று இவ்வாண்டிலும் இந்தத் திட்டத்தை குடாநாடு முழுவதும் அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த காலப் போரினால் குடாநாட்டில் பெரும் எண்ணிக்கையான பனை மரங்கள் அழிக்கப்பட்டன. இதனை ஈடு செய்யும் வகையில் இந்த ஆண்டிலும் பனம் விதைகளை நடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (50-224)



வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண மாவட்ட கல்வி வலயங்களுக்கு இடையேயான தமிழ் மொழித் தினப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழிலகள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைத்துச் செல்லப்படுவதை முதலாவது படத்திலும். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அ[illegible]றுவதையும் பாடசாலை மாணவிகள் தமிழ்த்தாய் வாழ்த்து இசைப்பதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு ஊசி போடப்பட்ட No 1 புறொயிலர் குஞ்சு 07.06.2010இல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். (வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும்.) தொடர்பு : நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே.: 021 222 6944 (98776)




## உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 651 திகதி 31-05-2010

வெற்றி எண்கள்

**07 10 19 28 F** (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 20,888,590/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 20,888,590/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 18 | 2,000/= | 36,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 373 | 1,000/= | 373,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 596 | 1,000/= | 596,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14636 | 60/= | 878,160/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6945 | 40/= | 277,800/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 173854 | 20/= | 3,477,080/= |
| | | மொத்தம் | ரூ. 6,438,040/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 600072985-0-24 |
| அம்பாந்தோட்டை | 600069413-0-47 |
| கொழும்பு | 600071766-0-43 |
| நுவரேலியா | 600064276-0-06 |
| காலி | 600071994-0-03 |
| திருகோணமலை | 600068231-0-14 |
| மொணராகலை | 600063192-0-26 |
| களுத்துறை | 600074592-0-46 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,838,040/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 21,358,810/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2010 ஜூன் 03 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333546/7

## பழைமை வாய்ந்த ஆலமரம் வெட்டப்படுகின்றது

யாழ்ப்பாணம், ஜூன் 2

கோப்பாய் பூதர்மடம் பகுதியில் உள்ள 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆலமரம் ஒன்று வெட்டப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை வீதியில் பூதர் மடத்திற்கு முன்பாகவுள்ள 100 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த இந்த ஆலமரத்தை வெட்டும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பருத்தித்துறை வீதி அகலிப்புக்கு இடையூறாக இந்த மரம் காணப்படுவதாலேயே அது வெட்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(50-224)

## வீடு விற்பனைக்கு

சமுர்த்தி லேன், மானிப்பாய் மேற்கு மானிப்பாயில் அமைந்துள்ள 6 பரப்பு மற்றும் 2½ பரப்புடன் கூடிய இரண்டு பெரிய வீடுகள் கிணற்றுடன் கூடிய சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு.



தொடர்புகளுக்கு
077 6789228
ராஜா - கொழும்பு

## இ.போ.சபை (யாழ்) நடத்துநரை வாழ்த்துகின்றோம்

பிரான்சிஸ்கா ஞானசீலி ஆகிய நான் 27.05.2010 யாழ்ப்பாணத்திலிருந்து சென்.சாள்ஸ் பாடசாலைக்கு இல. NA - 4991 பேருந்தில் பயணித்த போது எனது 3½ பவுண் தங்கச் சங்கிலி பேருந்தில் தவறவிடப்பட்டது. அதனை இ.போ.சபை நடந்துநர் வ.வாமதேவன் என்பவர் கண்டெடுத்து இ.போ. சபை தலைமைக் காரியாலயத்தில் ஒப்படைத்து எனது தங்கச் சங்கிலி எனக்கு மீளவும் கிடைப்பதற்கு உதவியாகவிருந்த குறித்த காப்பாளருக்கும் இ.போ.சபை உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைவும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கூழாவடி, ஆனைக்கோட்டை.
திருமதி சின்னத்துரை பிரான்சிஸ்கா ஞானசீலி. (98990)

## தேவை

1. Account - Clerk
2. Nurse (Lab)
3. M.L.T. or Trained M.L.T.
4. தாதிப் பயிற்சி பெற விரும்புவோர்
5. ஆங்கில மருந்தில் அனுபவம் உள்ளவர்கள்

03.06.2010 பிற்பகல் 3 மணிக்கு நேரில் வரவும்.

**சம்பந்தன் மொடோன் கிளினிக்**
இல.8, இராமையா செட்டியார் வீதி,
நாதன் தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம்.
021 222 7259 (98988)




## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் நருசனன்

புங்குடுதீவு, 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சசிதரன் சரவணை கிழக்கு, வேலணையைச் சேர்ந்த சைல்ஜா தம்பதிகளின் செல்வப் புதல்வன் நருசனன் தனது முதலாவது பிறந்த நாளை சரவணையிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா மற்றும் அப்பம்மா, அம்மப்பா அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அன்ரா, மாமாமார், அத்தைமார், அக்காமார், அண்ணன், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் வண்ணை வீரமாகாளியம்மன் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:
சரவணை கிழக்கு, வேலணை. (சி-568043)
திரு.திருமதி சசிதரன் சைல்ஜா தம்பதிகள்
தொ.பே.இல: 0215682430, 0778445137.

## பிள்ளையார் இன் "A" தரம் உல்லாசப் பயணிகள் தங்குமிடம் (PILLAYAR INN 'A' GRADE HOTEL Approved by the Ceylon Tourist Board) GARDEN RESTAURANT

வெளி நாட்டினர், உள் நாட்டினர்க்கு ஏற்ற அனைத்து வசதிகளுடன் யாழ் நகரில் உல்லாசப் பயணிகளுக்கு ஒரு சுகமான அனுபவம். இந்திய வல்லுநரால் நாவுக்கு ருசியான சாப்பாடுகள் தயாரித்து வழங்கப்படும். ஆகக் குறைந்தது 1 மணித்தியாலத்துக்கு முன் ஓடர் செய்து விட்டு வரவும்.

24 குளிரூட்டப்பட்ட அறைகளுடன் இணைந்த குளியலறைகள் (Attached Baths) 200 பேர் வரை அமரக்கூடிய அனைத்து வைபவங்களுக்கும் ஏற்ற வகையில் குளிரூட்டப்பட்ட மண்டபம் இருக்கை வசதிகளுடன் விசாலமான வாகன தரிப்பிடம் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுடன் கூடிய புல்வெளிகள், தரமான கொக்ரெயில்ஸ் (Cocktails and Chilled Beer) சுவையான உணவுவகைகள் இவையாவும் வழங்கப்படும். மதுசாலையில் கொக்ரெயில்ஸ், பியர் முதலியன அனுபவம் வாய்ந்த வல்லுநர்களால் வழங்கப்படும். மதுசாலை முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரையும், மீண்டும் மாலை 5 மணிதொடக்கம் இரவு 8 மணிவரையும் திறந் திருக்கும். தயவு செய்து மதுசாலை நேரத்தைக் கவனித்து வரவும்.

எமது அன்பான வாடிக்கையாளர்கள் ஒரு முறை விஜயம் செய்து எமது சேவை களின் தரத்தை அறியலாம்.

இவைகளெல்லாவற்றிற்கும் நாடவேண்டிய இடம்.

PILLAYAR INN
31, MANIPAY ROAD,
JAFFNA.
Tel-021-222-2829
Fax-021-222-4449
(98989) E-Mail- Pillaiyarinn@gmail.Com.




2 ஆம் ஆண்டு

## திருமண வாழ்த்து

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை வதிவிடமாகவும் கொண்ட
**திரு.திருமதி காண்டீபன்** தம்பதிகள்
இணைபிரியா வாழ்வின் இரண்டாம் திருமண
அகவையை கோலாகலமாகக்
கொண்டாடும் இவர்கள் இல்லற
வாழ்வில் இனிதே இணைந்து நல்லற
மாற்றி நன்றே வாழவும்
சான்றோர் போற்றவும்
மற்றோர் வாழ்த்தவும்
வாழ்வியற் சிறப்புக்கள்
பல பெற்று வாழ்நாளில் வாரி
வழங்கிடவும் சேய்கள்
சிலவற்றுடன் சேர்ந்திங்கு
காய்கள் கனிகளாகி காண்போர்
மகிழ்ந்திட பார்மேல் பாரிபோல
பண்புடன் பாங்காய்
வாழ்ந்திடவும்
ஆலமரம் போல
வாழ்வாங்கு வாழ்க என
ஆங்காங்கு வாழ்ந்து
வாழ்த்துபவர்கள்:

லண்டன் வாழ் ஆறுமுகம்
ஜீவமுரளியும் நண்பர்களும்.



## யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை
## அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான
## மஹோற்சவ விஞ்ஞாபனம் – 2010

### விசேட உற்சவங்கள்

| | | | |
|---|---|---|---|
| ✱ வைகாசி | 18 | 01.06.2010 | செவ்வாய்க்கிழமை பூர்வாங்கக் கிரியைகள் |
| ✱ வைகாசி | 19 | 02.06.2010 | புதன்கிழமை துவஜாரோகணம் காலை 8.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை |
| ✱ வைகாசி | 24 | 07.06.2010 | திங்கட்கிழமை விநாயகர் தீர்த்தம் |
| ✱ வைகாசி | 28 | 11.06.2010 | வெள்ளிக்கிழமை தொட்டித்திருவிழா |
| ✱ ஆனி | 01 | 15.06.2010 | செவ்வாய்க்கிழமை முருகப்பெருமான் தீர்த்தம் |
| ✱ ஆனி | 03 | 17.06.2010 | வியாழக்கிழமை (பூரத்திருவிழா) புஷ்பரதம் |
| ✱ ஆனி | 05 | 19.06.2010 | சனிக்கிழமை மஞ்சத் திருவிழா |
| ✱ ஆனி | 08 | 22.06.2010 | செவ்வாய்க்கிழமை காலை சந்தான கோபாலர் உற்சவம் - மாலை கைலாச வாகனம் |
| ✱ ஆனி | 09 | 23.06.2010 | புதன்கிழமை காலை வேட்டைத்திருவிழா மாலை குதிரைவாகனத்திருவிழா |
| ✱ ஆனி | 10 | 24.06.2010 | வியாழக்கிழமை சப்பறத்திருவிழா |
| ✱ ஆனி | 11 | 25.06.2010 | வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா |
| ✱ ஆனி | 12 | 26.06.2010 | சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா காலை துவஜாவரோகணம் மாலை |
| ✱ ஆனி | 13 | 27.06.2010 | ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழா |
| ✱ ஆனி | 14 | 28.06.2010 | திங்கட்கிழமை தண்டிகைத் திருவிழா |
| ✱ ஆனி | 15 | 29.06.2010 | செவ்வாய்க்கிழமை வைரவர் சாந்தி |

**விசேட உற்சவங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் தினமும்**

**காலை உற்சவம்:**
காலை
7.30 மணிக்கு கும்ப பூஜை
8.00 மணிக்கு மூலஸ்தான பூஜை
8.15 மணிக்கு தம்ப பூஜை
9.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை

**மாலை உற்சவம்:**
மாலை
4.15 மணிக்கு கும்ப பூஜை
4.45 மணிக்கு மூலஸ்தான பூஜை
5.00 மணிக்கு தம்ப பூஜை
5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை

பிரதம மஹோற்சவகுரு
சிவாகம கிரியா சிரோன்மணி
[illegible]ானந்த சிவாச்சாரியார்.

தேவஸ்தான பிரதமகுருவும், ஆதீனகர்தாவும்
சிவாகமக் கிரியா திலகம் சிவஸ்ரீ சி.செல்வராசா குருக்கள்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் 12 கிராமங்களுக்கு இரண்டு மாதங்களுக்குள் மின் விநியோகம்

## மின் அத்தியட்சகர் குழு நேரில் ஆராய்வு

கிளிநொச்சி,ஜூன்2

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீள் குடியமர்ந்துள்ள பகுதிகளில் உள்ள 12 கிராமங்களுக்கு மின்வசதி செய்யப்படவுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்த மின் வசதி வழங்கப்படவிருக்கிறது.

மின்சார சபையின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் மின் அத்தியட்சகர் எஸ்.குகராஜ் தலைமையிலான குழு நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு வருகை தந்து, இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தது.

அடுத்த இரு மாதங்களுக்குள் 12 கிராமங்களுக்கும் மின்வசதி கிடைக்கக் கூடிய வகையில் துரிதமாக பணிகள் முன்னெடுக்கப்படும்.

கிளிநொச்சி மின் நிலையத்தில் இருந்து குறிப்பிட்ட கிராம மக்களுக்கு மின் வசதியைப் படிப்படியாக முன்னெடுக்க மின்சாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

முதற்கட்டமாக 12 கிராமங்களுக்கும் தொடர்ந்து ஏனைய பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மின்சாரசபை அதிகாரி தெரிவித்தார்.

ஜெயந்தி நகர், கணேசபுரம், திருநகர் வடக்கு, திருநகர் தெற்கு, உதயநகர் மேற்கு, உதயநகர் கிழக்கு, உருத்திரபுரம் கிழக்கு, மனையாளபுரம், 155 ஆம் கட்டை, பரந்தன், சேவியர் கடையடி, கனகபுரம் ஆகிய 12 கிராமங்களுக்கும் இருமாதங்களுக்குள்ளும் -

வட்டக்கச்சி, திருவையாறு ஆகிய பகுதிகளுக்கு 6 மாதங்களுக்குள்ளும் - மின்வசதி கிடைக்கும் என்று அவர் உதயனுக்கு தெரிவித்தார். (1-405)

# புவியியல் பாட செயலமர்வு இன்று முதல் திரேசாவில்

கிளிநொச்சி,ஜூன்02

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் புவியியல் பாடச் செயலமர்வு இன்று முதல் மூன்று தினங்கள் கிளிநொச்சி புனித திரேசா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் 2010 உயர்தர வகுப்பு ஆசிரியர்கள், மாணவர்களையும் சமூகமளிக்குமாறு கல்விப் பணிப்பாளர் எஸ்.குருகுலராஜா கேட்டுள்ளார். (1-145)




# நெடுந்தீவு முகிலனின் கவிதை நூல் மன்னாரில் வெளியிட்டு வைக்கப்பட்டது

மன்னார்,ஜூன்2

நெடுந்தீவு முகிலன் எழுதிய கவிதை நூல் 'சாடிகள் கேட்கும் விருட்சங்கள்' வெளியீட்டு விழா மன்னாரில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மன்னார் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் இலக்கிய ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மன்னார் தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற வைபவத்திற்கு தமிழ் சங்கத்தின் பொதுச் செயலாளர் கவிஞர் வி.எஸ். சிவகரன் தலைமை வகித்தார். மங்கள் விளக்கேற்றல், தமிழ்த் தாய் வாழ்த்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நூலாசிரியர் அறிமுகமும், வரவேற்புரையையும் நானாட்டான் ஜெகன் நிகழ்த்த, தொடக்கவுரையை எம்.ஏ.வினோராஜ் நிகழ்த்தினார். வணபிதா ஜெயராஜ் ஆசியுரை வழங்க திருமதி நந்தினி புண்ணியசிங்கம் வாழ்த்துரை வழங்கினார்.

சிறப்புரையை மன்னார் பிரதேச செயலர் திருமதி இஸ்டேன்லி-டி-மெல் ஆற்றினார். மன்னார் உதவி மாவட்டச் செயலாளர் பரமதாஸிடம் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். மன்னாரின் பிரபல தொழிலதிபர் வி.கே.அன்னலிங்கம், உதவி மாவட்டச் செயலாளர் பரமதாஸ் பிரதம அதிதியாக உரையாற்றினார். அதன் பின்னர் நூல் மதிப்பீட்டுரையை மன்னார் தமிழ் சங்கத் தலைவர் தமிழ்நேசன் அடிகளார் நிகழ்த்தினார். இறுதியில் நூலாசிரியர் முகிலன் ஏற்புரை நிகழ்த்தினார். (1-80)

## 30 வருடங்களின் பின்னர்

# திருக்கேதீஸ்வரத்தில் பஞ்சரதபவனி பாலாவித் தீர்த்தம் சிறப்புற நடந்தன


மன்னார்,ஜூன்2

பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வர ஆலயத்தில் பஞ்சரத பவனி உலாவும், பாலாவித் தீர்த்தமும் பல்லாயிரம் பக்த அடியார்கள் சூழ வெகு சிறப்பாக நடந்து முடிந்தது.

சுமார் 30 ஆண்டு யுத்தம் முடிவுற்ற பின்னர் முதன் முறையாக நடைபெற்ற இவ் ஆலயங்களுக்கு வடக்கு, கிழக்கு உட்பட நாட்டிலிருந்து பல்லாயிரக் கணக்கான இந்து பக்த அடியார்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சுமார் ஏழு கோடி ரூபா செலவில் முற்றிலும் புனரமைக்கப்பட்ட ஆலய வளாகம், அதன் சுற்றுவட்டம், பக்தர்கள் தங்கும் விடுதி, பாலாவித் தீர்த்தக்குளம் என்பவையும் இவ்வைபவத்திற்கு அணி சேர்த்தன.

பக்த அடியார்களில் அனேகமானோர் மண்டபங்களில் இரவு முழுதும் தங்கியிருந்து தங்களது மதக் கடமைகளில் ஈடுபட்டனர். (1-80)

போரினால் பாதிக்கப்பட்ட இடங்களில் சமீபத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. புதுக்குடியிருப்புப் பகுதியில் சேதமடைந்துள்ள கடைகளையும் துப்புரவுப் பணியில் ஈடுபடும் புல்டோசர் வாகனம் ஒன்றுக்குள் சிறுவர்கள் ஏறி விளையாடுவதையும் படங்களில் காணலாம்.

# கிளிநொச்சி மத்திய கல்லூரியைப் புனரமைக்க பழைய மாணவர்கள் முன்வந்துள்ளனர்

கிளிநொச்சி,ஜூன்2

வன்னியில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வரும் வேளையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் அபிவிருத்திக்கு பல்வேறு வழிகளில் உதவுவதற்கு கல்லூரியின் பழைய மாணவர்கள் முன்வந்துள்ளனர்.

கல்லூரி நூலகம், கல்வி அபிவிருத்தி, பௌதீகவளம் பேணுதல், ஊடகம் மற்றும் போட்டிகள் நடத்துவது எனப் பல்வேறு திட்டங்களை மேற்கொள்ள பழைய மாணவர்கள் முன்வந்துள்ளார்கள்.

இத்தகைய அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க புதிய நிர்வாகக் குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதில் கல்லூரியின் அதிபர் ந.சோதிநாதன் தலைவராகவும், கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி கே.ஜெயராஜ் உபதலைவராகவும், சு.லோகேஸ்வரன் செயலாளராகவும், மு.சதானந்தகுமார் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 5 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (1-9-405)

# சமுர்த்தித் திட்டச் செயற்பாடுகளை மன்னாரில் ஆரம்பிக்குமாறு கோரிக்கை

மன்னார்,ஜூன்02

மன்னார் மாவட்டத்தில் சமுர்த்திச் செயற்பாடுகளை உடன் ஆரம்பித்து 'வறுமையில் வாடும்' அம் மக்களுக்கு சுபீட்ச வாழ்வை ஏற்படுத்தும் படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1995 இல் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தித் திட்டம் 15 வருடங்களாக நாட்டின் சகல பகுதிகளும் அமுல்படுத்தப்பட்டுவரும் வகையில் மன்னார் மாவட்டம் மட்டும் ஓரங்கட்டி ஒதுக்கப்பட்டே வந்துள்ளது.

இதன் விளைவாக மன்னாரில் வாழ்ந்து வரும் வறிய மக்கள் எவ்வித முன்னேற்றமுமின்றி மென்மேலும் வறுமைக்கே தள்ளப்பட்டு வந்தனர். தற்போது இவர்களில் அனேகமானோர் சிறு தகரக் கொட்டில்களிலும் பாதுகாப்பற்ற வளவுகளிலுமே வாழ்ந்து வருகின்றனர்.

நாட்டின் கொடிய யுத்தம் முடிந்து ஒரு வருடமுமாகிவிட்டது. எனவே மேலும் தாமதிக்காமல் இம்மக்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகளை வழங்க ஆவன செய்யும்படி சமுர்த்தி அமைச்சருக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

இங்கு சமுர்த்தித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் மாதாந்தக் கொடுப்பனவுகள், திருமணம், பிரசவம்,மரண சகாய நிதி மற்றும் சமுர்த்தி வங்கிக் கடன்கள், சமுர்த்தி ஊழியர்கள், வங்கி ஊழியர்கள் எனப் பல்வேறு வழிகளிலும் வேலையற்ற இளைஞர் - யுவதிகளுக்கு மறு வாழ்வு கிட்டும் எனவும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.(1-80)

# மன்னாரில் போதைவஸ்து தடுப்பு தினம் அனுஷ்டிப்பு

மன்னார்,ஜூன்2

சர்வதேச போதைவஸ்து ஒழிப்பு தினம் நேற்றுமுன்தினம் மன்னாரில் நினைவு கூரப்பட்டது. இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கில் பொதுமக்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இவ்விழிப்புணர்வு தினத்தை மன்னார் உலக தரிசனம் நிறுவனத்தின் அனுசரணையில் மன்னார் போதை ஒழிப்பு நிறுவனமான 'கிராடோ' ஒழுங்கு செய்திருந்தது. 'கிராடோ' நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்பணி வின்ஸன் பற்றிக் இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

இந்நிகழ்வுகளில் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை, மன்னார் அரசாங்க அதிபர் அ.நீக்கிலஸ்பிள்ளை, மன்னார் மாவட்ட நீதிவான் யூட்சன் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர். (1-80)

# பள்ளிமுனையில் 3 கோடி ரூபா செலவில் நீர்த்தாங்கிக்கான அடிக்கல் நடப்பட்டது

மன்னார்,ஜூன்2

மன்னார் பள்ளிமுனையில் ரூபா 3 கோடி(30 மில்லியன்) செலவில் பாரிய நீர்த்தாங்கி அமைக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை அடிக்கல் நாட்டி வேலைத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.

வடக்கு மாகாண தேசியூ நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் உதவி பொது முகாமையாளர் எந்திரி தி.பாரதிதாசன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

225 மீற்றர் [illegible] கொண்ட பாரிய நீர்த்தாங்கியே இவ்வாறு விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் வவுனியா - மன்னார் மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், அமைச்சர்கள் ரிசாட் பதியுதீன், கலாநிதி சரத் அமுனுகம ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பள்ளிமுனை மக்களின் குடிதண்ணீர் தேவை தொடர்பான எண்ணக்கரு பத்திரம் அர[illegible] மேற்படி நிதி “நிக்கொட்” [illegible] ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை மன்னார் பகுதியில் குடிதண்ணீர் விஸ்தரிப்புக்கும் சுகாதாரம் மற்றும் கழிவு நீர் அகற்றல் திட்டத்தை முழுமையாக நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன 113 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கியூடாக பெற்றுள்ளார்.

மேற்படி இரண்டு பாரிய வேலைத் திட்டங்களும் ஒரே நேரத்தில் முன்னகர்த்தப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (1-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் வைகாசி மாதம் 20ஆம் நாள் (03.06.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணி முதல் நண்பகல் 12 மணிவரையுள்ள அவிட்ட நட்சத்திரமும் கும்ப லக்கினமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திரு.திருமதி இராசரத்தினம் தம்பதியரின் செல்வப் புதல்வன் பிரசாத் (தர்ஷன்) அவர்களுக்கும்



திரு.திருமதி தர்மு தம்பதியரின் ஏக புதல்வி நிரோஜா (நிரோ) அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு "தாவடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில்" திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

SRP PUMPS.
கே.கே.எஸ்.றோட்,
கோண்டாவில், தாவடி.
0214920048,
0776071929.

திரு.திருமதி செ.இராசரத்தினம் குடும்பத்தினர்
காளிகோயிலடி,
தாவடி வடக்கு.
கொக்குவில்.
0213002701,
0775380061.

(98964)

# தாவீது அடிகளின் நினைவு தின நிகழ்வு

நல்லூர்,ஜூன் 2


வணபிதா தாவீது அடிகளாரின் 29ஆவது நினைவு தினத்தையொட்டி நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் அருளாச்சிரமத்தில் காலை 6 மணிக்கு வண.பிரான்சிஸ் ஜெயம் அடிகளார் தலைமையில் திருப்பலிப்பூசைகள் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

வண.தாவீது அடிகளார் யாழ். பொது நூலகம் எரியூட்டப்பட்ட அதிர்ச்சியினால் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(50-111)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த 30ஆம் திகதி இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் வணிகமாணி பட்டம் பெற்ற எனது நண்பர்களான



க.ஆனந்தவேல் B.com



ஞா.செந்தமிழ்செல்வன் B.com

(98970)

ஆகியோரை வாழ்த்துவதுடன், மேலும் பல்லாண்டு காலம் பலகலையும் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அன்புடன் நண்பன் கான்டீபன் குடும்பம் (கனடா).

# கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 757

சீட்டிழுப்பு திகதி 31.05.2010

எழுத்து: Q

வெற்றி இலக்கங்கள்: 40 41 46 54

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 17,267,261.60 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000,000/= | 02 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 11 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 290 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 545 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 50/= | 13940 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 7891 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 197961 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 31198 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 10,940,820.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 17,267,261.60

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk

# துர்க்கா மணி மண்டபத்தில் வயலின் இசை நிகழ்வு

நல்லூர், ஜூன் 2

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு தமிழகம் அக்கரையைச் சேர்ந்த ருக்மணி சகோதரிகளின் வயலின் இசைக் கச்சேரி நடைபெறவுள்ளதாக செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார். (50-111)

# சிங்கள மொழிப் பயிற்சி வகுப்பு

கைதடி,ஜூன்2

வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் நடத்தப்படவுள்ள சிங்கள மொழிப் பயிற்சி வகுப்பு எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி எம். வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி வகுப்பு 108 மணித்தியாலயங்களைக் கொண்டதாகவும், சனி,ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களிலும் நடைபெறும். (204-288)

Global வழங்கும் கொம்ப்யூட்டர் பாடநெறிக்கான விசேட சிறப்புச் சலுகை.

* சகல பிரிவினருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.

- Diploma In Ms Office 2007
- Diploma In Desktop Publishing
- Diploma In Computer Applications
- Diploma In Web Page Design
- Junior Diploma In Computer Science
- Certificate In Photoshop CS3

விசேட சிறப்புச் சலுகை 50% கட்டணக் கழிவு
100% Practical

மல்டிமீடியா துறைக்கான புதிய பிரிவுகளும் குதுகலமாக ஆரம்பம்.
Pre Press Designing , Video & Audio Mixing

student visa,மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு உகந்த Canadian Certificate ஒன்றினை நீங்களும் பெற்றுக் கொள்வதற்கு உங்கள் Global உடன் இணைந்து கொள்ளுங்கள்...

Global Academy of Automations
[The Best It Education] Tel : 0113050111
#5 First Floor, New Market Building, Jaffna.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கணபதி முருகேசு
(ஆசிரியர்)

தோற்றம்: 30.06.1950
மறைவு: 14.06.2009

கல்விக்கு வித்திட்ட விளை நிலமே
கருணையைப் போற்றும் கண்ணியமே
பேதங்கள் ஏதுமின்றி பகுப்புகள் யாதுமின்றி
உள்ளத்து சுடர்களின் ஊக்குவிப்பே
அன்பாலே அரவணைத்து
அறிவாலே ஆக்கம் தந்த மாசற்ற மணி விளக்கே!

என்றும் நீங்கா நினைவுகளுடன்.....
பாடசாலைச் சமூகம்,
மு/வவுனிக்குளம், படிவம்-4, அ.த.க.பாடசாலை, திருநகர், மல்லாவி.

(98933)

# நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி அருளானந்தம் தமிழ்விழி (கோமா)

திதி: ஷஷ்டி (02.06.2010)



அன்னை மடியில்
09 * 07 * 1975

அம்பாள் திருவடியில்
15 * 05 * 2009

ஓராண்டென்ன
ஓராயிரம் ஆண்டுகளானாலும்
உன் நினைவு எம் நெஞ்சைவிட்டகலாது
உனை உச்சரிக்கும் உதடுகள்
உனக்காக ஏங்கும் உள்ளங்கள் உயிருருக....
நீர் அம்பாள் திருவடியில்
சென்று விட்டாய்– என்று
கை எடுத்து வணங்க கன்னங்கள்
நனைகிறதே
என்றுமே உன் திருவடியில்
கண்ணீர்ப் பூக்களைத் தூவி நிற்கும்.....

உன் அன்புக் கணவர்:
அருளானந்தம் (கண்ணன்),
பிள்ளைகள்: வேணுஷா,
மாமகள், அம்மா, அப்பா,
உன் உடன் பிறப்புகள்,
மைத்துனர்கள்.

தற்காலிக முகவரி:
உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.
தொ.பே.: 0214909432.

நிரந்தரமுகவரி:
3ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு.

வதிவிட முகவரி: அராலி மத்தி,
வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.

(98967)

உயர் கல்வி
Work & Study In UK துரித கதியில் வீசா பெறுவதற்கான ஆலோசனை மற்றும் Financial Sponsorship, Documentation Preparation
011 3042949

# விழி நீரில் உறவாடும் உயிரே...! உனது இரண்டாம் ஆண்டு நினைவில்

தோற்றம் 26 . 07 . 1977



மறைவு 02 . 06 . 2008

## அமரர் பற்றிக் டிவின்சன் (மில்ரன்)

அள்ளித் தந்தது வானம் எமக்கொரு மகனை
வாழும் வயதினில் கிள்ளி எடுத்தார்கள்
உயிர் நண்பர்கள் போல் உன்னுடன்
உறவாடி எதிரிகளாய் மாறி விட்டார்கள்
கலங்காதே நீ "வாள் எடுத்தவன் வாளால் மடிவான்"
என்பது இறைவனின் வாக்கு
அது நிறைவேறும். பரலோகத்தில் நீ இறைவனின்
அருகில் அமர்ந்திருப்பாய்.

இவரின் ஆன்மா சாந்தியடைய இன்று (02.06.2010) செவ்வாய்க்கிழமை காலை 6மணிக்கு மரியன்னை பேராலயம், குழந்தை யேசு ஆலயம், பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம் ஆகியவற்றில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். பூசை முடிந்ததும் வீட்டில் நடைபெறும் தேநீர் உபசாரத்திலும் பங்குகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

149, கஸ்தூரியார் வீதி... 149, கதிற்றல் லேன், யாழ்ப்பாணம்.

(98961)

இவரின் பிரிவால் துயருறும்: அம்மா, சகோதரர்கள், மருமக்கள், பெறாமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனப் பயிற்சி செய்பவர்களின் கவனத்துக்கு...

ஆர்.பிரியா
யோக போதனா ஆசிரியர்,
பிரிய யோகா பயிற்சி நிலையம்.

பகுதி - 5



இப்பயிற்சியினால் '' மனக்குறை '' எளிதில் நீங்குகின்றது.

இப்பயிற்சியினால் பெண்கள் தங்களுடைய மாதவிடாய் காலங்களில் ஏற்படும் பிரச்சினைகள், வலிகளைக் குறைக்க முடியும். அத்துடன் பிரசவ காலத்தில் ஏற்படும் வலியைக் குறைக்க முடிவதுடன் சுகப் பிரசவத்திற்கு வழி வகுக்கிறது.

பெண்கள் முதுமைக்காலத்திலும் பிராணாயாமம் , தியானம் யோகாசனப் பயிற்சிகள் செய்து ஆயுட்காலத்தைக் கூட்டலாம். மன அமைதியையும் இதனால் அதிகரிக்க முடிகின்றது. அதிக ஆற்றல் இதனால் கிடைக்கின்ற காரணத்தினால் முதுமைக் காலத்தையும் பயனுள்ள வழியில் செலவழிக்கலாம்.

### நினைவாற்றல் அதிகரித்தல்

மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற்றால் மட்டும் போதாது. அவ்வெற்றி தோல்வியின் பக்கத்தை உரசிக்கொண்டு இருக்கக் கூடாது, மாபெரும் வெற்றியாக அமைய வேண்டும். பலரும் வியந்து பாராட்டும் வண்ணம் இருத்தல் வேண்டும்.

தற்கால மாணவர்கள் நாவல், சிறுகதை, திரைப்படம், நாடகம் இவைகளைப் படித்து விட்டுத்தான் தங்கள் படிப்பை தொடங்குகின்றார்கள். இத்தனை பொழுதுபோக்குகளுக்கும் இடையில்தான் தங்கள் படிப்பை வெற்றிகரமாக முடிக்க வேண்டும். எனவே அவர்களுக்குக் கிடைக்கும் நேரம் குறைவு - ஒரு பாடத்தை - ஒரு வினாவை ஓரிரு முறைக்கு மேல் படிக்க இயலாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நல்ல நினைவாற்றல் இருப்பது மிக அவசியம். நினைவாற்றல் என்பது படித்த பாடத்தைப் படித்து முடித்தவுடன் அப்படியே ஒப்பிப்பது என்பது மட்டும்அல்ல. சில மாதங்கள் வரை கற்ற வினாக்கள் பசுமரத்து ஆணிபோல அப்படியே மூளையில் பதிந்திருப்பது அவசியம். பொதுவாக குறிப்பெடுத்ததில் ஒரு மாணவனது நினைவாற்றல் 40% என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள். ஒரு மாணவன் தொடர்ந்து 6 மாதகாலத்திற்கு மேல் இவ்யோகாசனப் பயிற்சி, பிராயாணாமம், தியானம் செய்தால் நினைவாற்றலின் அளவு 60% ஆக உயர்கின்றது. முறைப்படி இப்பயிற்சியை மேற்கொண்டு சிறந்த பலனைப் பெறுங்கள்.

''அவனுள் இருக்கும் நல்லதைத் தேடு''.

### சமுதாய மாற்றங்கள்

தனி மனிதனை சமுதாயத்திலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. தனி மனிதன் சிறப்பிற்கு ஏற்ப சமுதாயம் மாறுகின்றது. சமுதாயச் சிக்கல்கள் தனி மனிதனைப் பாதிக்கவும் செய்கின்றது. தனி மனிதன் மனம் என்றால் சமுதாயத்தை உடல் என்று சொல்லலாம். எனவே தனி மனிதனையும் சமுதாயத்தையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்று கூறலாம். யோகாசனம், பிராணாயாமம், தியானம் தனி மனித முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்துகின்றது. தனி மனித முன்னேற்றம் குடும்ப முன்னேற்றமாகவும் - குடும்ப முன்னேற்றம் ஒரு கிராம முன்னேற்றமாகவும் கிராம முன்னேற்றம் ஒரு நகர முன்னேற்றமாகவும் மாற்றம் அடைகின்றது.

ஒரு காந்தம் சக்தி வாய்ந்ததாக இருக்கின்றபோது அதனைச் சுற்றிலும் . இருக்கின்ற இரும்புத் துகள்களை தன்பால் இழுக்கின்றது. ஒரு தனி மனிதன் தன் பிரச்சினைகளைத் தீர்க்கின்றபோது சமுதாயப் பிரச்சினைகள் எளிதில் தீர்க்கின்றன. எனவே ஒரு தனி மனிதனது மனம்தான் சமுதாய மனமாக மாறுகின்றது என்று கூறலாம். ஒரு தனிமனிதனை மிகவும் பாதிக்கக் கூடியது குடிப்பழக்கம், சிகரெட் பிடிக்கின்ற பழக்கம், போதை மாத்திரைகள் உட்கொள்ளும் பழக்கம், ஏமாற்றுதல், கொள்ளை, தற்கொலை முயற்சி. இப்பழக்கங்கள் தொடர்ந்து இப்பயிற்சியை மேற்கொள்வதன்மூலம் மன மாற்றத்தை கொடுத்து வாழ்வில் முன்னேற வழி வகுக்கும்.

ஒரு தனி மனிதன் தன்னுடைய பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்போது - ஒரு தனி மனிதன் தன்னை திருத்திக் கொள்ளும்போது - ஒரு தனி மனிதன் தன்னுடைய முரண்பட்ட போக்குகளை அகற்றும்போது - ஒரு தனி மனிதன் தனது போராட்டங்களை நீக்கும்போது - ஒரு தனி மனிதன் எண்ணங்கள் பயன் உள்ள எண்ணங்களாக மாற்றும்போது - ஒரு நாட்டின் பிரச்சினைகள் தீர்ந்து நல்லாட்சியாக மாற்றப்படுகின்றது. எனவே மாறவேண்டியது ஆட்சி முறையல்ல மாற வேண்டியது தனி மனிதனது ''போக்குகள்'' தான். யோகாசனம், பிராணாயாமம், தியானம் தனி மனிதச் சிறப்பில் அதிக கவனம் செலுத்துகின்றது.

இரண்டு நண்பர்கள் சந்திக்கும்போது ஒருவர் கொடுத்தால்தான் ஒருவர் பெற முடியும். இருவரும் கொடுக்கவில்லையென்றால் ஒருவரும் பெற முடியாது. வளைந்து கொடுக்கின்ற போக்கு அதிகரிக்கின்ற போதுதான் விட்டுக் கொடுக்கின்ற மனப்பான்னை அதிகரிக்கும். வாழ்க்கையில் நாணல் மாதிரி வாழ வேண்டும். பனை மரம் மாதிரி வாழ கூடாது.


ஒரு பந்து சுவரில் எறிகின்ற பொழுது பந்து நம்மை நோக்கி மீண்டும் வருகின்றது. நாம் ஒருவரிடம் அன்பாக நடந்துகொள்கின்றபோதுதான் அவர் நம்மிடம் அன்பாக நடந்துகொள்வார். வாழ்க்கையை அங்குலம் அங்குலமாக முன்னேற்றிக் கொண்டிருப்பது அன்புதான். அன்பு நம் நடத்தையை பெரிதும் மாற்றி அமைக்கின்றது இப்பயிற்சியில் நம்முடைய உணர்வுகள் பண்படுகின்றபோது அன்பு பெருக்கெடுத்து நிற்கின்றது.

''அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு''

-வள்ளுவர்-

*(இன்னும் வளரும்)*

# குறையையும் நிறைவாக்கிக் கொள்ளல்



மனிதர்கள் குறைபாடு உடையவர்கள். பெரிய அறிவாளியாய் இருப்பார்; ஞாபக மறதி இருக்கும். சிறந்த பாடகராகப் புகழ்பெற்றிருப்பார்; யாரை நம்புவது? என்று தெரியாமல், ஏமாறும் இயல்பு கொண்டிருப்பார். நல்ல அழகராக இருப்பார்; தலை வழுக்கையாக இருக்கும். பெரிய தலைவராக இருப்பார்; மனைவி மதிக்கமாட்டார். இப்படி ஏதேனும் ஒரு குறைபாடு ஒவ்வொருவரிடமும் இருக்கும். ஆனால் அந்தக் குறைபாட்டைக்கூட நிறைவென்று காட்டும் சாதுரியம் இருந்தால் குறைபாடு பெரிதாகப் பாதிக்காதபடி வாழலாம்.

நெட்டை மனிதர் ஒருவரும், குட்டை மனிதர் ஒருவரும் சந்தித்துக் கொண்டனர். நெட்டையரைக் குட்டையர் கேலி செய்தார். ''இவ்வளவு நெட்டையா இருக்கியே வெட்கமா இல்லையா?'' '' இதிலென்ன வெட்கம்? மாடியில உலர்த்திய துணியைக் கீழ்வீட்டில் இருந்தபடியே, படியேறிப் போகாமல் எடுத்துவிடலாம். அது சரி, நீ இவ்வளவு குட்டையா இருக்கியே உனக்கு வெட்கமா இல்லையா?''

''இதில் வெட்கப்பட என்னய்யா இருக்கு? கீழே காசு விழுந்தா குனியாமலே எடுக்கலாம். உன்னால் முடியுமா? என்றார் திருவாளர் குட்டை. இவர்கள் தங்கள் குறையைக் கூற நிறையாகச் சொல்கிறார்கள்.

இது மிகவும் அவசியம். இல்லையென்றால், தன்னிடமுள்ள குறைபாட்டைப் பிறர் கேலி செய்வார்கள். தனக்கே தாழ்வுணர்ச்சி தோன்றும்.

ஒருமுறை டாக்டர். கலைஞர் அவர்களின் வழுக்கைத் தலை பற்றிய பேச்சு வந்தது. கலைஞரின் வழுக்கை முதுமையைக் காட்டுவதாச் சொன்னார்கள்.

கலைஞர் கவலைப்படவேயில்லை. சட்டென்று பதில் சொன்னார்.'' வழுக்கை என்பது முதுமையின் அடையாளம் அல்ல. இளமையின் அடையாளம். எப்படித் தெரியுமா? தேங்காய் பறிக்கும் போது, இளசா நாலுகாய் பறிச்சுப் போடுப்பா என்பார்கள். அவர் நாலு வ்ழுக்கையைப் போடுவார்.

ஆக, வழுக்கை என்பது இளமை. ஆகவே நான் வழுக்கையாய் இருக்கிறேன் என்றால் இளமையாய் இருக்கிறேன் என்று அர்த்தம்''

குறையை நிறையாகக் காணும் திறத்தால், முதுமையையே இளமையாக ஆக்கிவிட்டார்.

பார்வை இல்லாதவர், உலகத்தில் நடக்கும் அசிங்கங்களைப் பார்க்காமல் இருக்கவே, இறைவன் பார்வை கொடுக்கவில்லை என்று நினைத்தால் குறைபாட்டை எண்ணிக் கலங்காமல் இருக்கலாம்.

நீதிபதி முத்துசாமி ஐயர் முதுமையில் திருமணம் செய்து கொண்டார். ஏன் முதுமையில் திருமணம் புரிந்து கொண்டீர்கள் என்று கேட்டபோது;'' நல்ல மனைவியாக இருந்தால் இவ்வளவு நாள் தேடியதற்கு நல்லபலன் என்று மகிழலாம். மோசமான மனைவியாக இருந்தால், சரி சரி இன்னும் கொஞ்சநாள்தானே என்று ஆறுதல் பெறலாம்'' என்றார்.

*(சொன்னவர் : புலவர் இரா.சண்முகவடிவேல்)*

# சிறுவனின் துணிச்சலான பதில்



புகழ் பெற்ற அறிவியல் மேதைகளில் ஒருவர் ஐன்ஸ்டீன்.

அவர் ஒரு சமயம் அழுக்குத் தோற்றமுடைய ஒரு நீக்ரோ சிறுவனைச் சந்தித்தார். அவனிடம் நீ முகம் கழுவிக் கொண்டு வந்தால் உனக்கு 25 செண்ட் காசு தருகிறேன்'' என்றார்.

உடனே அந்த நீக்ரோ சிறுவன் முகம் கழுவிக் கொண்டு வந்து, ஐன்ஸ்டீனிடம் 25 செண்ட் காசை வாங்கிக் கொண்டான்.

ஐன்ஸ்டீன் அந்த நீக்ரோ சிறுவனிடம், இந்தக் காசை என்ன செய்யப் போகிறாய்? என்று கேட்டார்.

உடனே அந்தச் சிறுவன் துணிச்சலோடு, நீங்கள் உங்கள் தலைமுடியைச் சரியாக வெட்டிக் கொண்டு வந்தால் உங்களுக்குத் தருகிறேன்! என்றான்.

அறிஞர் ஐன்ஸ்டீன் அவர்களை அந்தச் சிறுவனின் பதில் அதிர்ச்சியடையச் செய்ததில் வியப்பொன்றும் இல்லை.

அவர் தம் வாழ்நாளில் ஒரு முறை கூட முடிவெட்டிக் கொண்டதில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?

# நல்லவர்களுடன் சேர்!



குருகுலத்தில் துறவி ஒருவர் மாணாக்கர்களுக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

''தீயவர்கள் சேர்க்கையால் நல்லவனும் தீயவன் ஆவான். நல்லவர்கள் சேர்க்கையால் தீயவனும் நல்லவன் ஆவான். அதனால் நாம் எப்பொழுதும் நல்லவர்கள் கூட்டத்தில்தான் இருக்க வேண்டும். சேர்க்கையின் வலிமை அப்படிப்பட்டது'' - என்றார்.

ஒரு மாணாக்கன் எழுந்து '' தீயவர்கள் கூட்டத்தில் நல்லவன் ஒருவன் சேர்ந்து அவர்கள் எல்லோரையும் நல்வழிக்குக் கொண்டுவர முயற்சி செய்யக் கூடாதா?'' என்று கேட்டான்.

சேர்க்கையின் வலிமையை அவர்களுக்கு விளக்க நினைத்தார் குரு. குடம் ஒன்றையும் சிறிய பாத்திரம் ஒன்றையும் கொண்டு வந்தார்.

''இந்தப் பாத்திரத்தில் தண்ணீர் முகர்ந்து நூறு முறை ஊற்றினால் தான் குடம் நிரம்பும். நான் இப்பொழுது ஒரு கேள்வி கேட்கிறேன்.'' என்றார்.

''கேளுங்கள்,''என்றார்கள் மாணாக்கர்கள்.

''இந்தப் பாத்திரத்தில் பால் முகர்ந்து தொண்ணூற்றொன்பது முறை ஊற்றுகிறேன். நூறாவது முறை மட்டும் பாலுக்குப் பதில் தண்ணீரை ஊற்றுகிறேன். குடத்திற்குள் உள்ள பாலின் நிலை என்ன ஆகும்?''

''அந்தப் பால் பாலாகவே இருக்கும். ஊற்றப்பட்ட தண்ணீரும் பாலாக மாறி இருக்கும்.'' என்று விளக்கம் தந்தான் ஒரு மாணாக்கன்.

''சரி, இதையே மாற்றிப் பார்ப்போம். இந்தக் குடத்தில் தொண்ணூற்றொன்பது முறை தண்ணீர் ஒருமுறை பாலும் ஊற்றுகிறேன். இப்பொழுது என்ன ஆகும்?'' என்று கேட்டார்.

''பால் அந்தத் தண்ணீரில் முழுமையாகக் கலந்து தன் நிலை இழக்கும்,'' என்றான் மாணாக்கன்.

''சேர்க்கையின் வலிமையை இப்பொழுது புரிந்து கொண்டிருப்பீர்களே'' என்றார் துறவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை - ஒகஸ்ட், 2010.
General Certificate of Education (Advance Level) Model Examination - August, 2010.

# இரசாயனவியல்

SPECIAL GUIDE FOR 2010 A/L MATHS, SCIENCE STUDENTS

✱ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்று எதுவாகும்?
நீர்க் கரைசல் ஒன்றின் PH ஆனது,
1) நேராக மட்டும் இருக்கும். 2) மறையாக மட்டும் இருக்கும்.
3) பூச்சியமாக மட்டும் இருக்கும்.
4) பூச்சியமாக இருக்க மாட்டாது.
5) நேர், மறை, பூச்சியம் என்பனவாக இருக்கலாம்.

02. தூயநீர் பற்றிய கூற்றுக்களில் தவறானது எதுவாகும்?
1) PH = 7 ஆகக் காணப்படலாம். 2) PH > 7 ஆகக் காணப்படலாம்.
3) PH < 7 ஆகக் காணப்படலாம்.
4) வெந்நீரின் PH > குளிர் நீரின் PH
5) PH = POH ஆகக் காணப்படும்.

03. கீழ்த்தரப்படும் எதற்குள் $1 moldm^{-3}$ NaOH கரைசலின் 1ml ஐச் சேர்க்கும்போது எக்கரைசலில் கூடிய PH மாற்றம் ஏற்படும்,
1) 20 ml தூய நீர்.
2) 20ml $1moldm^{-3}$ NaOH நீர்க்கரைசல்.
3) 20ml $1moldm^{-3}$ HCl நீர்க்கரைசல்.
4) $20cm^3$ $1moldm^{-3}$ $FeCl^3$ நீர்க்கரைசல்.
5) $20cm^3$ $1moldm^{-3}$ நீர்க்கரைசல்.

04. $25^oC$ இல் பின்வரும் கரைசல்களில் எக்கரைசல் PH > 7 ஆகும்?
1) சம மூல் $NH_4Cl$ / NH4 OH எவை கலந்து காணப்படும் கரைசல்.
2) சம மூல் $CH_3COOH$ / $CH_3COONa$ கொண்ட நீர்க்கரைசல்.
3) $(NH_4)_2 SO_4$ நீர்க்கரைசல்.
4) $CH_3COONH_4$ நீர்க்கரைசல். 5) $MgCl_2$ நீர்க்கரைசல்.

05. NaOH திண்மத்துடன் எத்திண்மம் கலந்து காணப்படமாட்டாது,
1) NaCl 2) $Na_2CO_3$ 3) $NaHCO_3$ 4) $Na_3PO_4$ 5) $Na_2SO_4$

06. $0.1mol dm^{-3}$ $40cm^3$ NaOHகரைசலுக்கு எக்கரைசலைச் சேர்த்தால் அக்கரைசல் PH கூடியளவில் மாற்றமடையும்?
1) 0.1 $moldm^{-3}$ $40cm^3$ HCl சேர்த்தல்.
2) 0.1 $moldm^{-3}$ $40cm^3$ NaOH சேர்த்தல்.
3) 0.1 $moldm^{-3}$ $21cm^3$ $H_2SO_4$ சேர்த்தல்.
4) 0.1 $moldm^{-3}$ $40cm^3$ $NH_4Cl$ சேர்த்தல்.
5) 0.1 $moldm^{-3}$ $42cm^3$ $HNO_3$ சேர்த்தல்.

07. $25^oC$ இல் PH = 4.7 உடைய HA என்றமென்னமிலத்தின் ($Ka = 1 \times 10^{-5} moldm^{-3}$) $25cm^3$ எடுத்து $100cm^3$ வரை ஐதாக்கினால் உருவாக்கப்பட்ட கரைசலின் PH ஏறத்தாழ என்னவாக இருக்கலாம்?
1) 4,5 2) 4.8 3) 4.9 4) 5.0 5) 5.3

08. PH = 4 இனை உடைய பின்வரும் கரைசல்களின் சம கனவளவிற்கு ஒரே கனவளவும் ஒரே செறிவுமுடைய NaOH கரைசலைச் சேர்ப்பதன் மூலம் கூடிய PH உடைய கரைசலைத் தருவது எதுவாகும்?
1) $CH_3COOH$ 2) $CH_3CH_2COOH$
3) HCOOH 4) HCl 5) $Cl_3COOH$

09. ஒரே செறிவுடைய பின்வரும் நீர்க்கரைசல்களின் PH ஏறுவரிசையைத் தருக.
a - $NaHCO_3$ b - $Na_2CO_3$ c - $NaClO_4$ d - $NH_4Cl$
1) d < c < a < b 2) d < c < b < a 3) a < b < c < d
4) b < a < c < d 5) c < d < a < b

10. கீழ்த்தரப்படும் சமமூல் சேர்வைகளின் நீர்க்கரைசலொன்று தரப்படுகின்றது. அதற்கு சிறிதளவு HCl சேர்க்கும்போது அது எதனுடன் தாக்கம் புரியும்?
1) $Na_2CO_3$ 2) $NaHCO_3$ 3) $NaClO_4$ 4) NaBr 5) $Na_2SO_4$

11. ஒரே செறிவுடைய பின்வரும் நீர்க்கரைசல்களில் எக்கரைசலின் PH குறிப்பிட்ட வெப்பநிலையில் அதி குறைவாகும?
1) $CH_3COONH_4$ 2) $HCOONH_4$
3) $HCOONH_3CH_3$ 4) $CH_3COONH_3CH_3$ 5) HCOONa

12. ஒரு காட்டி (HA) ஒன்றின் அயனாக்க மாறிலி $1 \times 10^{-5} moldm^{-3}$ எனின், அக் காட்டியின் PH வீச்சு யாதாகும்?
1) 2 - 4 2) 4 - 6 3) 6 - 8 4) 8 - 10 5) 10 - 12

13. $0.001mol dm^{-3}$ NaOH கரைசலை $0.001moldm^{-3}$ HCl ஆல் நியமிப்புச் செய்யும் போது முடிவுப்புள்ளியைத் தீர்மானிக்கும் காட்டியாக பின்வரும் pka பெறுமான முடைய எக் காட்டியை பயன்படுத்தலாம்.
1) 3 2) 4 3) 4.5 4) 7 5) 9

14. $Na_2CO_3$, $NaHCO_3$ கொண்ட ஒரு கரைசலில் $Na_2CO_3$ இன் அளவை அறிய பின் வரும் நியமிப்புகளில் எதனைச் செய்ய வேண்டும்?
1) பினோத்தலீன் காட்டி முன்னிலையில் HCl இனால் மட்டும் நியமிப்புச் செய்தல்.
2) மெதையில் செம்மஞ்சள் காட்டி முன்னிலையில் HCl இனால் மட்டும் நியமிப்புச் செய்தல்.
3) பினோத்தலின் + மெதையில் செம்மஞ்சள் காட்டிகளைக் கலந்தே HCl இனால் மட்டும் நியமிப்புச் செய்தல்.
4) மெதையில் செம்மஞ்சள் காட்டி முன்னிலையில் NaOH இனால் மட்டும் நியமிப்புச் செய்தல்.
5) பினோத்தலின் காட்டி முன்னிலையில் NaOH இனால் மட்டும் நியமிப்புச் செய்தல்.

15. ஒரே செறிவும் கனவளவும் உடைய கீழ்த்தரப்படும் அமிலக் கரைசல்களுக்கு அதே செறிவும் கனவளவுமுடைய NaOH கரைசல் சேர்க்கப்பட்டால் எவ் அமிலத்தினுள் சேர்க்கப்பட்ட நீர்க் கரைசல் கூடிய PH ஐக் காட்டும்?
1) HCl 2) $H_2SO_4$
3) $CH_3CH_2COOH$ 4) HCOOH 5) $CH_3COOH$

16. $0.1moldm^{-3}$ $CH_3COOH$ இன் $10cm^3$ இற்கு $0.1moldm^{-3}$ NaOH 5ml சேர்க்கும் போது ஏற்படும் கரைசலின் PH இனை எக்கரைசல் சேர்க்கும்போது பெறப்படலாம்?
1) $0.1moldm^{-3}$ $CH_3COOH$ $5cm_3$ இற்கு $0.1moldm^{-3}$ $10cm^3$ NaOH சேர்க்கும் போது.
2) $0.2moldm^{-3}$ NaOH $5cm^3$ இற்கு $0.1moldm^{-3}$ $10cm^3$ $CH_3COOH$ சேர்த்தல்.
3) $1moldm^{-3}$ $20cm^3$ NaOH இற்கு $moldm^{-3}$ $20cm^3$ $CH_3COOH$ சேர்த்தல்.
4) $2moldm^{-3}$ $20cm^3$ NaOH நீர்க்கரைலுக்கு $1moldm^{-3}$ $80cm^3$ சேர்த்தல்.
5) $0.1moldm^{-3}$ $CH_3COOH$ இன் $40cm^3$ இற்கு $0.2moldm^{-3}$ $20cm^2$ NaOH நீர்க் கரைசல் சேர்த்தல்.

17. கீழ்த்தரப்படும் எவ் உப்பின் கீழ்க்கரைசலுக்கு நீர் சேர்க்கும்போது PH தொடர்ந்து கூடியளவு மாறாது காணப்படும்?
1) $Na_2CO_3$ 2) $CH_3COOH$ 3) $NH_4OH$
4) $CH_3COOHNH_4$ 5) $NH_4Cl$

18. $25cm^3(NH_4)_3PO_4$ நீர்க்கரைசலுக்கு எக் கரைசலைச் சேர்க்கும்போது PH ஆனது கூடியளவு மாறுபடும் ?
1) NaCl நீர்க்கரைசலின் $1cm^3$ இனை.
2) செறி HCl நீர்க்கரைசலின் $1cm^3$ இனை.
3) NaOH நீர்க்கரைசலின் $1cm^3$ இனை.
4) செறி $BaCl_2$ நீர்க்கரைசலின் $1cm^3$ இனை.
5) தூய நீரின் $10cm^3$ இனை.

19. $Li_2O(s) + CO_2 \rightarrow Li_2CO_3(s)$ என்ற தாகிளத்தின் தாக்கவகை பற்றித் தீர்மானிக்க பயன்படுத்த வேண்டிய விதி/கொள்கை யாதாகும்?
1) ஆரினியஸ் அமில மூலக் கொள்கை.
2) புரொண்ரெட் - லோறி அமில மூலக் கொள்கை.
3) லூயியின் அமில மூலக் கொள்கை.
4) இரவேற்றின் விதி.
5) போயிரின் விதி.

20. $0.005moldm^{-3}$ $Ba(OH)_2$ கரைசலின் PHஇனை $25^oC$ இல் தருக.
1) 2 2) 3 3) 7 4) 12 5) 13

✱ வினா 21 தொடக்கம் வினா 25 வரை பின்வரும் அறிவுறுத்தலைப் பின்பற்றுக.

| விடைத் தெரிவு | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கூற்றுக்கள் பற்றிய தொடர்பு | a,b சரியானவை | b,c சரியானவை | c, d சரியானவை | d,a சரியானவை | வேறு சரியான சேர்க்கை |

21. $HNO_3$ மூலமாகத் தொழிற்படல் பற்றி அறிய எவ் அமில மூலக்கொள்கை/ கொள்கைகள் பயன்படுத்தப்பட்டன?
a- ஆரினியஸ் அமில மூலக் கொள்கை.
b- புரொண்ரெட் - லோறி அமில மூலக்கொள்கை.
c- லூயி அமில மூலக் கொள்கை.
d - ஒஸ்வால்ட்டின் ஐதாக்கல் கொள்கை.

22. HA என்ற மென்னமிலத்தின் 62.5 $cm^3$ இனை நீர் சேர்த்து $1cm^3$ ஆக மாற்றினால் பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்று எதுவாகும்/ எவையாகும்?
1) $(H^+)$ ஆனது 4 மடங்கால் அதிகரிக்கும்.
2) $(H^+)$ ஆனது 4 மடங்கால் குறையும்.
3) $(PH^+)$ ஆனது $lg^4$ இனால் அதிகரிக்கும்.
4) $(PH^+)$ ஆனது $lg^4$ இனால் குறைவடையும்.

23. $HCO_3$,$CO_3^{2-}$ கொண்ட கரைசலை இருபகுதியாக்கி ஒன்றினுள் சிறிதளவு HCl உம், மற்றயதினுள் சிறிதளவு NaOH உம் சேர்த்தால் நடைபெறும் தாக்கங்கள் எவையாகும்?
1) $CO_3^{2-} + H^+ \rightarrow HCO_3^-$ 2) $HCO_3^- + H^+ \rightarrow H_2CO_3$
3) $CO_3^{2-} + OH^- \rightarrow CO_2 + H_2O$ 4) $HCO_3^- + OH^- \rightarrow CO_3^{2-} + H_2O$

24. $0.1moldm^{-3}$ $H_3PO_4$ இன் $20cm^3$ இற்கு $0.1moldm^{-3}$, $50cm^3$ NaOH நீர்க்கரைசல் சேர்த்தபோது கரைசலில் காணப்படக்கூடிய கூறுகள் பின்வருவனவற்றில் எவையாகும்?
1) $H_3PO_4$ 2) $H_2PO_4^-$ 3) $HPO_4^{2-}$ 4) $PO_4^{3-}$

25. $NH_4^+$, $NH_4OH$ இன் அயனாக்க மாறிலிகள் முறையே Ka, Kb ஆகும். இவை தொடர்பான சரியான தொடர்புகள் எவையாகும்?
1) Pka + Pkb = Pkw
2) $POH = Pkb + \log_{10} [NH_4^+/ NH_4OH]$
3) $PH = Pka + \log_{10} [NH_4OH/ NH_4^+]$
4) PH + POH = Pkb + Pka

(13 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் S.தங்கராஜாவின் வழிகாட்டலில்
தொகுத்து வழங்குபவர்: S.T.ஜனார்த்தனன். தொ.இல. 0779522522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வினா 26 தொடக்கம் வினா 30 வரை பின்வரும் அறிவுறுத்தலை பயன் படுத்துக.

| விடைத் தெரிவு | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மை கூற்று I இற்கான விளக்கம் |
| 2 | உண்மை | உண்மை கூற்று I இற்கான விளக்கமல்ல |
| 3 | உண்மை | பொய் |
| 4 | பொய் | உண்மை |
| 5 | பொய் | பொய் |

| | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 26. | குறிப்பிட்ட வெப்பநிலையில் வன் கார, வன்னமில நடுநிலையாக்கலின் சமவலுப்புள்ளிக்கான PH அவற்றின் செறிவில் தங்கவில்லை. | வன்கார, வன்னமில நியமிப்பின் சமவலுப்புள்ளிக்கான கரைசல் நடு நிலைக் கரைசலாகவே காணப்படும். |
| 27. | குறிப்பிட்ட வெப்பநிலையில் வன் கார மென்னமில நடுநிலையாக்கலில் சமவலுப்புள்ளிக்கான PH அவற்றின் செறிவில் தங்கவில்லை | வன்கார, மென்னமில நியமிப்பின் சமவலுப் புள்ளிக்கான கரைசல் காரக் கரைசலாகும். |
| 28. | $1 mol\ dm^{-3}$ NaOH கரைசலை $1 moldm^{-3}$ ஆல் நியமிப்புச் செய்யும்போது காட்டி மாற முடிவுப்புள்ளிக்குரிய PH மாறுபடும். | முடிவுப்புள்ளிக்குரிய PH ஆனது காட்டியின் PH வீச்சில் தங்கியுள்ளது. |
| 29. | $CH_3COONH_4$ நீர்க்கரைசல் நடுநிலை யானதாகும். | $CH_3COO^-$, $NH_4^+$ அயன்களின் நீர்ப்பகுப்பு மாறிலிகள் சம பெறுமான முடையவை. |
| 30. | அனோமியம் உப்புக்கள் யாவும் நடுநிலை அல்லது அமில நீர்க்கரைசலைத் தோற்றுவிக்கும். | $NH_4^+$ நீர்பகுப்படைவது அமிலக் கரைசலைத் தோற்றுவிக்கும். |

## அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01\. a) $25^oC$ யில் கீழ்த்தரப்படும் அட்டவணைப்படி கரைசல்கள் சேர்க்கப்படும்போது பெறப்படும் PH தொடர்பாக அட்டவணையொன்று தரப்படுகிறது. $Kw = 1x10^{-14} ml^2dm^{-6}$ ஆகும்.

| $1moldm^{-3}$ VNaOH/ ml | 1moldm-3 VHCl/ ml | PH |
|---|---|---|
| 25 | 0 | y |
| 25 | x | 11 |
| 25 | 25 | z |
| 25 | w | 3 |

1) x,y இன் பெறுமானங்களைக் கணிக்குக.(கிட்டிய ஒரு தசமதானத்திற்கு)
2) z,w இன் பெறுமானங்களைத் தருக.
3) $0.1moldm^{-3}$ NaOH கரைசலின் $25cm^3$ஐ $0.1moldm^{-3}$ HCl இனால் நியமிப்புச் செய்யும்போது முடிவுப்புள்ளியின் இருதுளி மாற்றத்தில் அதி கூடிய PH மாற்றம் யாதாகும்?

b) கீழ்த் தரப்பட்ட அட்டவணையினை பினோத்தலீன் காட்டி(P), மெதையில் செம்மங்கள் காட்டி (m.o), வேறுகாட்டி (X) எனக் குறிப்பிட்டு அட்டவணையைப் பூர்த்திசெய்க.

| [NaOH]/ $moldm^{-3}$ | [HCl]/ $moldm^{-3}$ | காட்டி/ காட்டிகள் |
|---|---|---|
| 1.0 | 1.0 | |
| 0.1 | 0.001 | |
| 0.001 | 1.0 | |
| 0.001 | 0.001 | |

c) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும், பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.

1) $NH_4OH$,$CH_3COOH$ நியமிப்புக்குக் காட்டி பயன்படுத்த முடியாது. (....................)
2) $0.001\ moldm^{-3}$ NaOH இனை $0.001\ moldm^{-3}$HCl ஆல் நியமிப்பின் முடிவுப் புள்ளியைத் தீர்மானிக்க மெதையில் செம்மஞ்சள் காட்டி பயன்படுத்தலாம். (....................)
3) HCl+H2O→H2O+Cl என்ற தாக்கத்தின் அமில, மூலங்களை இனங்காண அமில மூலக் கொள்கைகள் மூன்றையும் பயன்படுத்தலாம். (....................)
4) சம் மூல் HCl,$Na_2CO_3$ கொண்ட கலக்கப்பட்ட கரைசல் ஒரு தாங்கற் கரைசலாகும். (....................)
5) குருதியொரு தாங்கற் கரைசலாகும். (....................)

02\. $25^oC$ யில் கீழ்த்தரப்படும் அட்டவணையைப் பூர்த்திசெய்க. கீழே தரப்படும் கரைசல்கள் இரண்டும் கலக்கப்பட்டு அக்கரைசல்களில் PH அட்டவணையில் குறிக்கப்படுகிறது. $CH_3COOH$ இன் $ka = 1x10^{-5}moldm^{-3}$, $Kw = 1x10^{-14} mol^2dm^{-6}$ ஆகும்.

| $0.2moldm^{-3}$ $CH_3COOH$ இன் கனவளவு / ml | $0.2moldm^{-3}$ NaOH கனவளவு / ml | PH |
|---|---|---|
| 20 | 0 | x |
| 20 | 10 | y |
| 20 | Z | 9 |

1) x இனைக் கணிக்குக.
2) y இனைக் கணிக்குக.
3) z இனைக் கணிக்குக.
4) மேலே தரப்பட்ட நியமிப்புக்குப் பொருத்தமான $P^{ka}$ பெறுமானமுள்ள காட்டிகளைச் சுற்றி வட்டமிடுக. $P^{ka}$ பெறுமானம்
4.7, 5.0, 8.2, 9.0, 12.5, 13.0

## கட்டுரை வினாக்கள்

* இரு வினாக்களுக்கும் விடை தருக.

01\. a) ஆரியனியஸ் அமில மூலக் கொள்கையை வரையறை செய்க.

b) 1. குறிப்பிட்ட வெப்பநிலையில் HA என்ற மென்னமிலத்தின் $1/\sqrt{C}$ எனும் தொடர்பைப் பெறுக.
2. இதிலிருந்து வெப்பநிலை மாறாதிருக்க $10cm^3$, $0.1moldm^{-3}$ HA இனை $40cm^3$ ஆகும் வரை ஐதாக்க $CH_3COOH$ செறிவு யாதாகுமெனக் கணிக்குக.
3. ஒரே செறிவுடைய HA, HB மென்னமிலங்களின் அயனாக்க அளவுகள் φβ எனவும், அவற்றின் அயனாக்க மாறிலிகள் $\sqrt{Ka_1}$, $\sqrt{Ka_2}$ எனவும் இருப்பின் $\varphi:\beta = Ka,\ Ka_2$ எனக்காட்டுக.
4. $0.1moldm^{-3}$ HA என்ற மென்னமிலத்தின் அயனாக்க அளவு 0.002 ஆகும். $0.1moldm^{-3}$ HB என்ற மென்னமிலத்தின் அயனாக்க அளவு யாதாகும்? (HA, HB இன் அயனாக்க மாறிலிகள் முறையே $1.6 \times 10^{-5}moldm^{-3}$, $4.0 \times 10^{-4}\ moldm^{-3}$)

c) $0.1moldm^{-3}$ செறிவில் HX,HY என்ற மென்னமிலங்கள் ஒரு நீர்க் கரைசலில் சமநிலை அடைந்த நிலையில் காணப்படுகின்றன. HX, HY இன் அயனாக்க அளவுகள் முறையே 0.002, 0.008 ஆகும்.
1. இவற்றில் அமில வலு கூடிய மென்னமிலம் எதுவாகும்?
2. கரைசலின் PH யாதாகுமெனக் கணிக்குக.
3. HX, HY இன் அயனாக்க மாறிலிகளைக் கணிக்குக.

02\. a) 1. லூயியின் அமில மூலக்கொள்கையை வரையறை செய்க.
2. புரொண்ரெட் - லோறி அமில மூலக் கொள்கையை வரையறை செய்க.


b) 1. காட்டி ஒன்றின் அறிமுறை ரீதியான PH வீச்சு 2 அலகுகள் என எடுத்துக் காட்டுக.
2. ஒரு காட்டி HIn இற்கு NaOH கரைசல் சேர்ந்தபோது கரைசலின் PH = 9.7 ஆகும். காட்டியின் அயனாக்க மாறிலி $1 \times 10^{-7}moldm^{-3}$, $Kw = 1x10^{-14}mol^2dm^{-6}$ எனின், அக்கரைசலில் [In-] : [HIn] யாதாகுமெனக் கணிக்குக.

c) PH மானியைப் பயன்படுத்தி செறிவு தெரியாத HA என்ற மென்னமிலத்தின் அயனாக்க மாறிலியைத் துணிக. செறிவு தெரியாத NaOH தரப்பட்டுள்ளது என்க.

## பௌதிகவியல் - பொறியியல்

01\. ஒப்பமான கிடை மேசை ஒன்றின் விளிம்பின் $2ms^{-1}$எனும் கிடையான வேகத்துடன் ஒரு நேர்கோட்டில் சுண்டி விடப்பட்ட துணிக்கை ஒன்று, 1 m நீளமான மேசையின் எதிர் விளிம்பை அவ் வேகத்துடன் அடைந்து, புவியீர்ப்பின் கீழ் விழுகின்றது.


a) இத்துணிக்கை மேசை மீது இயங்கிய நேரம் யாது?
.................................................................................................
b) இத்துணிக்கை எதிர் மேசை விளிம்பிலிருந்து விலகும் எவ் இயக்கத்தை ஆற்றுகிறது?
.................................................................................................
c) துணிக்கையின் கிடை வேகக்கூறிற்கு வேக நேர வரைபை வரைக. (A எனப் பெயரிடுக)



d) அருகில் உள்ள வரைபில் நிலைக்குத்து வேகக்கூறிற்கு வேக-நேர வரைபை வரைந்து B எனப்பெயரிடுக.

e) மேசையின் உயரம் 1.25m எனின், துணிக்கை நிலத்தை அடிக்கும்போது நேரம் யாது?
.................................................................................................
f) துணிக்கையின் கிடை வீச்சு யாது?
.................................................................................................
g) துணிக்கை நிலத்தை எவ் நிலைக்குத்து வேகத்துடன் அடிக்கும்?
.................................................................................................
h) துணிக்கை நிலத்தை அடிக்கும் கிடை வேகம் யாது?
.................................................................................................
i) நிலத்தை நிலைக்குத்துடன் எக்கோணத்துடன் அடிக்கும்?
.................................................................................................

02\. கீழே தரப்பட்டுள்ள இரு புகையிரதங்களின் வேக-நேர வரைபை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.




a) புகையிரதம் A இனது இயக்கத்தைத் தெளிவுபடுத்துக.
.................................................................................................
b) புகையிரதம் Bஇனது இயக்கத்தைத் தெளிவுபடுத்துக.
.................................................................................................
c) A இனது ஆர்முடுகல் யாது?
.................................................................................................
d) A சென்ற தூரம் யாது?
.................................................................................................
e) B சென்ற தூரம் யாது?
.................................................................................................
f) இவ்விரு புகையிரதங்களும் ஒன்றையொன்று முந்துமா? உமது விடையை விளக்குக. (A, B என்பன ஒரே நிலையத்திலிருந்து தமது பயணத்தை ஆரம்பிக்கின்றது எனக்கொள்க.)
.................................................................................................
g) புகையிரதம் A 10hஇல் சென்ற தூரம் யாது?
.................................................................................................

(முற்றும்)

ஆசிரியர்:- சி.சிந்தனைச்செல்வன் (B.Sc) Dip.in.Edu, Dip.in.IT
கொ/விவேகானந்தா கல்லூரி,
கொழும்பு-13. T.P:077-7550332



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளால் அவதிப்படலாம். பிள்ளைகள் வழியில் செலவுகளை சந்திக்கலாம். உடன் பிறப்புக்கள் தொடர்பான விடயங்களில், பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். புதியவர்கள் அறிமுகம் கிடைக்கும். தொழில் ரீதியான பணவரவுகளை பெறலாம்.

### இடபம்



சங்கடமான சில விடயங்களை, சூழ்நிலை கருதி சமாளித்து கொள்வீர்கள். நண்பர்கள் சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். வீடு தொடர்பான விடயங்களில், மனதிற்கு சங்கடம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். மற்றவர்கள் உங்களை ஏமாற்றாமலிருக்க, எச்சரிக்கை அவசியம். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

### மிதுனம்



குறைந்த விலையில், வாங்க நினைத்த பொருள் ஒன்றை அதிக விலைக்கு வாங்கலாம். மற்றவர்களை நம்பி எந்த காரியங்களையும் செய்ய வேண்டாம். உடன் பணிபுரியும் சிலரின் விடுமுறையால், கூடுதல் வேலைப்பளுவை சந்திக்கலாம். பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையும். வெறுப்பு உண்டாகும்.

### கடகம்



கடந்த கால அனுபவங்களை நினைத்து பார்த்து, புதிய காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்க செல்லும் சிலருக்குத் துணையாக செல்வீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம். உங்களின் சொந்தப் பிரச்சினை ஒன்றை, நண்பர்களிடம் சொல்லி யோசனை கேட்பீர்கள்.

### சிங்கம்



பெரிய மனிதர்கள் உதவிகரமாக இருப்பர். உதவி செய்த நண்பர் ஒருவருக்கு நன்றி சொல்வீர்கள். எங்காவது வெளியில் செல்லும் நேரத்தில், வாகன வசதி கிடைத்து, சந்தோஷம் அடைவீர்கள். மாமன், மைத்துனர்களிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும்.

### கன்னி



தூக்கமின்மையால் உடல் சோர்வு, உள்ளச் சோர்வு அதிகரிக்கும். பயணங்களில் தடை, தாமதங்களை சந்திக்கலாம். ஆலய வழிபாடுகள் மூலம் அமைதி பெறுவீர்கள். எதேச்சையாக நடக்கும் சில விடயங்கள், நல்ல விதமாக நடக்கலாம். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் கட்டளைகளை நிறைவேற்ற மறக்கலாம்.

### துலாம்



உங்களை நம்பி சிலர் முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். உறவினர்களுக்காகச் சில காரியங்களை செய்து, அதை அவர்கள் கண்டுகொள்ளாமல் போகலாம். அண்டை, அயலாரிடம் வீண் பேச்சுக்களை தவிர்க்கவேண்டும். தாய் வழியில் அன்பு தொல்லைகளை எதிர்கொள்ளலாம்.

### விருச்சிகம்



உங்களுக்கு கிடைக்கும் சில உதவிகளைப் பார்த்து, மற்றவர்கள் பொறாமைப்படலாம். குடும்ப உறுப்பினர்களின் மனம் கோணாமல், நடந்துகொள்ள முற்படுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். மற்றவர்கள் ஆதாயம் பெற, நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள்.

### தனுசு



குடும்ப உறுப்பினர்கள் சிலரின் குறைகளைச் சுட்டிக்காட்டி, அவர்களின் கோபத்திற்கு ஆளாவீர்கள். சேமித்த பணம் ஒன்றுக்கு, திடீரென செலவு உருவாகும். வீட்டுக்குத் தேவையான சில பொருள்களை வாங்குவீர்கள். நீண்ட நாள்களாக செல்ல நினைத்த இடத்திற்கு, சென்று வருவீர்கள். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

### மகரம்



கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். எந்த குறுக்கீடும் இல்லாமல், வழக்கமான பணிகளை வெற்றிகரமாகச் செய்வீர்கள். உங்களை முன்னர் உதாசீனம் செய்த ஒருவர், இன்று பாராட்டிப் பேசலாம். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

### கும்பம்



வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில், எச்சரிக்கை அவசியம். பணம் தொடர்பான முக்கிய செய்திகளைக் கேட்கலாம். வாகனங்கள் பராமரிப்பில், அக்கறை காட்டுவீர்கள். பேராசைகளைத் தவிர்க்க வேண்டிய நாள். சிலர் உங்கள் மனம் புண்படும் வகையில் பேசலாம்.

### மீனம்



உறவினர்கள் சிலரை நம்பி ஒப்படைத்த காரியங்கள், நல்ல விதமாக முடிவுக்கு வரும். பிள்ளைகளுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி, அவர்களின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். யாருடைய பணமாவது உங்களின் கைகளில் புரளலாம். வழக்கமாகச் செய்யும் சில வேலைகளை, இன்று தாமதமாகச் செய்ய நேரிடலாம்.

# சாதாரணதரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று யாழ்.மாவட்டக் கல்வித் துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களின் கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## சத்தியா தேவராசா
## விக்கினேஸ்வராக் கல்லூரி

நான் தரம் 5 இலிருந்து விக்கினேஸ்வராக் கல்லூரியில் கற்று வருகின்றேன். நான் கடந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 4ஏ பி சி 3எஸ் என்ற பெறுபேற்றைப் பெற்றுக்கொண்டேன். நான் இதை விடக் கூடிய பெறுபேற்றை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்த போதிலும் இப்பெறுபேற்றை பெற்றுக்கொண்டது திருப்தியளிக்கிறது.

இப்பெறுபேற்றைப் பெற்றதற்காக நான் முதலில் இறைவனுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், குடும்பத்தினர் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாடசாலையில் தரமான கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகள், சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டுதல்கள் போன்றவற்றை என்னால் பெறமுடிந்தது. தனியார் கல்வி நிறுவனத்தின் பாடரீதியான விளக்கங்கள், மேலதிக பயிற்சிகளையும் பெற்றுக்கொள்ள முடிந்தது.

நான் தற்போது உயிரியல் துறையை தெரிவுசெய்துள்ளேன். அதிலும் என்னாலான முயற்சிகளை எடுத்து சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைக்கழகத்திற்குச் செல்வதே எனது நோக்கமாகும்.



## திருநாவுக்கரசு துவாகரன்
## ஹாட்லிக் கல்லூரி

நான் தரம் 6முதல் தரம் 11 வரை ஹாட்லிக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் கல்விகற்றேன். நான் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 6ஏ 3பி எனும் பெறுபேற்றைப் பெற்றுள்ளேன்.

இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு எனது பாடசாலையும், தனியார் கல்வி நிறுவனமும், பெற்றோரும் உறுதுணையாக இருந்தனர். இச் சித்தியைப் பெறுவதற்கு பாடசாலையில் நடத்தப்பட்ட மேலதிக வகுப்புக்களும், கருத்தரங்குகளும், பரீட்சைகளும் முக்கிய காரணமாக இருந்தது.

நான் இப்பெறுபேறுகளைப் பெறக் காரணமாக இருந்த பாடசாலைச் சமூகத்தினருக்கும், தனியார் கல்வி நிறுவனத்திற்கும் மற்றும் பெற்றோர் ஆகியோருக்கும் எனது நன்றிகள். நான் தற்போது ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கணிதப்பிரிவில் கல்விகற்கின்றேன்.



## திரவியராசா அஜந்தன்
## ஹாட்லிக் கல்லூரி

நான் 2009 இல் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 7ஏ 2பி பெறுபேற்றைப் பெற்றுக்கொண்டேன். நான் ஆரம்பக்கல்வியை பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் கற்றேன். அங்கு ஆசிரியர்களின் ஊக்குவிப்பினால் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து ஹாட்லிக் கல்லூரியில் தரம் 6 இல் அனுமதி பெற்று இன்று ஜி.சீ.ஈ. உயர் தரக் கல்வியை இங்கு தொடர்கிறேன்.

நான் இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு முக்கிய காரணம், எனது குடும்பத்தினராவர். எனது பெற்றோர் எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். நான் விளையாட்டுக்களில் ஈடுபட்டபோதும் எனக்குப் பெரும் ஆதரவாக இருந்தனர். எனது இரு சகோதரர்கள் ஏற்கனவே இக்கல்லூரியில் கற்றுச்சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுள்ளனர். அவர்களும் எனக்குப் பல உதவிகள் செய்தனர்.

நேர்காணல்: மூர்த்தி, சுகந்தன்.

விடுமுறைகாலங்களில் கூட சிரமங்களைப் பொருட்படுத்தாது ஆசிரியர்கள் பாடசாலையில் வகுப்புக்களை நடத்தினார்கள். தனியார் கல்வி நிலையம் எனக்குப் பெரும் ஆதரவாக இருந்தது. நான் இப்பெறுபேற்றைப் பெற பாடசாலை பெரும் உதவியாக இருந்தது.

இந்தச் சித்தியைப் பெற உதவிய என்குடும்பத்தினருக்கும், ஹாட்லிச் சமூகத்தினருக்கும், தனியார் கல்விநிலைய ஆசிரியர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



## பிரிந்தினி பீற்றர் கெனமன்
## யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை

நான் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி 4ஏ 3பி 2 எஸ் பெறுபேற்றைப்பெற்றுள்ளேன்.

நான் நினைத்த பரீட்சை முடிவு எனக்குக் கிடைக்காத போதிலும் எனது பெறுபேறு எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. எனக்கு கணிதம், வணிகம் போன்ற பாடங்களில் அதிக விருப்பம் காணப்பட்டதனால் அவற்றில் கூடிய கவனம் செலுத்திப்படிப்பேன்.

நான் இந்தப் பெறுபேற்றைப் பெற உதவிய எனது பெற்றோருக்கும், பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உயர்தரத்தில் நான் வணிகத்துறையை தெரிவு செய்துள்ளேன். அதில் நன்கு படித்து பல்கலைக்கழகம் செல்வதே எனது இலட்சியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை நகரத்தை அசுத்தப்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

## நகரசபைத் தலைவர் தெரிவிப்பு

திருகோணமலை,ஜூன்2

திருகோணமலை நகரத்தை சுத்தமாக்கும் நடவடிக்கையில் நகரசபை ஈடுபடுகிறது. அத்துடன், நகரத்தை அசுத்தமாக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென சபைத் தலைவர் ச.கௌரி முகுந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை தொடர்பாக நகர சபைத் தலைவர் தெரிவித்தவை வருமாறு:-

திருகோணமலை பிரதேசத்திலுள்ள வீடுகள்,தாபனங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் அன்றாடம் சேரும் கழிவுகளைப் பாதுகாப்பாக கழிவு சேகரிக்கும் பாத்திரங்களில் மூடி வைத்து அல்லது பாதுகாப்பான பைகளில் சேகரித்து வைத்து வாராந்தம் வரும் நகராட்சி மன்ற திண்மக்கழிவு அகற்றல் வாகனங்களிடம் பொதுமக்கள் ஒப்படைத்தல் வேண்டும்.

சுகாதாரத்தையும்,சுற்றாடலையும் பேணும் பொருட்டு பொலித்தீன், பிளாஸ்டிக் போத்தல்கள் உட்பட திண்மக் கழிவுகள் வீதிகளிலும், வடிகான்களிலும்,பொது இடங்களிலும் இடுதல் நகரசபையால் தடை செய்யப்பட்டுள்ளது.

கட்டடக் கட்டுமானப் பொருள்கள், கட்டடக் கழிவுப் பொருள்கள், வெட்டிய மரங்கள் என்பனவற்றை வீதியோரங்களில் இடுதல் அல்லது பொது இடங்களில் இடுதல் தடை செய்யப்பட்டுள்ளன.

வீதிப் போக்குவரத்துக்கு இடையூறாக வளர்ந்துள்ள மரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வீதிகளில் அலைந்து திரியும் கால்நடைகள், வீட்டு மிருகங்கள் தொடர்பிலும், நடை பாதையில் அமைக்கப்படும் வியாபாரங்களுக்கான தற்காலிகக் கட்டமைப்புக்கள் மற்றும் அனுமதியற்ற க்ட்டுமானங்கள் என்பவற்றுக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நகரசபையின் அனுமதியின்றி குழாய்கள் மூலம் கழிவுநீர்,திரவக்கழிவுகள் என்பவற்றை பொது வடிகானினுள் சேர்த்தல் போன்றனவும் தடை செய்யப்பட்டுள்ளன.

இந்த நடைமுறைகள் இன்று தொடக்கம் அமுலுக்கு வருகின்றன எனவும், இது தொடர்பான சகல விதமான ஒத்துழைப்புக்களையும் பொலிஸாரிடமிருந்து பெற்றுக் கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் திருகோணமலை நகரசபைத் தலைவர் ச.கௌரி முகுந்தன் மேலும் தெரிவித்தார். (ளி)

# ஆயுர்வேத வைத்தியசாலையில் களவு

மட்டக்களப்பு,ஜூன்2

மருதமுனை ஆயுர்வேத வைத்தியசாலையின் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என கல்முனைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விடுமுறைத்தினங்களான கடந்த 27 ஆம், 28ஆம் திகதிகளிலேயே இனந்தெரியாத நபர்கள் வைத்தியசாலையின் பின் கதவை உடைத்து அங்கிருந்த நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் 4 பெரிய மின் விசிறிகள் உட்பட ஏனைய சில பொருள்களையும் திருடிச் சென்றுள்ளனர் என வைத்திய அதிகாரி டாக்டர் கே.எம். அஸ்லம் தெரிவித்தார்.

இத்திருட்டுச்சம்பவம் தொடர்பாக கல்முனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ளி)




# கல்முனை மாநகரப் பிரதேசத்தில் நல்லாட்சியை நிலைநாட்ட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## மாநகர முதல்வர் தெரிவிப்பு

அம்பாறை,ஜூன்2

''கல்முனை மாநகரப் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் மக்கள் நலன்களையும் முன்னிலைப்படுத்தி நல்லாட்சியொன்றை முன்னெடுப்பதற்கு சகல தரப்பினரும் முழுமையான ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும்.''

- இவ்வாறு கல்முனை மாநகர முதல்வர் எஸ்.இஸட்.எம்.மசூர் மௌலான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கல்முனை மாநகராட்சி மன்றத்தின் மாதாந்தசபை அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றபோது தலைமை வகித்து விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

முதல்வராக நியமிக்கப்பட்டு முதன் முறையாக இச்சபை அமர்வுக்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்திய மசூர் மௌலானா அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கல்முனை மாநகராட்சியின் முதல்வராகப் பதவியேற்றுள்ள நான் இன, மத, பிரதேச, கட்சி வேறுபாடுகளின்றி நீதி, நேர்மையுடன் பணியாற்றுவதற்குத் திடசங்கற்பம் பூண்டுள்ளேன். எந்தவொரு இனத்திற்கோ, பிரதேசத்திற்கோ அநீதியிழைக்கப்படுவதற்கு நான் ஒருபோதும் இடமளிக்கமாட்டேன்.

எமது மாநகரசபை உறுப்பினர்கள் அனைவரையும் கட்சி வேறுபாடின்றி- ஒரு தாய் பெற்ற பிள்ளைகளைப் போன்று வழி நடாத்துவேன். பாரபட்சம் எதுவுமின்றி உறுப்பினர்களின் நலன்களும் உரிமைகளும் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்கள் பிரதிநிதிகளான நாம் அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதிலும் இம் மாநகரப் பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் முழுக் கவனம் செலுத்த வேண்டும். இந்த சபையில் தேவையான விடயங்களை மட்டும் பேசுவோம். நானும் உங்களில் ஒருவன். என்னிடம் எப்போது வேண்டுமானாலும் வந்து நிறைகுறைகள் பற்றிப்பேச முடியும். வேண்டாத விவா தங்களையும் குரோதங்களையும் தவிர்த்துக்கொள்வோம். மக்களுக்குத் தேவையான திட்டங்களை ஒன்றுபட்டு முன்னெடுப்போம். - இப்படி முதல்வர் கூறினார். (ளி)

# புல்மோட்டை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் நேற்றுமுன்தினம் பகிஷ்கரிப்பு

திருகோணமலை,ஜூன்2

திருகோணமலை, புல்மோட்டை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் நேற்றுமுன்தினம் வகுப்பு பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலையில் நிலவும் பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரியே இவர்கள் இப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமது பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது என்றும் - கல்வி கற்பிக்க வரும் ஆசிரியர்களில் பெரும்பாலானோர் விடுமுறை எடுத்துச்சென்று வருகின்றனர் என்றும் - மழைக்காலங்களில் வகுப்பறைக் கட்டடங்களில் மழைநீர் தேங்கி நிற்கின்றது என்றும், பல்வேறு குற்றச்சாட்டுக்களை பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள் முன்வைத்தார்கள். (ளி)

# தமிழர் மகாசங்கம் பிரதேசக்கிளைகளை மீண்டும் புனரமைக்கத் தீர்மானம்

அம்பாறை,ஜூன்2

அம்பாறை மாவட்ட தமிழர்மகா சங்கத்தின் பிரதேசக் கிளைகளை மீண்டும் புனரமைக்கத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

மகாசங்கத்தின் மத்திய நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான ஆலோசனைக் கூட்டம் கடந்த வெள்ளியன்று மாலை அக்கரைப்பற்றில் பொதுச்செயலாளர் சிவஸ்ரீ சிவஞானசெல்வக் குருக்கள் முன்னிலையில் நடைபெற்றது.

அங்கு தமிழர்மகா சங்கத் தலைவராக விருந்து அண்மையில் மரணித்த கே.சுப்பிரமணியத்திற்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அவ்வெற்றிடத்திற்குப் புதியதலைவரை அடுத்த வருடாந்த பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்வதற்கும், அதுவரை பதில் தலைவராக கல்முனைக் கிளைத் தலைவர் த.மகேஸ்வரனை நியமிக்கவும் சபை தீர்மானித்தது. (ளி)

# மலையக மக்களின் எதிர்கால இருப்பைக் கருதி அரசியல் அமைப்புகள் செயற்பட வேண்டும்

## இ.தொ.ஐ.மு. செயலாளர் கனகராஜ் வலியுறுத்து

கொழும்பு,ஜூன்2

மலையகத் தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் இருப்பைக் கவனத்தில் கொண்டு மலையக அரசியல் அமைப்புகள் மிகப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டிய தருணம் இது வாகும் - என்று இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான கணபதி கனகராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதைய அரசு அரசமைப்பில் உள்ள தேர்தல்முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் தனது முழுக்கவனத்தையும் செலுத்தி வருகின்றது. தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல்முறை மலையகத் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் கணிசமான அளவு பிரதிபலிக்கின்றது.

சில மாவட்டங்களில் எமது பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டிருப்பதற்கு எமது மக்களிடம் நாம் அரசியல் தெளிவை ஏற்படுத்தாமையும், வாக்காளர் பட்டியலில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் நீக்கப்பட்டு இருக்கின்றமையுமே காரணங்களாகும்.




தற்போதைய நிலையில் அரசு ஏற்படுத்தப் போகின்ற தேர்தல் முறைமாற்றம் எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும், அதன் மூலம் மலையக மக்கள் அரசியல் பிரதிநிதித்துவ இழப்பை எதிர்நோக்கலாம் என்பதை மட்டும் அனுமானிக்க முடிகிறது.

இந்தநிலையில் எமது அரசியல் எதிர்காலத்தை சரியாக நிர்ணயித்துக்கொள்வதற்கு மலையக அரசியல் அமைப்புகள் உட்பட்ட பல்வேறு தரப்புகளும் ஒன்றுபட்டு செயற்படவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

அரசு ஏற்படுத்த உத்தேசித்துள்ள தேர்தல் முறை மாற்றத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித் துவப்படுத்தும் அரசியல் கட்சிகள், மலையக மக்களின் அரசியல் கோரிக்கைகளுக்கு ஆதர வாகச் செயற்பட வேண்டும் என நாம் அவர் களுக்குக் கோரிக்கை விடுக்கிறோம். அதே போல, இந்திய வம்சாவளி மக்களின் அரசியல் கோரிக்கைகளுக்காக இந்திய மத்திய அரசும் பங்களிக்க வேண்டும் - இப்படி கனகராஜ் தெரிவித்துள்ளார். (ளி)

# நீரோடைப் பாவனை தடுக்கப்பட்டதால் டிக்கோயாவில் தொழிலாளர் பகிஷ்கரிப்பு

நுவரெலியா,ஜூன்2

டிக்கோயா - போடைஸ் தோட்ட 30 ஏக்கர் பிரிவில், தோட்ட உதவி முகாமையாளர் விடுதிக்கு அருகில் அமைந்திருக்கும் நீரோடையை தொழிலாளர்கள் நீராடவோ அல்லது ஏனைய பிற தேவைகளுக்கோ பயன்படுத்தக்கூடாது எனத் தெரிவித்து தொழிலாளர்களை மிரட்டிய தோட்ட உதவிமுகாமையாளர், அதற்கான வழியை அடைத்துவைத்தார் எனக் கூறப்படும் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிலாளர்கள் கடந்தமாதம் 27 ஆம் திகதி முதல் மேற்கொண்டுவந்த பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

பாதை மூடப்பட்ட விடயத்தை தோட்டத்தொழிலாளர்கள், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பிரதித் தலைவரும், மத்தியமாகாண சபை உறுப்பினருமான முரளி ரகுநாதனின் கவனத்திற்கு கொண்டு வந்ததைத் தொடர்ந்தே இவ்விடயத்திற்குத் தீர்வு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தோட்டத்திற்கு விஜயம் செய்த மாகாணசபை உறுப்பினர் முரளி ரகுநாதன் தோட்ட முகாமையாளரையும், உதவி முகாமையாளரையும் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், தோட்ட மக்கள் தோட்டங்களிலேயே பிறந்து அங்கேயே மரணிப்பவர்கள் என்றும், இவர்களை மிரட்டி கலவரங்களைத் தூண்டுவதற்கும், அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கும் எவரும் முயலக் கூடாது என்றும் அறிவுறுத்தியதுடன், தொழிலாளர்கள் தமது அன்றாடத் தேவைக்குப் பயன்படுத்தும் நீரோடையைப் பயன்படுத்த தடைவிதித்து அதற்கான வழியை அடைத்து வைத்திருக்கின்றமை மனித உரிமை மீறல் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து நீரோடைக்கான வழி திறக்கப்பட்டதுடன், தொழிலாளர்களின் பணிப்பகிஷ்கரிப்பும் நிறைவுக்கு வந்துள்ளது. (ளி)

# கொத்மலையில் மீட்கப்பட்ட சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை

கொழும்பு,ஜூன்2

கொத்தமலை ஓயாவிலிருந்து மீட்கப்பட்ட ஆணொருவரின் சடலத்தை அடையாளம் காண்பதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென லிந்துலை பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நாகசேனை ஆகரகந்தைத் தோட்டத்துக்கு அருகிலுள்ள கொத்மலை ஓயா ஆற்றிலிருந்து இனந்தெரியாத நபரொருவரின் சடலமொன்றினை லிந்துலை பொலிஸார் கடந்த 28 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் மீட்டெடுத்தனர்.

சுமார் 27 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது. இந்தச் சடலத்தில் உள்ளாடை மாத்திரமே இருந்தது எனவும் சடலத்தின் முகத்தை அடையாளம் காணக் கூடியதாகவுள்ளது எனவும் லிந்துலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


தற்போது இந்தச்சடலம் நுவரெலியா வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை லிந்துலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவு

உறவு வந்து சேரும்
போது
ஏற்கின்ற இதயம்....
பிரிவு வந்து வாட்டும் போது
ஏற்பதில்லையே....
கூடலும் பிரிதலும்
மனித வாழ்க்கை என்று
நினைக்குதில்லையே...
புரிந்து கொண்டும்
செயற்பட என்னுள்ளம்
வருகுதில்லையே....

கு.தர்சினி
உடையார்வளவு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.




## ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை அறிந்திருப்பதனால் மூளைக்கு நன்மை

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை அறிந்திருப்பதனால் மூளைக்கு நன்மையை ஏற்படுத்தும் என பான்குர் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு வயது முதல் 80 வயது வரையிலான 700 நபர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்தத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.





பல மொழிகளில் பேசுவதற்கும், பல கலாசாரங்களை அறிந்து கொள்வதற்கும் மொழியறிவு மிகவும் இன்றியமையாததென ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.பல மொழிகளைத் தெரிந்து கொள்வதனால் நேரடியாகக் கிடைக்கப் பெறக் கூடிய நன்மைகளைப் போன்றே மறை முகமாக உடலுக்கு வேறும் நன்மைகள் கிடைக்கப் பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை அறிந்திருப்பதனால் மூளை வயதடைவதனைக் கட்டுப்ப டுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு மொழிகளில் பேசுதல், எழுதுதல் மற்றும் சிந்தித்தல் ஆகியவற்றினால் மூளையின் செயற்திறன் வலுப்பெறுவதாகக் குறிப்பிடப்படுகிறது. மொழிச் செயற்பாடுகள் மூளையின் சிக்கல் மிகுந்த இயக்கங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

இரண்டு வேறுபட்ட மொழிக் கட்டமைப்புக்களை மூளை ஆயுள் முழுவதும் செயற்படுத்துவதனால் பல்வேறு நன்மைகள் கிடைப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அ.ஜானுஷா, கொடிகாமம்.



## நோய் எதிர்ப்பு மருந்துகளால் ஏற்படும் தீமை

'ஆன்டி பயாடிக்' எனப்படும் நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகளால், உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி பாதிக்கப்படுவது நம்மில் பலருக்கும் தெரியாது.

ஒரு செயற்கையான நிகழ்வினால், உடலில் இயற்கையாக உள்ள நோய் எதிர்ப்பு சக்தி குன்றுகிறது.

மேலும், ஆன்டி பயாடிக் மாத்திரையை அடிக்கடி சாப்பிடுவதால் உடலின் ஜீரண உறுப்பு அரிக்கப்படுகிறது. இதனால் உங்களுடைய உடம்பிலுள்ள 'பி' காம்ப்ளக்ஸ் குறையும்.

வாய் துர்நாற்றம், தொண்டைப்புண், நாக்கு வறண்டு இருத்தல் போன்ற பிரச்சினைகளும் நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகளை சாப்பிடுபவர்களுக்கு ஏற்படுகிறது.

சிலருக்கு நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகளைச் சாப்பிட்டதும், உடலால் அதனைத் தாங்கிக் கொள்ள இயலாதபோது உடல் நடுக்கம் ஏற்படுகிறது.


மேலும், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி என்பதே இல்லாமல் போய் விடும் ஆபத்தும் உள்ளது.

## கடலுக்குள் ஆய்வு நிலையம்!

நிலவில் கால்பதித்த சாதனை 'மனிதனின் சிறிய அடி' என்று வர்ணிக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து அடுத்த பெரிய திட்டமாக செவ்வாய்க்கு மனிதனை அனுப்பும் முயற்சி நடந்து வருகிறது.

நிலவைவிட செவ்வாய் அதிக தூரத்தில் உள்ள கோளாகும். மேலும் அங்குள்ள சீதோஷ்ண நிலை பூமி, நிலவு இரண்டையும் விட பலவிதங்களில் மாறுபட்டது. உதாரணமாக பூமியைவிட 6 இல் ஒரு பங்கு ஈர்ப்பு ஆற்றல்தான் நிலவில் காணப்படுகிறது. ஆனால் செவ்வாய்க் கிரகத்திலோ ஈர்ப்பு விசை 8 இல் மூன்று பங்காக இருக்கிறது. இது தவிர சூரிய ஒளி பற்றாக்குறை, தீங்கு விளைவிக்கும் கதிர்வீச்சு போன்றவையும் காணப்படுகின்றது.

எனவே செவ்வாய்ப் பயணம், நிலவுப் பயணத்தைவிட சவாலானது. இதை எதிர்கொள்ளும் விதமாக செவ்வாய்க்குச் செல்லும் விண்வெளி வீரர்கள் பல்வேறு வித ஆய்வு, ஒத்திகை நிகழ்ச்சிகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள். இவற்றில் ஒரு சில சோதனைகள் முடிந்துவிட்டன. அடுத்த கட்ட சோதனையாக விண்வெளி வீரர்களைக் கடலுக்கு அடியில் அழைத்துச் சென்று ஆய்வு செய்யப்படுகின்றது. இதற்காகக் கடலில் 65 அடி ஆழத்தில் புளோரிடா மாகாணத்தில் ஓர் ஆய்வுக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. நாசாவின் இந்தத் திட்டம் 'நீமோ' என்று அழைக்கப்படுகின்றது.



சவால் நிறைந்த, சிக்கலான சூழ்நிலைகளில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற பயிற்சிகள் இதன் மூலம் அளிக்கப்படுகிறது.

விண்வெளிக்குச் செல்லும் வீரர்களை அஸ்ட்ராநட்ஸ் (Astronauts) என்று அழைப்பது போல கடலுக்குள் தங்கி இருந்து ஆய்வு நடத்தும் வீரர்களை அக்வாநட்ஸ் (Aquanauts) என்று அழைக்கிறார்கள்.

இந்தச் சோதனையில் அனுபவம் மிக்க 2 விண்வெளி வீரர்கள் உட்பட மொத்தம் 6 பேர் கலந்து கொள்கிறார்கள். 2 வார ஆய்வில், செவ்வாய்க் கிரகத்தில் இருப்பது போன்ற செயற்கைச் சூழ்நிலையில் ஸ்பேஸ்வாக் செய்வது, இயந்திரங்களை இயக்குவது போன்ற பணிகளை வீரர்கள் செய்கிறார்கள். இந்த முன்கட்ட ஆய்வு, விண்வெளி வீரர்களின் [illegible] அதிகப்படுத்தும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

சுசித்திரா, உடுவில்.



## வாய் சுத்தம் இதயத்துக்கும் நல்லது

பற்களைச் சுத்தமாக வைத்துக் கொள்வது இருதய நலத்துக்கும் உதவுகிறது என புதிய ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு இரண்டு முறை பல் துலக்குபவர்களுடன் ஒப்பிடும்போது, அப்படிப் பல்துலக்காதவர்கள் இதய நோயால் பாதிக்கப்படும் அபாயத்தை இரண்டு மடங்கு அதிகமாக எதிர்கொள்வதாக பிரிட்டனில் இருக்கும் மருத்தவ ஆய்வாளர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.

இது தொடர்பாக ஸ்கொட்லாந்தில் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகள் பிரிட்டிஸ் மருத்துவ சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த ஆய்வின் முடிவுகள் பல் துலக்குவதற்கும், இதய நோய் மற்றும் பக்கவாத நோய்க்கும் இருக்கும் நேரடித் தொடர்பு குறித்து விரிவான மருத்தவ ஆய்வுகள் செய்யப்படுவது இதுவே முதல்முறை என்று கூறப்படுகின்றது.

இந்தச் சோதனைகளின் முடிவின்படி, ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு முறை பல் துலக்குபவர்களோடு ஒப்பிடும்போது, ஒரு நாளைக்கு ஒரு முறை கூட பல் துலக்காதவர்கள் இதய நோயால் பாதிக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் எழுபது சதவீதம் அதிகமிருப்பது தெரியவந்திருக்கிறது.

முறையாகப் பல் துலக்காததன் காரணமாக வாயில் புண்ணை ஏற்படுத்தும் பாக்டீரியாவானது இரத்தத்தில் கலந்து இரத்த நாளங்களில் செல்லும்போது, அதுரத்த நாளங்களில் அடைப்பை ஏற்படுத்தக் கூடும் என்று மருத்துவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

பகலவன், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**01.11.1991**

* பாதுகாப்பு படையினரின் கவனத்தை வடக்கிலிருந்து கிழக்குக்குத் திருப்பும் தந்திரோபாயமாகவே விடுதலைப் புலிகள் கிழக்கில் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி வருவதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு.
* தமிழகத்திலிருந்து திரும்பும் ஈழத் தமிழ் அகதிகளில் முதல் தொகுதியினர் மன்னார் பேசாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

**02.11.1991**

* முப்படைகளும் பொலிஸாரும் கொண்ட சிறப்பு படை அமைப்பொன்றை இலங்கை அரசு உருவாக்கவுள்ளதாகவும் அதன் பொது அதிகாரியாக முன்னாள் இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க நியமிக்கப்படவுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிப்பு.
* சபாநாயகர் எம்.எச் முகம்மதுவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர எதிர்க்கட்சிகள் முன்னறிவித்தல் கொடுத்துள்ளதாகத் தெரிவிப்பு.

**03.11.1991**

* 'சார்க்' மாநாடு முடிந்த கையோடு நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை அரசு வெளியிடவுள்ளதாகத் தெரிவிப்பு.
* இனப்பிரச்சினை சம்பந்தமாக அனைத்துக் கட்சிமாநாட்டில் சமர்ப்பிக்கப் பட்ட யோசனைகள் இதற்கென நியமிக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குத் தெரியப்படுத்தப்படும் என அறிவிப்பு.

**04.11.1991**

* ஆளும் ஐ.தே.கட்சியின் அதிருப்திக் குழுவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்க குருநாகலில் பேசிய கூட்டம் ஒன்றில் திடீர்க்குண்டு வெடிப்பு இடம்பெற்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டதாகத் தெரிவிப்பு.
* இந்த வருட இறுதிக்குள் பத்து ரூபா தொடக்கம் ஆயிரம் ரூபா வரையிலான சகல ரூபா நோட்டுக்களும் புதிதாக வெளியிடப்படும் என மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு.

**05.11.1991**

* யாழ். குடாக்கடலில் ஒரு பகுதியை பாதுகாப்பு பிரதேசமாக ஆக்கும் முயற்சியாக அது குறித்து யாழ்.அரசாங்க அதிபர் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைப்பு.
* 'சார்க்' மாநாடு நடைபெறும் வேளையில் கொழும்பில் வெடிக்க வைப்பதற்காக விடுதலைப்புலிகள் வெடிகுண்டுகளை கொழும்புக்குக் கொண்டு வந்திருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பு.

**06.11.1991**

* நாளை கொழும்பில் ஆரம்பமாக வேண்டிய 'சார்க்' உச்சிமாநாடு ஒத்திவைக்கப்படலாம் என மாநாட்டின் அதிகாரிகள் நேற்றிரவு தெரிவித்ததாக அறிவிப்பு.
* 'சார்க்' மாநாட்டில் கலந்து கொள்வதை நேபாளப் பிரதமர் ஒத்தி வைத்துள்ளதாகவும் இந்தியப் பிரதமரின் வருகையும் நிச்சமற்ற ஒன்று எனவும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவிப்பு.

**07.11.1990**

* இன்று கொழும்பில் ஆரம்பமாகவிருந்த சார்க் உச்சி மாநாடு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது. அம்மாநாட்டை திட்டமிட்டபடி நடத்த பிரேமதாஸ அரசு முயற்சிகள் யாவும் தோல்வியுற்றதாகத் தெரிவிப்பு.
* 'சார்க்' உச்சி மாநாட்டை திட்டமிட்டபடி நடத்த இயலாது போனதால் ஏமாற்றமடைந்துள்ள இலங்கை அரசை ஆற்றுப்படுத்தும் நோக்கில் பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகியநாடுகளின் பிரதமர்களும், மாலைதீவு ஜனாதிபதியும் இலங்கைக்கு வரவிருப்பதாகத் தெரிவிப்பு.

**08.11.1991**

* கொழும்பில் 'சார்க்' மாநாட்டை திட்டமிட்டபடி நடத்த இயலாது போனமைக்கு இந்தியாவின் பிடிவாதமே காரணம் என இலங்கை அதிகாரிகள் சீற்றத்துடன் கூறியிருப்பதாகத் தெரிவிப்பு.
* இலங்கைக்குத் தேவை ஏற்படும்போது எந்த நேரத்திலும் எந்த உதவியையும் அளிக்க பாகிஸ்தான் தயாராக உள்ளதாக இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவிப்பு.

**09.11.1991**

* யாழ்.குடாநாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படும் சூழ்நிலை உருவாகிவருவதாகவும் அந்த ஆபத்தைத் தவிர்க்கச் சகல தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் யாழ்.அரச அதிபர் வேண்டுகோள் விடுப்பு.
* தமிழ்நாடு அரசு விடுதலைப்புலிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்தாலும் புலிகளுக்கான ஆயுத விநியோகத்தை எவராலும் தடுத்துவிட முடியாது என ஜெனீவாவில் வைத்து அளித்த பேட்டியில் விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர் கிட்டு தெரிவிப்பு.

**10.11.1991**

* தென் இலங்கையின் மீண்டும் மர்மப் பயங்கரக் குழுக்களின் நடமாட்டம் தலைதூக்கியுள்ளதாக ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* திருகோணமலை நகரில் விடுதலைப் புலிகள் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற எதிர்பார்ப்பால், மண் மூடைகளின் பின்னாலேயே இராணுவத்தினர் உஷார் நிலையில் இருந்து வருவதாகத் தெரிவிப்பு.

**11.11.1991**

* மனித உரிமைகளை உரிய வகையில் பேணவேண்டும் என்பது உட்பட தமது ஐந்து நிபந்தனைகளை இலங்கை அரசு நிறைவேற்றினால் மட்டுமே இலங்கைக்கு எதிர்காலத்தில் எம்மால் உதவிகளை வழங்க இயலும் என ஜேர்மன் அரசு திட்டவட்டமாகத் தெரிவிப்பு.
* பேச்சு நடத்த தாம் தயார் என விடுதலைப் புலிகள் தமது கடிதத்துக்கு அனுப்பிவைத்துள்ள பதில் கடிதத்தில் தெரிவித்திருப்பது தமக்கு உற்சாகம் தருவதாக அமைச்சர் தொண்டமான் பி.பி.ஸிக்குத் தெரிவிப்பு.

**12.11.1991**

* விடுதலைப்புலிகள் தமக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் குறித்து ஜனாதிபதி பிரேமதாஸவுடன் தாம் பேச இருப்பதாகவும், சூழ்நிலைகள் சாதகமாக இருந்தால் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைக்காகத் தாம் யாழ்ப்பாணம் செல்லக்கூடும் எனவும் அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.
* புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கும் தமது முயற்சியை லலித் அத்துலத்முதலி தலைமையிலான ஐ.தே.கட்சி அதிருப்தியாளர்கள் குழு தற்காலிகமாகத் தள்ளிப் போட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

**13.11.1991**

* யாழ்.குடாநாட்டின் கரையோரங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களும் தொழில் வாய்ப்புக்களை இழந்த மக்களும் யாழ். செயலகத்தில் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் அவர்களைச் சமாதானம் செய்து அனுப்பி வைத்ததாகத் தெரிவிப்பு.
* வடக்கு-கிழக்குப் போரினால் நாட்டின் பொருளாதாரநிலை தளர்வடைந்து செல்வதாக பிரதமரும் நிதி அமைச்சருமான டி.பி.விஜேதுங்க நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

**14.11.1991**

* வவுனியா, பட்டாணிச்சூர் புளியங்குளம் இராணுவ அரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று இராணுவ அரண்கள் முற்றாக அழித்து நாசமாக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.
* ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வந்த முக்கிய சந்தேக நபர்களில் ஒருவரான சாந்தன் என்பவர் நேற்று திருச்சியில் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிப்பு.

**15.11.1991**

* வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது மரணமான 60 பாதுகாப்புப் படையினரின் அஸ்திகள் நேற்று கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட இருந்ததாக இலங்கை வானொலி அறிவிப்பு.
* விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் 42 படையினரைச் சந்திக்க அவர்களது உறவினர்கள் விரைவில் யாழ்ப்பாணத்துக்கு வரவிருப்பதாகத் தெரிவிப்பு.

# திரைப்படத் தயாரிப்பாளர் நீதிமன்றத்தால் விடுவிப்பு!

கொழும்பு, ஜூன், 02

இலங்கையின் திரைப்படத் தயாரிப்பாளரும், பணிப்பாளருமான சந்திரன் ரட்ணம் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு எதிராக எந்தவிதக் குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படாத நிலையிலேயே, கங்கொடவில நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

நுகேகொடவிலுள்ள தனது வீட்டில் இவர் வெடிபொருள்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட அவர் மீது பொலிஸார் எவ்வித குற்றச்சாட்டுகளையும் முன்வைக்காத நிலையில் அவரை நீதிவான் விடுவிக்க உத்தரவு பிறப்பித்தார்.

திரைப்படத் தயாரிப்பாளர் என்ற வகையில் அவர் வெடிபொருட்களை வைத்திருக்கும் அனுமதியை பெற்றுள்ளார் என பிரதிவாதியின் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் வாதிட்டார். இதன்போதே பொலிஸார் தமது குற்றச்சாட்டுக்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர்.

இலங்கையின் யுத்தத்தை மையமாக வைத்து 'ஆனையிறவுக்கான பாதை' என்ற திரைப்படத்தை சந்திரன் ரட்ணம் தயாரித்திருந்தார். இத்திரைப்படத்தை தயாரிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சிலிருந்து பெற்றிருந்த விசேட உரிமத்தை சந்திரன் ரட்ணம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கத் தவறியுள்ளார் எனப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(சி)

# பிரிட்டன் முன்பள்ளிகளில் செப்ரெம்பர் முதல் தமிழ் மொழி

கொழும்பு, ஜூன் 02

பிரிட்டனில் முன்பள்ளிகளில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் தமிழ்மொழி ஒரு பாடமாக கற்கப்படுவதற்கும்- கற்பிக்கப்படுவதற்குமான சந்தர்ப்பம் அதிகரித்துள்ளது.

அரசின் புதிய கல்விக் கொள்கையின்படி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் பிரிட்டனின் அனைத்து முன்பள்ளிகளிலும் 5 வயது முதல் 11 வயது வரையான மாணவர்களுக்கு ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய இரு மொழிகள் கட்டாயம் கற்பிக்கப்பட வேண்டும்.

பிரிட்டனில் குடியேறி இருப்பவர்களில் கணிசமான தொகையினர் தமிழர்கள் ஆவர். பிரிட்டனில் அதிகம் புழக்கத்தில் உள்ள வேற்று மொழிகளில் தமிழும் ஒன்றாகும். எனவே பிரிட்டன் அரசின் இப்புதிய யோசனை தமிழ் மொழிக்கு சந்தர்ப்பமாக அமையும் என்பதில் சந்தேகமே இல்லை.

(சி)

# சிறைச்சாலைகளில் காசநோய் பரவும் அபாயம்!

## ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 02

நாடு முழுவதுமுள்ள சிறைச்சாலைகளிலுள்ள சிறைக்கைதிகள் மற்றும் குற்றச்சாட்டின் பேரில் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்கள் ஆகியோரின் மத்தியில் காசநோய் வெகு விரைவாகப் பரவிவருவதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் மேஜர் வி.ஆர்.சில்வா தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகளவில் காணப்படுகின்ற நிலையில், அங்கு விசேட வார்ட் பிரிவு திறந்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில், குற்றச்சாட்டின் பேரில் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களில் 70 பேர் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அத்துடன், இவர்களை வெலிக்கடை சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் மேஜர் வி.ஆர். சில்வா குறிப்பிட்டார்.

இதேவேளை, வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்த புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டீ.யூ.குணசேகர, மேற்படி நோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்து வருபவர்களையும் பார்வையிட்டார்.

(சி)




யாழ்ப்பாணம், ஜூன் 2

பண்டத்தரிப்பு, காலையடி ஞானவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (50-204-28)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 2

வில்லூன்றி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தினமும் காலை 7.45 மணிக்கும், பிற்பகல் 5 மணிக்கும் வசந்தமண்டப பூசை இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

(50-204-16)

* * *

பொலிகண்டி, மருதாம்புலம் பத்திரகாளி அம்பாள் ஆலய மஹாகும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 6.50 தொடக்கம் 8.41 மணிவரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

(50-204-36)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 2

வட்டுக்கோட்டை, உடுக்கியவளை மஹா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தின் சங்காபிஷேக நிகழ்வு இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் காலை 7 மணிக்கு விசேட திரவியாபிஷேகம், திருஊஞ்சல் என்பன நடைபெற்று சுவாமி திருவீதியுலா வருவார். (50-204)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 2

சாவகச்சேரி, வாரிவனநாத சந்திரசேர சிவன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 18ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

பாலகுருமணி கிரியா வித்துவஜோதி சிவப்பிரம்மஸ்ரீ க.பரராஜசேகரக் குருக்கள் தலைமையில் பெருந்திருவிழா கிரியைகள் நடைபெறும்.

(50-204-207)

* * *

புங்குடுதீவு, ஜூன் 2

புங்குடுதீவு மேற்கு, 4ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 17ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 18ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 19ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (50-204-188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விநியோக வான் சேவையாளர் தேவை**

வாகனங்களில் பொருள்களைக் கொண்டு சென்று விநியோகம் செய்வதற்கு ஆள்கள் தேவை. தகுந்த சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

யாழ்.ரெக்ஸ்,
இல.16, மின்சார நிலைய வீதி,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 30.05.2010 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டத்தினைப் பெற்ற எமது 'ஞானம்ஸ்' கல்வி நிலைய ஆசிரியர்

**லோப்பையா ஸ்ரனிஸ்லாஸ்**

(ஸ்ரனி) (B.A., Sp. Trd. (Primary), SLTS 2-II)

மேன்மேலும் பல பட்டங்களையும், பதவிகளையும் பெற்று வாழ்வில் உயர வாழ்த்துகின்றோம்.

ஞானம்ஸ் கல்வி நிலையம், பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.



## Canada, Italy மற்றும் London ஆகிய நாடுகளுக்கான Work Permit

- ★ இரண்டு வருட ஒப்பந்த காலங்கள்
- ★ இரண்டாவது வருட முடிவில் புதுப்பிக்கும் வசதி
- ★ 100% விசா மற்றும் பிரயாணத்துக்கான உத்தரவாதம்
- ★ வைத்தியசாலைகள், அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில்வாய்ப்புக்கள்.

**குறிப்பிடத்தக்க வெற்றிடங்களே உள்ளதால் பிரயாண அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்**

(98998) தொடர்புகளுக்கு: 0770259707 (98998)



## பாலர் பாடசாலை ஆசிரியைகள் தேவை

அரியாலை, கோப்பாய், நல்லூர், சாவகச்சேரி, சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை ஆகிய இடங்களுக்கு அருகில் வசிக்கும் க.பொ.த.(சாதாரணம்/ உயர்தரம்) சித்தியடைந்த ஆங்கில அறிவுள்ள, அர்ப்பணிப்புள்ள ஆசிரியைகள் தேவை.

முன் அனுபவம் தேவையில்லை. இன்று (02.06. 2010) புதன்கிழமை, பி.ப.2.00 மணிக்கு நேரில் வரவும்.

**இல. 140, கோயில் வீதி, நல்லூர். (UNOPS முன்பாக)**

(கி/566051)



## Study & Work in Canada & America

கனடா மற்றும் அமெரிக்காவில் தொழில்வாய்ப்புடன் கூடிய உயர்கல்வி

- ❋ கனடா மற்றும் அமெரிக்காவின் சிறந்த பல்கலைக்கழகம், கல்லூரிகளில் அனுமதிகள்.
- ❋ துரிதமான பயண ஏற்பாடுகள்.
- ❋ Sponsor வசதிகள்.
- ❋ 100% விசாவுக்கான உத்தரவாதம்.

கனடா மற்றும் அமெரிக்கா செல்ல விரும்புபவர்கள் இவ் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

(98999)

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டது. | தொடர்புகளுக்கு: 077 0259707



## கண்ணீர் அஞ்சலி

எமது கணக்கீடு ஆசான் திரு.பாலகஜன் அவர்களின் அன்புத் தந்தை



அமரர் கந்தசாமி **பாலசுப்பிரமணியம்** (J.P.)

அவர்களின் மறைவால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறைன் பவர் இன்ஸ்ரிரியூட், குருநகர். (98997)
2006 வர்த்தகப் பிரிவு மாணவர்கள்.



## கண்ணீர் அஞ்சலி



எமது கணக்கீட்டு ஆசிரியர் பா.பாலகஜன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் கந்தசாமி பாலசுப்பிரமணியம் (J.P.)

அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

2009 நாள்வகுப்பு (Day),
2009 வர்த்தகப் பிரிவு மாணவர்கள்,
Beacon கல்வி நிறுவனம்.


## திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசைத் தினவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 2

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை தினவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் அருள்மிகு சொர்ண வரதர் பத்திரகாளி அம்மன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மயிலணி சைவ வித்தியாலய அதிபர் நா.சிவநேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

விழாவில் ஸ்ரீ சொர்ணவரதர் பத்திரகாளி அம்மன் கோவில் குருக்கள் சிவ ஸ்ரீ சண்முகானந்தக் குருக்கள் ஆசியுரை வழங்க, சைவப் புலவர் நித்தியதசிதரன் ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்னும் தலைப்பில் சிறப்புச்சொற்பொழிவாற்றுவார்.

ஆரம்பத்தில் திருநாவுக்கரசு சுவாமிகளின் திருவுருவம் விசேட பூசை வழிபாடுகளுடன் சுன்னாகம் கிழக்கு ஞான வைரவர் கோயிலிலிருந்து விழா மண்டபத்துக்கு எடுத்துவரப்படும். (50 - 236)

## மகாபாரதம் சொற்பொழிவு

வடமராட்சி, ஜூன் 2

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறுதோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மகாபாரதம் தொடர்சொற்பொழிவு இடம்பெறும்.

இச் சொற்பொழிவை சைவப் புலவர், பண்டிதர் பொன்.சுகந்தன் நிகழ்த்துவார். (50 - 236)

## ஆத்ம ஜோதி முத்தையா ஜெயந்தி தினமும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஜூன் 2

ஆத்மஜோதி நா.முத்தையாவின் ஜெயந்தி விழாவும், அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பும் எதிர் வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஏழாலை ஆத்மஜோதி தியான மண்டபத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (50 - 236)

## வலி.கிழக்குச் செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

நாவற்குழி, ஜூன் 2

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (1-121)

## யாழ்.நகரப் பகுதி வடிகால்கள் துப்புரவு

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்.நகரில் உள்ள வடிகால்களைத் துப்புரவு செய்யும் பணியில் மாநகர தொழிலாளர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஆஸ்பத்திரி வீதியில் உள்ள நிலத்தடி வடிகால் ஒன்று நேற்று அடைபட்டதனால் கழிவுநீர் வெளியேறுவது தடைப்பட்டது.

மாநகரத் தொழிலாளர்கள் மேற்படி கால்வாய்க்குள் இருந்த கழிவுப் பொருள்களை அகற்றியதை அடுத்து கழிவு நீர் வழிந்தோட ஆரம்பித்தது.

ஏனைய வடிகால்களும் துப்புரவு செய்யப்பட்டன. (50-224)


## தவறிவிட்டது

FR. பங்கிராஸ் அலன் நிர்மலதாஸ் என்பவருடைய சாரதி அனுமதி அட்டை, குருத்துவ அடையாள அட்டை என்பன கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் (CTB) பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் தொடர்புகொண்டு ஒப்படைத்தல் தவும்.

அருள் ஆச்சிரமம், ...



## தேவை தேவை தேவை

யாழ்நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வதேச கல்வி ஆலோசனை நிலையத்திற்கு கணனி மற்றும் ஆங்கில அறிவு திறம்பட உள்ள (ஆங்கிலம் கதைக்க, எழுத, வாசிக்க) பெண் பணியாளர்கள் தேவை. (வயது எல்லை கவனத்தில் எடுக்கப்படமாட்டாது). சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம். நேரில் வரவும்.

**ANNIIY INTERNATIONAL, EDUCATIONAL, CONSULTANT SERVICES. 269/3, PALALY ROAD, JAFFNA.**

(98966)



## பேராசிரியர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களின் ஐம்பது வருட கல்விப்பணி நிறைவு குறித்த மலர் வெளியீடு

பேராசிரியர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களின் ஐம்பது வருட கல்விப்பணியை கௌரவிக்கும் முகமாக அவர்தம் மாணவர்களால் மலர் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அறிந்து கொள்ள விரும்புவோர் கீழ் உள்ள இலக்கங்களுடன்/முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
பொன்விழா ஏற்பாட்டுக் குழு,
வியாபார கற்கைகள் பீடம்,
வவுனியா வளாகம்,
உள்வட்ட வீதி,
வவுனியா. (98993)

தொ.பே: 0775153123, 0779680983.
செயலாளர்.



## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் திருமதி சிவாஜினி சிறிதர் அவர்களின் மாமனார்

**கந்தசாமி பாலசுப்பிரமணியம்**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

காணி மாவட்டப் பதிவகம், யாழ்ப்பாணம். (கி/566053)
ஊழியர் நலன்புரிச் சங்கம்.



## முதலாம் ஆண்டு நினைவில்

அமரர் கணபதிப்பிள்ளை முருகேசு

(ஆசிரியர்)

(மு/ வவுனிக்குளம் படிவம் 4 அ.த.க.பாடசாலை)

திதி:02.06.2010



தாய் மகனாய்: 30.06.1950
மண் மகனாய்: 14.06.2009

எமை விட்டகன்று ஆண்டு ஒன்று ஆனதோ!!
நேற்றுப் போலுள்ளது எம்முடன் வாழ்ந்தது!
காலத்தை வென்றவனாய் செழிப்புற்றவனே!
உனை இழந்து துடிக்கின்றோம் எங்கு சென்றாயோ?

கண்டுவில் லேன், டச்சு ரோட், சாவகச்சேரி. (98995)
சகோதரர்கள், பெறாமகன்: துஷா (குடும்பத்தினர்).



## மரண அறிவித்தல்



**சின்னத்தம்பி நாகேந்திரம்**

மாம்பழச்சந்தி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகேந்திரம் நேற்று (01.06.2010) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் (பவா) அன்புக் கணவரும் ரஜனி (கனடா), பாஸ்கரன் (நோர்வே), ரூபாகரன் (கனடா), ரஜிதா (அரியாலை) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19, மணமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (98996)
தகவல்: நா.ரஜிதா (மகள்).


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட கனிஷ்ட மெய்வன்மைப் போட்டி மகிந்த சர்வதேச அரங்கில் வெள்ளி ஆரம்பம்

## யாழ்ப்பாணத்திலிருந்து 70 வீர, வீராங்கனைகள் பங்கேற்பு

யாழ்ப்பாணம்,ஜூன்2

தேசிய மட்ட கனிஷ்ட பிரிவு தடகளப் போட்டி எதிர்வரும் வெள்ளி முதல் மூன்று தினங்கள் டியகாலையில்அமைத்துள்ள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்தத் தடகளப் போட்டிகளில் பங்கு கொள்வதற்காக யாழ்.மாவட்டத்திலிருந்து 70வீர, வீராங்கனைகள் நாளை வியாழக் கிழமை டியகாலை புறப்படுகின்றனர்.

இவர்களுக்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கம் மேற் கொண்டுள்ளதாகவும், பங்கு கொள்ளவுள்ள வீர, வீராங்கனைகள் அனைவரும் நாளை அதிகாலை 6 மணியளவில் ரில்கோ விருந் தினர் விடுதிக்கு வருகை தருமாறும் ஏற் பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (1-23)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஜூன் 2

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற் றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் 'ருவென்ரி-20' கிரிக் கெட் சுற்றுப் போட்டியில் இன்று புதன் கிழமை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல் லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட் டங்களில் மோதவுள்ள அணிகளின் விவ ரம் வருமாறு:

* காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் இந் துக் கல்லூரி.
* பிற்பகல் 1.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல் லூரி எதிர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

(1-86)

# சுப்பர்லீக் உதைபந்தாட்டம் பருத்தித்துறை போராடி வென்றது

யாழ்ப்பாணம்,ஜூன் 2

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேள னத்தினால் நடத்தப்படும் சுப்பர் லீக் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதல் சுற் றுப் போட்டியில் பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக் அணி போராடி வெற்றி பெற் றது.

நேற்று முன்தினம் பருத்தித்துறை மனோகரா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.உதைபந் தாட்ட லீக் அணியை எதிர்த்து பருத்தித் துறை உதை பந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் தலா ஒவ்வொரு கோல் போட்டதால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

தொடர்ந்து வெற்றி தோல்வி தீர்மானிப் பதற்காக மேலதிக நேரம் வழங்கப்பட் டது. அதிலும் இரண்டு அணியினரும் எது வித கோலினையும் அடிக்கவில்லை. ஆட் டம் சமநிலையில் முடிவுற்றது. ஆகவே சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட் டன. இதில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி 5:4 என்ற கோல்களை அடித்து யாழ்.உதைபந்தாட்ட லீக் அணியை வெற்றி கொண்டது. (1-23)

# தீவகப் பாடசாலைகளின் பெருவிளையாட்டு முடிவுகள்

ஊர்காவற்றுறை,ஜூன்2

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதி பர் பணிமனை ஊடாக நடைபெறும் வரு டாந்த பெருவிளையாட்டு முடிவுகள் வெளி யாகியுள்ளன.

முடிவுகள் வருமாறு,

**கரப்பந்தாட்டம் - ஆண்கள்**

ஊர்காவற்றுறை றேஞ்சறஸ் வி.க.,

ஊர்காவற்றுறை அண்ணா முன்னேற்ற வி.க.

**கரப்பந்தாட்டம் - பெண்கள்**

ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் வி.க., ஊர்காவற்றுறை றேஞ்சறஸ் வி.க.

**உதைபந்தாட்டம்**

தம்பாட்டி காந்திஜி வி.க., மெலிஞ்சி முனை இருதயராசா வி.க.

**மென்பந்து**

ஊர்காவற்றுறை அண்ணா முன்னேற்ற வி.க., மெலிஞ்சி முனை இருதயராஜா வி.க.

**வலைப்பந்து - பெண்கள்**

தம்பாட்டி காந்திஜி வி.க., அனலைதீவு அருணோதயா வி.க. (1 - 325)

## வலைப்பந்தாட்டம்; தெல்லிப்பழை சம்பியன்

யாழ்ப்பாணம்,ஜூன் 2

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்க ளுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக் கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி யின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல் லிப்பழை பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.

இதில் தெல்லிப்பழைப் பிரதேச செய லக அணி தன்னை எதிர்த்து விளையாடிய சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை 18:11 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது.

(1-23)

# விறுவிறுப்பான கிரிக்கெட் ஆட்டத்தில் வண்ணை காமாட்சி 14 ஓட்டங்களால் வெற்றி

வலி.வடக்கு,ஜூன் 2

ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற் காக ஈ.எஸ்.பி.நிறுவனத்தின் ஆதரவுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கு இடையே நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத் திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரை யிறுதி ஆட்டத்தில் வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழ கம் 14 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதா னத்தில் விறுவிறுப்பாக நடைபெற்ற அரை யிறுதி ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளை யாட்டுக் கழகமும் ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகமும்மோதிக் கொண் டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் 24.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டு களையும் இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

செல்ரன் ஐந்து ஆறுகள், நான்கு நான்கு களுடன் 64 ஓட்டங்களையும் நிலோஜன் ஆறு நான்குகள், ஒரு ஆறுடன் 50 ஓட்டங் களையும், அரவிந்தன் 22 ஓட்டங்களை யும் பெற்றனர்.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழ கத்தைச் சேர்ந்த பத்மமுரளி 05 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 05 விக்கெட் டுக்களையும் திவாகர் 04 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக் களையும், விதுசன், லவேந்திரன் முறையே 34,49 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

217 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 25 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக் களை இழந்து 202 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

வதுசன் எட்டு நான்குகள், ஒரு ஆறு டன் 69 ஓட்டங்களையும், கிரிசாந் ஏழு நான்குகள், இரண்டு ஆறுகளுடன் 60 ஓட் டங்களையும், திவாகரன் 26 ஓட்டங் களைப் பெற்றுக்கொண்டனர்.

ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நிரோஜன், சஞ்சீவன் தலா 05 ஓவர்கள் பந்து வீசி முறையே 31, 38 ஓட்டங்களைக் கொடுத்து தலா 03 விக் கெட்டுக்களையும் ஜெயரூபன் 18 ஓட் டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப் பற்றினார்கள். (86)

## அல்வாயில் கிரிக்கெட் போட்டி

வடமராட்சி,ஜூன் 2

அல்வாய், மாலுசந்தி மைக்கல் விளை யாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட் டுப் போட்டியை ஒட்டி 'ருவென்ரி-20' கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த வாரம் தொடக்கம் நடைபெற்று வருகிறது.

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்றுவரும் இச்சுற்றுப் போட்டி மாலிசந்தி மைக்கல் விளையாட்டு மைதா னத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டித் தொடரில் நாளை வியா ழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் கலைமகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட் டுக்கழகம் மோதவுள்ளது. (1-236)




## குடாநாட்டில் முதல்தடவையாக கைப்பந்தாட்டம்

வலி.வடக்கு,ஜூன் 2

இலங்கை இராணுவத்தின் 51ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் நாளை வியா ழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் படைத் தரப்பினருக்கு இடையேயான கைப்பந்தாட்டப் (HAND BALL) போட்டி யொன்று நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கைப்பந்தாட்டப் போட்டியொன்று முதல் தடவையாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதா கும். (1-23-86)

# கொக்குவில் மானிப்பாய்யை 65 ஓட்டங்களால் வென்றது

வலி.வடக்கு,ஜூன் 2

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற் றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்.மாவட் டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் 'ருவென்ரி-20' கிரிக் கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டம் ஒன் றில் கொக்குவில் இந்துக் கல்லூரி 65 ஓட் டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத் தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மானிப் பாய் இந்துக் கல்லூரியும் கொக்குவில் இந் துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்கு வில் இந்துக் கல்லூரி 20 ஓவர்கள் நிறை வில் 09 விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆதித்தன் ஐந்து நான்குகள், ஒரு ஆறு டன் 38 ஓட்டங்களையும், ஜனுதாஸ் ஆறு நான்குகளுடன் 34 ஓட்டங்களையும், இரா குலன்25 ஓட்டங்களையும், பிரதீபன், பங்குஜன் தலா 15 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 23 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பில் பந்து வீசிய ஹரிதரன் 04 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களை யும் பிரசன்னா, உமாசங்கர், ஜலினயன் தலா நான்கு ஓவர்கள் பந்து வீசி முறையே 22, 31, 40 ஓட்டங்களைக் கொடுத்து தலா 02 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள்.

176 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 20 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களை பெற்றது.

பிரசன்னா 28 ஓட்டங்களையும், ஆஞ் சலி 19 ஓட்டங்களையும், சபேசன் 11 ஓட் டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 22 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஜனுதாஸ் 04 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 13 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் பிரதீபன், இராகு லன், சுகி, கார்த்திக் முறையே 08, 13, 21 ஓட் டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட் டையும் கைப்பற்றினார்கள். (1-86)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மெய்வல்லுநர் போட்டியின் நிறைவு நாள் நிகழ்வுகளின்போது லயன் டாக்டர் வை.தியாகராஜா, கலா சாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை, ஜனாதிபதியின் ஆலோசகர் சி.இராமச்சந்திரன் ஆகியோர் உரையாற்றுவதையும், வினோத உடைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற ஒலிம்பிக் சிலையுருவையும், கலாசாலை பாண்ட் வாத்திய அணியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கோப்பாய்ச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிவைக்கப்பட்டது எனக்கே!

## பொலிஸாரின் கருத்துத் தவறு; ரவிசங்கர் சுவாமி பேட்டி


கர்நாடக முதல்வர் எடியூரப்பா ரவிசங்கரை சந்தித்தபோது....

பெங்களூர், ஜூன் 2

தன்னைக் குறிவைத்துத்தான் தாக்குதல் நடந்தது என்றும், தனது ஆசிரமத்தில் சீடர்களுக்குள் ஏற்பட்ட மோதலால் துப் பாக்கிச் சூடு நடந்தது என பொலிஸார் கூறுவது தவறு என்றும் வாழும் கலை அமைப்பின் நிறுவுநர் ஸ்ரீரவிசங்கர் சுவாமி தெரிவித்தார்.

சுவாமி ஸ்ரீரவிசங்கரை கடந்த ஞாயிறன்று மாலை மர்ம மனிதர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல முயன்றார். இந்தத் தாக்குதலில் அவர் அதிஷ்டவசமாக உயிர் தப்பினார்.

இதனால் கடந்த ஞாயிறன்று இரவு முழுவதும் ஸ்ரீரவிசங்கரின் ஆசிரமத்தில் பதற்றமும், பீதியும் நிலவின.

ஆனால், நேற்றுமுன்தினம் ஆசிரமம் எந்தவிதமான பரபரப்பும் இல்லாமல் அமைதியாக காணப்பட்டது. நேற்று முன்தினம் காலையில் ரவிசங்கர் சுவாமி, ஆசிரமத்தில் தியானம் மற்றும் மகாருத்ரயாகம் நடத்தினார். இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். சிறப்புப் பூஜையிலும் அவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் சம்பவம் பற்றி டில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்திடம் செய்தியாளர்கள் கேட்டபோது, அதற்கு அவர் கூறிய பதில் வருமாறு -

எங்களுக்குக் கிடைத்த தகவல்படி ரவிசங்கர் சுவாமி பிரார்த்தனை செய்த இடத்திலிருந்து சென்ற பின்னர்தான் துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. ஆகவே, ரவிசங்கரை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடந்திருக்க வாய்ப்பு இல்லை என்பதை வலியுறுத்தி சொல்லிக் கொள்கிறேன். அவரது ஆசிரமத்தில் இரு பக்தர்களிடையே முன்விரோதம் இருந்துள்ளது. அதில் ஒருவர்தான் காயம் அடைந்துள்ளார். வாய்மொழி தகவல்தான் இப்போது எங்களுக்குக் கிடைத்துள்ளது. எழுத்து மூலமான அறிக்கையை எதிர்பார்க்கிறோம்.

- இப்படி அமைச்சர் தெரிவித்தார்.

இதேகருத்தை கர்நாடகா பொலிஸ் டி.ஜி.பி. அஜய்குமார் சிங்கும் உறுதி செய்தார்.

ரவிசங்கரை குறிவைத்து தாக்குதல் நடைபெறவில்லை. அவரது கார் சென்ற 5 நிமிடம் கழித்துத்தான் துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. இது ஒரு சம்பவம்தான். காயமடைந்த பக்தருக்கும், துப்பாக்கியால் சுட்டவருக்கும் இடையில் முன்விரோதம் இருந்துள்ளது. ஆனால், ரவிசங்கருக்கு கொலை மிரட்டல் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை.

- இப்படி டி.ஜி.பி. கூறினார்.

ஆனால் ரவிசங்கர் சுவாமி, மத்திய அமைச்சர் சிதம்பரம், டி.ஜி.பி. அஜய்குமார் சிங் ஆகியோரின் கருத்துக்களை திட்டவட்டமாக மறுத்தார்.

தன்னைக் குறிவைத்துத்தான் துப்பாக்கிச் சூடு நடந்தது என அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பிரார்த்தனை, ருத்ர யாகம் நிகழ்ச்சிகள் முடிந்து வெளியே வந்த ரவிசங்கரிடம், முதல் நாள் இரவில் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றி கேட்டபோது அவர் கூறியவை வருமாறு-

என் காரை குறிவைத்துத்தான் துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. நானும் பலமான துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தைக் கேட் டேன்.

ஆனாலும் நான் வழக்கம்போல் அமைதியாக இருந்தேன். என் சாரதியும் என்னை நோக்கித்தான் தாக்குதல் நடந்தது எனக் கூறினார். ஆனால் பொலிஸார் இந்தத் தாக்குதல் பற்றி தீவிர விசாரணை நடத்தாமல், சாதாரணமாக எடுத்துக் கொண்டுள்ளனர். முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

எங்கள் பக்தர்களுக்குள் முன் விரோதம் இருந்தது, சொத்து தகராறு காரணமாக அவர்களுக்குள் தாக்குதல் நடந்தது என்று கூறுவது ஆதாரமற்ற குற்றச்சாட்டு. என் பக்தர்களுக்குள் எந்தத் தகராறும் இல்லை. என்னை குறிவைத்து தாக்குதல் நடக்கவில்லை என்று பொலிஸார் பொறுப்பைத் தட்டிக் கழிக்கக் கூடாது

- இப்படி ரவிசங்கர் சுவாமி கூறினார்.

# நக்ஸலை ஒழிக்கத் தீவிர நடவடிக்கை படையினருக்கு நவீன ஆயுதங்கள்!

## அமைச்சர் சிதம்பரம் பேட்டி



புதுடில்லி, ஜூன் 02

நக்ஸலைட்டுகளை ஒடுக்க துணை இராணுவப் படையினருக்கு நவீன ஆயுதங்கள் மற்றும் குண்டு துளைக்காத வாகனங்கள் வாங்கப்படும் - என்று உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் செய்தியாளர் களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அப்போது மாவோயிஸ்டுகளுக்கு எதிராக உள்துறை அமைச்சகம் மேற்கொண்டு வரும் நடவடிக்கை, எல்லைப் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதி உள்ளிட்டவை குறித்து விளக்கினார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

நக்ஸலைட்களை ஒடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நக்ஸலைட்களின் பாதிப்புள்ள இடங்களில்-பணிபுரிபவர்கள் உள்ளிட்ட துணை இராணுவப் படையினருக்கு நவீன ஆயுதங்கள், குண்டு துளைக்காத வாகனங்கள், குண்டு துளைக்காத உடைகள் போன்றவை வாங்க மத்திய அரசு ரூபா 300 கோடி வழங்கியுள்ளது.

இதுவரை நடந்துள்ள விசாரணையின் படி, மேற்கு வங்கத்தில் நடந்த ஞானேஸ்வரி எக்ஸ்பிரஸ் ரயில் விபத்துக்கு மாவோயிஸ்ட்கள் இயக்கம் அல்லது அதன் துணை அமைப்புகள்தான் காரணமாக இருக்கக்கூடும் என தெரியவந்துள்ளது. அந்த இடத்தில் குண்டு எதுவும் வெடித்ததற்கான தடயம் இல்லை. தண்டவாளம் துண்டிக்கப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த ரயில் விபத்து பற்றி சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என்று ரயில்வே அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது. ஆனால் இதுபற்றிய மேற்கு வங்க அரசின் கருத்தைக் கேட்டிருக்கிறோம். மேற்கு வங்க அரசின் கருத்துக் கிடைத்ததும் இந்தப் பிரச்சினையில் முடிவு எடுக்கப்படும்.

பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் நக்ஸலைட்டுகளை ஒடுக்குவ தற்கான உத்திகள் பற்றி விவாதிக்கப் படும்.

டில்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம், ஜாம் நகரில் உள்ள ரிலையன்ஸ் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், பெங்களூரில் உள்ள விப்ரோ நிறுவனம் போன்றவற்றின் பாதுகாப்புக் காக மத்திய தொழில் பாதுகாப்புப் படை யில் புதிதாக 1,100 பணியிடங்கள் ஏற் படுத்தப்பட்டுள்ளன.

தீவிரவாதம் தொடர்பான வழக்குகளை கையாள தேசிய புலனாய்வு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே நக்ஸலைட் தாக்குதல் தொடர்பான பிரச்சினைகளைக் கையாள தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை.

- இப்படி அமைச்சர் கூறினார்.

# மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் தமிழர் என்றே பதிவு செய்யுங்கள்!

## அக்கினிப்புயல் சீமான் கோரிக்கை

சென்னை, ஜூன் 02

மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் பொழுது தமிழர்கள் அனைவரும் தங்களைத் தமிழர்கள் என்று பதிவு செய்ய வேண்டும் - என்று நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

தமிழகத்தில் மக்கள் தொகை கணக்கெடுக்கும் பணி இன்று (அதாவது நேற்று) தொடங்கி 45 நாட்கள் நடைபெற இருக்கின்றது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் அனைத்து தமிழர்களும் தவறாது தங்கள் இனத்தைப் பதிவு செய்தல் அவசியம். இனம் என்பதில் என்ன பதிவு செய்வது என்ற குழப்பம் இங்கு தமிழர்களிடையே உள்ளது.

இங்கு இந்தியன் என்று ஒரு இனம் இல்லை. நாம் அனைவரும் இந்தியாவின் நிலப்பரப்பில் வாழும் குடிமக்கள் மட்டுமே.

இதைத்தான் இந்திய அரசியல் சட்டமும் சொல்கின்றது. அதைப்போல நாம் திராவிடரும் இல்லை. ஆரியம் என்ற சொல்லுக்கு எதிரான சொல்லாடலாக திராவிடம் என்ற சொல்லை வரலாற்றாசிரியர் கால்டுவெல் பயன்படுத்தினார்.

ஆங்கிலேயர் ஒருவர் பயன்படுத்திய சொல் எப்படி இனமாக மாறும்? திராவிடர் என்றால்யார்? அப்படி ஒரு இனம் இருக்கின்றதா? அதற்கு மொழி இருக்கின்றதா?



மலையாளியும், தெலுங்கரும், கன்னடரும் திராவிடன் என்றால் இங்கு தமிழ்நாட் டில் மட்டும்தானே திராவிட என்ற சொல்லை அனைவரும் தூக்கிக் கொண்டு திரிகின்றார்கள். ஏன் தமிழ்நாட்டில் மட்டும் திராவிடம் என்று சொல்கின்றார்கள்?

தமிழ்நாட்டில் இந்தியன் என்று ஓர் இனம் இல்லை. திராவிடன் என்று ஓர் இனமும் இல்லை. தமிழன் என்ற இனம் மட்டுமே உண்டு. நாம் அனைவரும் தமிழர்கள் - உலகின் தொன்மையான குடிகள். ஆகவே, நாம் நமது உரிமைகளைப் பெறுவதற்கும் - இனத்தால் ஒன்றுபடுவதற்கும் - நம்மைத் தமிழர்கள் என்று உணர்தல் அவசியம்.

ஆகவே மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் பொழுது தமிழர்கள் தம்மைத் தமிழர்கள் என்று உறுதியாகப்பதிவு செய்ய வேண்டும்.

- இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியச் செய்திகள்

## 1,000 திரையரங்குகளில் 'ராவணன்'

சென்னை, ஜூன் 02

மணிரத்தினத்தின் 'ராவணன்' திரைப் படம் எதிர்வரும் 18 ஆம் திகதி உலகம் முழுவதும் 1,000 இற்கும் மேற்பட்ட திரையரங்குகளில் வெளியாகிறது.

மணிரத்தினம் கடந்த இரு ஆண்டுகளாக தயாரித்து இயக்கி வரும் படம் 'ராவணன்'. தமிழ், தெலுங்கு மற்றும் ஹிந்தியில் இந்தப் படம் வெளியாகிறது.

ஹிந்தியில் அபிஷேக் பச்சன், ஐஸ்வர்யா ராய் ஜோடியாக நடித்துள்ளனர். விக்ரம் முதல்முறையாக ஹிந்தியில் இந்தப் படத்தில் நடித்துள்ளார்.



இந்தப் படத்தின் தமிழ்ப் பதிப்பில் விக்ரம், ஐஸ்வர்யா ராய், கார்த்திக், பிருத்விராஜ் நடித்துள்ளனர்.

தெலுங்கில் இந்தப் படம் 'வில்லன்' என்ற பெயரில் வெளியாகிறது.

ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் பாடல்கள் ஏற்கனவே பிரபலமடைந்துவிட்டன. படம் எதிர்வரும் 18 ஆம் திகதி உலகம் முழுக்க 1000 இற்கும் மேற்பட்ட பிரிண்டுகளோடு வெளியாகிறது. படத்தின் விளம்பரப் பணிகளில் மணிரத்தினம் மும்முரமாக உள்ளார்.

## 7 கண்டங்களின் சிகரங்களில் ஏறுவதே எனது லட்சியம்

### சந்தோஷ்குமார் கூறுகிறார்

சென்னை, ஜூன் 2

உலகில் 7 கண்டங்களில் உள்ள மிக உயரமான சிகரங்களிலும் ஏறுவதே எனது லட்சியம் என்று எவரெஸ்ட் சிகரம் ஏறிய தமிழக இளைஞர் சந்தோஷ்குமார் தெரிவித்தார்.

உலகின் மிக உயரமான மலை உச்சியான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி தமிழக இளைஞர் சென்னையைச் சேர்ந்த எஸ்.சந்தோஷ்குமார் (வயது - 27) சாதனை படைத்துள்ளார்.

# தமிழ் வழக்கு மொழிக்கான நடவடிக்கைகள் ஆரம்பம்

## அமைச்சர் வீரப்ப மொய்லி தெரிவிப்பு

சென்னை, ஜூன் 02

சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு மொழியாக தமிழைச் சேர்ப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்று மத்திய சட்ட அமைச்சர் வீரப்ப மொய்லி தெரிவித்தார்.

சென்னை வந்த அவர், விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களிடம் கூறியவை வருமாறு -

சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு மொழியாக தமிழைச் சேர்ப்பதற்கான நடவடிக்கை தொடங்கிவிட்டது. சென்னை உயர் நீதிமன்றத்துக்கு விரைவில் தலைமை நீதிபதி நியமிக்கப்பட உள்ளார். அதன் பிறகு தமிழை வழக்கு மொழி ஆக்குவதற்கான இறுதி முடிவு எடுக்கப்படும்.

இந்தியா முழுவதும் பல்வேறு பகுதிகளில் கூடுதலாக 71 சி.பி.ஐ. நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன. தமிழகத்தில் அமைப்பது குறித்து இப்போது எதுவும் கூற இயலாது.

உச்ச நீதிமன்ற கிளையை தமிழகத்திலோ அல்லது மற்ற மாநிலங்களிலோ உருவாக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை. அதற்கான மாற்றுவழி குறித்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

- இப்படி அமைச்சர் கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'ஜபுலானி'யின் வரவால் வீரர்கள் அதிருப்தி!




ஜோகனஸ்பர்க், ஜூன்2

தென்னாபிரிக்காவில் நடக்க உள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் பயன்படுத்தப்படவுள்ள, புதிய ரக 'ஜபுலானி' பந்துகுறித்து வீரர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் எதிர்வரும் 11ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகவுள்ளது. இத்தொடரில் பயன்படுத்தப்படவுள்ள 'அடிடாஸ்' வகை உதைபந்துகள் சரியான முறையில் வடிவமைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

முன்னணி அணிகளைச் சேர்ந்த வீரர்கள், கோல்காப்பாளர்கள், பயிற்சியாளர்கள் உட்படப் பலரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

'ஜபுலானி' எனப் பெயரிடப்பட்டுள்ள இப்பந்துகளைக் கையாள்வது மிகவும் கடினமாக உள்ளது என பிரேஸில் வீரர் லூயிஸ் பேபியானோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியவை வருமாறு:-

''உலகக் கிண்ணத் தொடரில் பயன்படுத்தப்படவுள்ள பந்து, முற்றிலும் விசித்திரமானதாக உள்ளது. இயல்பான ஆட்டத்துக்கு இது ஒத்துழைக்காது. இலக்கை நோக்கி அடிக்கும்போது, பந்து தாறுமாறாக வேறு திசைகளில் செல்கிறது. இன்னும் ஒரு சில நாள்களே உள்ள நிலையில், இவ்வகைப் பந்துகளைக் கையாள்வது மிகவும் கடினம்,'' - என்றார்.

இது குறித்து ஸ்பெய்ன் அணியின் கோல்காப்பாளர் கேசிலாஸ் கூறியவை வருமாறு:-

''உலகக் கிண்ணம் போன்ற முக்கிய தொடர்களில், இந்த மாதிரியான பந்துகளைப் பயன்படுத்துவது துரதிஷ்டவசமாக உள்ளது. இதனால் ஆட்டத்தின் போக்கே மாறிவிடும். இவ்வகைப் பந்துகள் கோல்காப்பாளர்களுக்கு மட்டுமல்ல, ஏனைய வீரர்களுக்கும் இந்த முறை பாதிப்பை ஏற்படுத்தும்.'' - என்றார்.

இதுகுறித்து 'அடிடாஸ்' நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

''இந்த முறை உலகக் கிண்ணத்துக்கு முற்றிலும் புதிய முறையில் பந்துகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பந்துகளின் மேற்பரப்பில் உள்ள புள்ளிகளால் பிடிமானம் கிடைக்கும். இதன் மூலம் பந்துகளை எளிதில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம். தேவையில்லாத குற்றச் சாட்டுகளைக் கூற வேண்டாம்'' - எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சில முன்னணி வீரர்கள் இந்தப் பந்துகுறித்து பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

பிரேஸிலின் காகா, ஜேர்மனி யின் மைக்கல் பல்லாக், ஸ்பெயினின் அர்பெலோ ஆகியோரே 'அடி டாஸ்' பந்துகளுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். இவ்வாறு பாராட்டுத் தெரிவித்துள்ள வீரர்கள் அனைவருக்கும் 'அடி டாஸ்' நிறுவனம் அனுசரணை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி சாதனை

புலவாயோ, ஜூன் 2

உலகிலேயே அதிக சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய பெருமையை இந்திய அணி பெற்றுள்ளது.

தற்போது சிம்பாப்வேயில் நடை பெற்றுவரும் முத்தரப்புக் கிரிக்கெட் தொடரில் கடந்த ஞாயிறன்று இலங்கைக்கு எதிராக இந்தியா மோதிய ஆட்டம், அந்த அணி யின் 742ஆவது ஒரு நாள் போட்டியாகும். இதன்மூலம் அதிக ஒரு நாள் போட்டி களில் பங்கேற்றிருந்த ஆஸ்திரேலியாவை (741 ஆட்டங்கள்) இந்தியா முந்தியது. இந்த வகையில் 3ஆவது இடத்தில் பாகிஸ்தானும் (715), 4ஆவது இடத்தில் மேற் கிந்தியத் தீவுகளும் (636), 5ஆவது இடத்தில் இலங்கையும் (599) உள்ளன.

ஒருநாள் போட்டிகள் 1971ஆம் ஆண்டு முதல் விளையாடப்பட்டு வருகின்றன. இந்திய அணி தனது முதலாவது ஒரு நாள் போட்டியை 1974ஆம் ஆண்டு ஜூலை 13ஆம் திகதி இங்கிலாந்துக்கு எதிராக ஆடியமை குறிப்பிடத்தக்கது.




# ஜெலீனா, செரீனா, நாடல் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

பிரெஞ்ச் ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் தொடரின் காலிறுதிச் சுற்றுக்கு ஜெலீனா ஜோன்கோவிச், செரீனா, நடால் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர். இதே வேளை, ஜஸ்டின் தோல்வியடைந்து வெளியேறினார்.

ஸ்லோவேகியா வீராங்கனையான டேனியலா ஹண்டுசோவாவை எதிர் கொண்ட ஜான்கோவிச் 6-4, 6-2 என்ற நேர் செட்களில் எளிதில் வென்று காலிறுதிக்குள் நுழைந்தார்.

முன்னாள் முதல் நிலை வீராங்கனையான பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனினை, 7ஆம் நிலை வீராங்கனையான ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோஸ் 2-6, 6 1, 6-4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

இன்னொரு ஆட்டத்தில் முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், இஸ்ரேலின் ஷகர் பீரை 6-2, 6-2 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றார்.



ஆண்கள் பிரிவில் நடந்த ஓர் ஆட்டத்தில் 3ஆம் நிலை வீரரான செர்பியாவின் ஜோகோவிச், அமெரிக்காவின் ராபி கினெப்ரியை எதிர்கொண்டார் 6- 4, 2- 6, 6- 1, 6- 2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் ஆஸ்திரிய வீரர் ஜுர்ஜன் மெல்ஸர் 7- 6, 4- 6, 6- 1, 6- 4 என்ற செற் கணக்கில் ரஷ்யாவின் கபாஸ்விலியை வென்று காலிறுதிக்குள் நுழைந்தார்.

4 முறை பிரெஞ்ச் ஓபன் பட்டத்தை வென்றவரான ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் 6- 2, 7- 5, 6-4 என்ற நேர் செற் கணக்கில் பிரேஸிலின் தோமஸ் பெலுக்ஸியை வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தார்.

# அனுசரணை உரிமையை தக்க வைத்தது சகாரா!

இந்தியக் கிரிக்கெட் அணியின் அனுசரணையாளர் உரிமையை சகாரா நிறுவனம் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டுள்ளது. அதேவேளை, இந்திய அணி விளையாடும் ஒவ்வொரு சர்வதேசப் போட்டிக்கும் சுமார் 8 கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் அனுசரணையாளராக இருந்த சகாரா நிறுவனத்தின் ஒப்பந்த காலம் கடந்த ஆண்டு இறுதியில் முடிவடைந்தது. ஆனால், எந்த நிறுவனமும் இந்திய கிரிக்கெட் சபை எதிர்பார்த்த தொகைக்கு அனுசரணை வழங்க முன்வராதமையால் சகாராவுடனான ஒப்பந்தம் மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிக்கப்பட்டது.

இதன்படி சகாராவின் ஒப்பந்தம் இந்த மாத இறுதியுடன் முடிவடைகிறது. இதையடுத்து இந்தியக் கிரிக்கெட் சபை புதிய அனுசரணையாளருக்கான கேள்வியை விடுத்திருந்தது.

கிரிக்கெட் சபையின் விதிகளுக்குட்பட்டு சகாரா குரூப், எயர்டெல் ஆகிய நிறுவனங்கள் அனுசரணை உரிமையைப் பெற விண்ணப்பித்திருந்தன.

இந்த நிலையில் அனுசரணையாளர் உரிமையை யாருக்கு வழங்குவது என்பது குறித்து இந்தியக் கிரிக்கெட் சபை மும்பையில் நேற்றுமுன்தினம் கூடி ஆலோசித்தது. அதில், அதிக தொகைக்குக் குறிப்பிட்டிருந்த சகாரா நிறுவனத்திற்கு மீண்டும் அனுசரணையாளர் உரிமையை வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

சகாரா நிறுவனத்தின் புதிய ஒப்பந்தக் காலம் அடுத்த மாதம் (ஜூலை) முதலாம் திகதி ஆரம்பித்து 2013ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரை நீடிக்கும். இந்த மூன்றரை ஆண்டு காலத்திற்குள் இந்திய அணி பங்கேற்கும் ஒவ்வொரு சர்வதேச ஆட்டத்திற்கும் சகாரா நிறுவனத்தின் மூலம் இந்தியக் கிரிக்கெட் சபைக்கு சுமார் 8 கோடி வரை கிடைக்கும்.

# கானா பயிற்சியாளர் மீது தாக்குதல்?

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடருக்கான அணியிலிருந்து நீக்கப்பட்டமையால் கானா பயிற்சியாளர் மீது தாக்குதல் நடத்த அந்த அணி வீரர் முயற்சித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

கானா அணியிலிருந்து நீக்கப்பட்ட லரீயா கிங்க்ஸ்டனே, பயிற்சியாளரான மிலோவன் ரோஜ்விஜ்ஜைத் தாக்க முற்பட்டார் எனக் கூறப்படுகிறது.

உலகக் கிண்ணப் போட்டிக்கான கானா அணி கடந்த ஞாயிறன்று அறிவிக்கப்பட்டது. அந்த அணியில் நடுக்கள வீரரான லரீயா கிங்ஸ்டனுக்கு இடம் கிடைக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த கிங்ஸ்டன், கானா அணியின் பயிற்சியாளரான மிலோவன் ரோஜ்விக்கைத் தாக்க முயற்சித்தார் எனவும், எனினும் அதிலிருந்து அவர் தப்பிவிட்டார் எனவும் கானா ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தச் சம்பவம் எங்கு நடந்தது? எப்போது நடந்தது? என்பது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

ஆனால், இப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை, ஊடகங்களின் பொறுப்பற்றத் தன்மையால் லரீயா கிங்ஸ்டன் மன உளைச்சலுக்குள்ளாகியுள்ளார் என்று கானா அணியின் செய்தித் தொடர்பாளர் ரேண்டி அபே மறுப்புத் தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்து அணி வெற்றி



லண்டன், ஜூன் 2

இங்கிலாந்து-பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் கடந்த 27ஆம் திகதி தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 505 ஓட்டங்களையும், பின்னர் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 282 ஓட்டங்களையும் சேர்த்தன.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸையும் ஆடவேண்டிய நிலையில், 223 ஓட்டங்கள் பின்தங்கிய தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய பங்களதேஷ், நான்காம் நாள் ஆட்ட நேர முடிவின்போது 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 328 ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்த நிலையில் ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. தொடர்ந்து ஆடிய பங்களாதேஷ் அணி, உணவு இடைவேளைக்குச் சற்று முன்பாக 2ஆவது இன்னிங்ஸிற்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தமாக 382 ஓட்டங்களைச் சேர்த்தது.

ஆரம்ப வீரர்கள் முதலாவது விக்கெட்டுக்காக 185 ஓட்டங்களைச் சேர்த்து வலுவான ஆரம்பத்தைக் கொடுத்த போதும், மத்தியவரிசை, பின்வரிசை வீரர்கள் சொதப்பியதால் பங்களாதேஷ் அணியால் பெரியளவில் ஓட்டங்களைக் குவிக்க இயலவில்லை.

இங்கிலாந்து அணி சார்பாகப் பந்து வீச்சில், முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய ஸ்ரீபன் பின், 2ஆவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

பின்னர் 160 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிய ஆடிய இங்கிலாந்து அணி, 35.1 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 163 ஓட்டங்களைச் சேர்த்தது. இதன்மூலம் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. அணித்தலைவர் ஸ்டிரஸ் 82 ஓட்டங்களை விளாசியிருந்தார்.

இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் மான்செஸ்டரில் ஆரம்ப மாகிறது.

# லலித்மோடிக்கு 'நோட்டீஸ்'

பதவியிறக்கம் செய்யப்பட்ட ஐ.பி.எல். தலைவர் லலித்மோடிக்கு ஏற்கனவே இரண்டு தடவைகள் இந்தியக் கிரிக்கெட் சபை நோட்டீஸ் அனுப்பியிருந்தது.

ஐ.பி.எல். நிதி ஊழல் மற்றும் அணிகளை ஏலம் எடுத்ததில் முறைகேடுகள் தொடர்பாக விளக்கம் கேட்டு ஒரு நோட்டீஸூம், ஐ.பி.எல். கிரிக்கெட்டுக்குப் போட்டியாக இங்கிலாந்தில் 'ருவென்ரி-20' கிரிக்கெட் லீக் தொடர் ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருந்தார் என வெளியான குற்றச்சாட்டுத் தொடர்பாக ஒரு நோட்டீஸூம் இந்தியக் கிரிக்கெட் சபை அனுப்பியிருந்தது. இதில் முதலாவது நோட்டீஸூக்கு லலித்மோடி விளக்கம் அளித்து தனது பதிலை அனுப்பி விட்டார்.

இந்நிலையில், இரண்டாவது நோட்டீஸூக்குரிய பதிலை நேற்று முன்தினம் மின்னஞ்சல் (இ - மெயில்) மூலம் இந்தி யக் கிரிக்கெட் சபைக்கு அனுப்பியுள் ளார்.

இதேவேளை, லலித்மோடிக்கு இந்தியக் கிரிக்கெட் சபை மீண்டும் ஒரு நோட்டீஸை நேற்றுமுன்தினம் அனுப்பியுள்ளது.

அதில்,

2010 முதல் 2019ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் திரையரங்கு, வணிக நிறுவனங்கள், ஹோட்டல்கள் உள்ளிட்ட இடங்களில் ஐ.பி.எல். போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையை என்டர்டெயின்ட்மென்ட் மற்றும் ஸ்போர்ட்ஸ் டைரக்ட் நிறுவனத்துக்கு வழங்கியமை தொடர்பாக விளக்கம் அளிக்கும்படியும்,

மேலும், போட்டியை ஒளிபரப்பும் போது, பந்து வீசப்படாத சமயத்தில் கிடைக்கும் 150 வினாடி நேரத்தை விற்பனை செய்ததில் கிடைத்த தொகையை உறுதி அளித்தபடி கிரிக்கெட் சபைக்கு கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு விளக்கம் அளிக்கும்படியும் லலித் மோடியிடம் கோரப்பட்டுள்ளது.

இதற்கிடையே,

சர்வதேசக் கிரிக்கெட் விதிகளை மீறி, ஐ.பி.எல். கிரிக்கெட்டுக்குப் போட்டியாக இங்கிலாந்தில் 'ருவென்ரி-20' கிரிக்கெட்டை நடத்த மோடி திட்டமிட்டிருந்தார் என இங்கிலாந்து கிரிக்கெட் சபைத் தலைவர் ஜைல்ஸ் கிளார்க் குற்றம் சாட்டி, அது பற்றி இந்தியக் கிரிக்கெட் சபைக்கும் தெரியப்படுத்தியிருந்தார். இதனை மறுத்த லலித்மோடி தனது பெயருக்குக் களங்கம் விளைவித்த ஜைல்ஸ் கிளார்க்கு அவதூறு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார். அத்துடன், நோட்டீஸ் கிடைக்கப்பெற்று, 7 நாள்களுக்குள் நிபந்தனையற்ற மன் னிப்புக் கேட்க வேண்டும் என்றும் அதில் மோடி கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதல் குறித்து சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்

## ஐ.நாவிடம் அரபு நாடுகள் அவசர கோரிக்கை

ஐ.நா., ஜூன் 02

ஐ.நா. பாதுகாப்புச் சபை திங்கட்கிழமை அவசரமாகக் கூடி, மனிதாபிமான நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு காஸாவை நோக்கி வந்த கப்பல்கள் மீது இஸ்ரேல் கொமாண்டோக்கள் மேற்கொண்ட தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்தது.

அதேவேளை, இத்தாக்குதல் தொடர்பாக கடும் கண்டனம் தெரிவித்துள்ள பலஸ்தீனமும், அரபு நாடுகளும் இது தொடர்பாக பாரபட்சமற்ற, சுதந்திரமான விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் ஐ.நாவை வலியுறுத்தியுள்ளன.

காஸா மீது தான் விதித்துள்ள தடைகளை இஸ்ரேல் நீக்கிக்கொள்ளவேண்டும். அத்துடன், தான் தடுத்துவைத்துள்ள கப்பல்களையும், அவற்றிலுள்ள தன்னார்வத் தொண்டர்களையும் உடனடியாக அது விடுவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் துருக்கியையும், இதர நாடுகளையும் சேர்ந்த பிரதிநிதிகளும், பலஸ்தீன, அரபு பிரதிநிதிகளும் கூட்டாக இக்கோரிக்கையை விடுத்துள்ளார்கள். அத்துடன், கப்பல்களிலுள்ள நிவாரணப் பொருள்களையும், பலஸ்தீனத்துக்கு வழங்குவதற்கும் இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளார்கள்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டத்தில் உப செயலாளர் நாயகம் ஒஸ்கார் போர்னண்டஸ் - டாரான் கோ பேசுகையில், திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்ற இத்தாக்குதல் நடவடிக்கையை கடுமையாகக் கண்டித்துள்ளார்.

இரத்தக்களரிக்கு ஏதுவான இத்தகைய மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை இஸ்ரேல் மீளக் கட்டவிழ்க்கக்கூடாது. அத்துடன், ஏற்றுக்கொள்ளப்பட முடியாத காஸா மீதான தடையையும் அது நீடிக்கக்கூடாது. திங்கட்கிழமை இடம்பெற்ற இரத்தக்களரியையும் சாதுரியமாகத் தவிர்த்திருக்கலாம். இதுவிடயத்தில் இஸ்ரேல் விவேகத்துடன் செயற்படத் தவறியுள்ளது'' என்றும் ஒஸ்கார் சுட்டிக்காட்டியுள்ளார்.

பலஸ்தீனத்தில் மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்காகக் கப்பல்களில் வந்த வெளிநாட்டுக் குழுவினர் மீது இஸ்ரேல் கடற்படை திங்கட்கிழமை தாக்குதல் நடத்தியது. இதில் 15 பேர் பலியாயினர். 60 பேர் காயமடைந்தனர்.

இஸ்ரேல் கடற்படை கொமாண்டோ வீரர்களின் இந்த நடவடிக்கை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு சர்வதேச அளவில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

பலஸ்தீனத்தின் காஸா முனைப்பகுதியில் மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ள அயர்லாந்தைச் சேர்ந்த நோபல் பரிசு வென்ற மைரீட் கோரிகன் மேகுர் உட்பட 700 பேர் 6 கப்பல்களில் வந்து கொண்டிருந்தனர்.

இவர்கள் பலஸ்தீனத்துக்கு வருவதை இஸ்ரேல் கடற்படை கொமாண்டோக்கள் நடுக்கடலில் தடுத்து நிறுத்தியுள்ளனர். ஆனால், மனிதாபிமான உதவிக் குழுவினர் தொடர்ந்து பலஸ்தீனத்துக்கு வர முயற்சித்துள்ளனர்.

இதனால் கோபமடைந்த இஸ்ரேல் கடற்படை கொமாண்டோக்கள் மனிதாபிமான உதவிக் குழுவினர் மீது துப்பாக்கியால் சுட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் 15 பேர் துடிதுடித்து இறந்துள்ளனர். 60 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் துருக்கியைச் சேர்ந்தவர்களாவர்.

இஸ்ரேல் கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டதும் மனிதாபிமானக் குழுவினர் கதறியுள்ளனர். எனினும், இதை கடற் படையினர் கண்டுகொள்ளவில்லை. தொடர்ந்து துப்பாக்கியால் சுட்டு 6 கப்பல்களையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர் என்று அதிகாரபூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

''கடலில் எங்களது பகுதியில் மனிதாபிமானக் குழுவினர் வந்த கப்பல்கள் அத்துமீறி நுழைந்தன. கப்பல்களை எங்கள் கடற்படை கொமாண்டோக்கள் தடுத்து நிறுத்தினர். ஆனால், இதற்கு மனிதாபிமானக் குழுவினர் செவிசாய்க்கவில்லை. மாறாக, கடற்படை கொமாண்டோக்கள் மீது பலத்த ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதையடுத்துதான் கடற்படை கொமாண்டோக்கள் துப்பாக்கியால் சுட்டுள்ளனர்'' என்று இஸ்ரேல் இராணுவ செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளனர்.

கப்பல்களில் வந்த மனிதாபிமானக் குழுவினருக்கும், அல்-குவைதா, ஹமாஸ் தீவிரவாதக் குழுக்களுக்கும் தொடர்புள்ளது என இஸ்ரேலிய வெளியுறவுத் துணை அமைச்சர் டேனியல் தெரிவித்துள்ளார்.

## உலக அரங்கில்

# பாக். பஞ்சாப் மாநில தீவிரவாதிகள் மீதும் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும்

## உள்துறை அமைச்சர் எச்சரிக்கை

லாகூர், ஜூன் 2

பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் மாநிலத்தில் இருந்தபடி தாக்குதல்களை நடத்தி வரும் தீவிரவாதிகள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநில லாகூர் நகரிலுள்ள மசூதிகளில் அகமதி முஸ்லிம்கள் பிரார்த்தனை நடத்திக்கொண்டிருந்தபோது அவற்றுக்குள் புகுந்த தீவிரவாதிகள் கண்முன் தெரியாமல் சுட்டனர். இதில் பலர் பலியாயினர்.

இந்தச் சம்பவத்துக்கு பாகிஸ்தான் தலிபான் இயக்கத்தின் பஞ்சாப் பிரிவு பொறுப்பேற்றுள்ளது. இதைத் தொடர்ந்து 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்திலுள்ள லஷ்கர் - இ - தொய்பா, ஜெய்ஷ்-இ-முகமது, சிபா-இ - சகாபா ஆகிய தீவிரவாத இயக்கங்கள் தலிபான், அல்-குவைதா இயக்கங்களுடன் இணைந்துள்ளன.

இதைத் தொடர்ந்து பஞ்சாப் மாநிலத்திலுள்ள தீவிரவாத இயக்கங்கள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் அறிவித்துள்ளார்.

அவர் இதுகுறித்து நிருபர்களிடம் குறிப்பிடுகையில், ''லாகூரில் நடந்தது போன்ற தாக்குதல்களை இனியும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. அதனால் பஞ்சாப் மாநிலத்திலுள்ள தீவிரவாதிகள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்'' எனத் தெரிவித்துள்ளார்.

''பஞ்சாப் மாநிலத்திலுள்ள லஷ்கர், ஜெய்ஷ் ஆகிய இயக்கங்கள் பாகிஸ்தானை சீர்குலைப்பதற்காகத் தலிபான் இயக்கத்துடனும், அல்-குவைதா இயக்கத்துடனும் இணைந்து செயற்படுகின்றன. எனவே, இவற்றின் மீது அதிரடி நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



ஜேர்மனி தலைநகர் பேர்ளினில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் ஜனாதிபதி ஹோர்ஸ்ட் கோலர், தனது இராஜிநாமாவை அறிவித்தார். அருகில் மனைவி ஈவா லூயிஸ் கோலர் காணப்படுகிறார்.

# ஜேர்மன் ஜனாதிபதி ஹோர்ஸ்ட் ஆப். விவகாரத்தால் இராஜிநாமா

பேர்ளின், ஜூன் 2

ஜேர்மனி ஜனாதிபதி ஹோர்ஸ்ட் கோஹ்லர் (வயது - 67) திங்கட்கிழமை தனது பதவியை இராஜிநாமா செய்தார்.

ஆப்கானிஸ்தான் மீதான ஜேர்மனியின் நடவடிக்கை குறித்து ஹோர்ஸ்ட் தெரிவித்த கருத்தால் எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து, அவர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

ஹோர்ஸ்ட் தமது இராஜிநாமா குறித்து செய்தியாளர்களிடம் குறிப்பிடுகையில், ''ஆப்கானிஸ்தான் குறித்து நான் தெரிவித்த கருத்துகள், தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும், எனக்கு இதுவரை ஆதரவளித்து வந்த மக்களுக்கு இந்த வேளையில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'.

''எனது இந்த முடிவு குறித்து பிரதமர் ஏஞ்சலா மொர்கலுக்கும் தெரிவித்து விட்டேன். ஜேர்மனி ஜனாதிபதியாகப் பதவி வகித்தமை எனக்கு கிடைத்த கௌரவமாகக் கருதுகிறேன்'' என்று உணர்ச்சி பொங்க குறிப்பிட்டுள்ளார்.

''ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தைக் கொண்ட ஜேர்மனி போன்ற நாடுகள், பிற நாடுகளுடன் ஸ்திரமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுடன் நிலவும் ஸ்திரமற்ற உறவுகள், வர்த்தகம், வேலைவாய்ப்பு, நாட்டின் வருவாய் ஆகியவை உள்ளிட்டவற்றில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும்'' என்றும் ஹோர்ஸ்ட் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் பயணிகள் சம்பந்தப்பட்ட முழுவிவரங்களையும் அமெ. கோருகிறது

நியூயோர்க், ஜூன் 02

அமெரிக்காவுக்குப் பயணம் செய்வோர் மட்டுமின்றி, வெளிநாடுகளுக்குச் செல்லும் பாகிஸ்தானியர் பற்றிய முழு விவரங்களையும் தரும்படி, பாகிஸ்தானுக்கு அமெரிக்கா புது நிபந்தனை விதித்துள்ளது.

பாகிஸ்தானிலிருந்து அடிக்கடி போலி பெயர்களில் அல்-குவைதா, தலிபான் தீவிரவாதிகள் வெளிநாடுகளுக்குப் பறக்கின்றனர். அவர்களுக்குப் பாகிஸ்தானிலிருந்துதான் பணப் பட்டுவாடா நடக்கிறது. ஆயுதப் பயிற்சியும் தரப்படுகிறது.

சில நாடுகளில் அவர்கள் பதுங்கியிருந்து, அங்கிருந்து இந்தியாவிலும் அமெரிக்காவிலும் சதித் திட்டங்களை நிறைவேற்ற திட்டமிடுகின்றனர். ஆனால், இவை வெளியே தெரியாத அளவுக்கு நடந்து வருகிறது.

கடந்த சில ஆண்டுகளாகப் பாகிஸ்தான் மீது அமெரிக்காவுக்குச் சந்தேகம் இருந்து வந்தது. சமீபகாலமாக இந்தச் சந்தேகம் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது.

கடந்த மாதம் 11 ஆம் திகதி ரைம் சதுக்கக் கட்டடங்களைக் குண்டுவைத்து தகர்க்கும் திட்டத்தை முறியடித்து பாகிஸ்தான் தீவிரவாதி பைசல் ஷாசத்தை கைதுசெய்து அமெரிக்க பொலிஸார் விசாரித்து வருகின்றனர். அப்பாவி போல் இவர் பாகிஸ்தானிலிருந்து பயணம் செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதைத் தொடர்ந்துதான் பாகிஸ்தானிலிருந்து பயணம் செய்யும் பாகிஸ்தானியர் பற்றிய பெயர் விவரத்தை அமெரிக்க புலனாய்வுத்துறை பட்டியலிட்டு ஆராய ஆரம்பித்தது. இதையொட்டி, அமெரிக்கா சமீபத்தில் இன்னொரு கிடுக்கிப்பிடியை பாகிஸ்தான் அரசுக்குப் போட்டுள்ளது.

பாகிஸ்தானிலிருந்து அமெரிக்கா வரும் பாகிஸ்தானியர் பெயர் மட்டுமன்றி, வேறு நாடுகளுக்குச் செல்லும் பாகிஸ்தானியர் பெயர் விவரங்களும் அளிக்கவேண்டும் என்று தற்போது அமெரிக்கா கட்டளையிட்டுள்ளது. எந்த நாட்டில் பாகிஸ்தானியர் வந்திறங்கினாலும், அவர்கள் பற்றிய விவரத்தை தரும்படி இந்தியா உட்பட பல நாடுகளுடன் அமெரிக்கா ஒப்பந்தம் செய்துள்ளது.

பாகிஸ்தானைப் பொறுத்தவரை ஒரு படி மேலே போய் பயணிகளின் விவரங்களை மட்டுமன்றி, அவர்கள் டிக்கட் கட்டணத்தை எப்படி செலுத்தினர் என்ற விவரத்தையும் தர வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது. அத்துடன், பாகிஸ்தானியரின் பயணம் தொடர்பான முந்தைய விவரங்களையும் தர வேண்டும் என்றும் அமெரிக்கா கேட்டுள்ளது.

அப்படி தந்தால், பாகிஸ்தானிலிருந்துதான் தீவிரவாதிகள் செல்கின்றனர். அவர்களுக்குப் பாகிஸ்தானிலிருந்துதான் பணம் செல்கிறது. வேறு சில காரணங்களுக்கும் பணம் பரிமாற்றம் நடக்கிறது என்பது நிரூபணமாகிவிடும் என்று அமெரிக்கா கருதுகிறது.

# புதிய குடியுரிமை விதிகளை ஆட்சேபித்து ஆஸியில் இவ்வாரம் பேரணி நடத்த முடிவு

மெல்போர்ன், ஜூன் 2

ஆஸ்திரேலியாவின் புதிய குடியுரிமை விதிகளை எதிர்த்து, வெளிநாட்டு மாணவர்கள் கண்டனப் பேரணி நடத்த முடிவு செய்துள்ளனர்.

அமெரிக்கா மற்றும் பிரிட்டனுக்கு இணையாக ஆஸ்திரேலிய கல்வி நிறுவனங்களில் படிக்க, வெளிநாட்டு மாணவர்கள் விரும்புகின்றனர். இந்திய மாணவர்கள் ஒரு இலட்சம் பேர் ஆஸ்திரேலியாவில் படிக்கின்றனர்.

இவர்கள் குறைந்த கால டிப்ளோமா படிப்புகளைப் படித்துவிட்டு, ஆஸ்திரேலியாவில் அந்த படிப்பு சம்பந்தமான வேலைகளில் ஈடுபட ஆரம்பித்து விடுகின்றனர்.

பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் முடி திருத்துதல், சமையல் கலை போன்ற டிப்ளோமா படிப்புகளைப் படித்துவிட்டு ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாகத் தங்கிவிடுகின்றனர்.

சமீபகாலமாக இந்திய மாணவர்கள் மீதான தாக்குதல் அதிகரித்துள்ளது. இதையடுத்து, சமீபத்தில் ஆஸ்திரேலிய அரசு புதிய விஸா விதிமுறைகளை அறிவித்துள்ளது.

டாக்டர், பொறியியலாளர், தாதியர் ஆகிய பணிகளுக்கான படிப்பு படித்தவர்களுக்குக் கெடுபிடிகள் ஏதும் இல்லை. அழகுக்கலை, சமையல் கலை போன்ற படிப்பு படித்தவர்களுக்கு, இங்கேயே தங்கி வேலை செய்ய விஸா வழங்க முடியாது என அது குறிப்பிட்டிருந்தது.

ஆஸ்திரேலியாவில் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த படிப்புகளைப் படித்தவர்களுக்கும், படிப்பவர்களுக்கும், அரசின் இந்தத் திடீர் அறிவிப்பு, அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே, இந்த படிப்பை படித்தவர்களுக்கும், படிப்பவர்களுக்கும் புதிய விஸா கொள்கையில் சலுகை காட்டப்பட வேண்டும் என மாணவர்கள் கோரியுள்ளனர். இந்தக் கோரிக்கையை வற்புறுத்தி, இந்த வாரத்தில் அவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டில் கட்டுப்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு

# டெங்குக் காய்ச்சலை ஒழித்துக் கட்டுவதற்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை உடனடியாக ஆரம்பம்

## 5ஆம் திகதி உலக சூழல் தினத்தில் நுளம்பை அழிக்க எங்கும் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுச் செயலணிக் குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய குடாநாட்டில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ''டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக்கள்'' அமைக்கப் படவிருக்கின்றன.

இதன் முதற்கட்டமாக எதிர்வரும் 5ஆம் திகதி உலக சூழல் தினத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன. மாவட்ட செயலணிக்குழு அமைக்கும் முதல் கூட்டம் அன்றைய தினம் (5ஆம் திகதி) முற்பகல்10 மணிக்கு யாழ். நூலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெறவிருக்கிறது.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் விடுத்துள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:-

டெங்குக் காய்ச்சல் இலங்கையில் பெரும் சுகாதாரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. யாழ்.மாவட்டத்திலும் அண்மைக்காலமாக இந்நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அண்மையில் பெய்த மழைக்குப் பின்னர் இந்நோயின் பரம்பல் தீவிரமடையும் அபாயமுள்ளது.

டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வலுப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் தேசிய மட்டத்தில் டெங்குத் தடுப்புச் செயலணிக்குழு கடந்த 25ஆம் திகதி அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் ஆலோசனைக்கமைய மாகாண, மாவட்ட, பிரதேச, கிராம மட்டங்களிலும் டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு குழுவும் இலங்கையில் டெங்கு நோயை இல்லாது ஒழிக்கும் இலக்குடன் உறுதியாகச் செயல்பட வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தியதுடன், அவர்களின் செயற்பாடுகள் தேசிய மட்டத்தில் சுகாதார அமைச்சினால், மேற்பார்வை செய்யப்பட்டு, உரிய இடங்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படல் வேண்டும் என சுகாதார அமைச்சரும் மேற்படி கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுச் செயலணிக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு அமைய எதிர்வரும் 5ஆம் திகதி உலக சூழல் தினத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

முன்னெடுக்கப்பட வேண்டிய டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் வருமாறு:-

* எதிர்வரும் 5ஆம் திகதி சகல நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும், பொது வைத்தியசாலைகளிலும், பொது இடங்களிலும், வீடுகளிலும் சிரமதானப் பணி மூலம் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் துப்புரவு செய்யப்பட்டு அழிக்கப்பட வேண்டும்.

பொறுப்பு - நிறுவனங்கள், நிறுவனத் தலைவர்கள், வைத்தியசாலை - பொறுப்பு வைத்திய அதிகாரிகள், பாடசாலை - அதிபர்கள்

பொது இடங்கள்- உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வீடுகள் -உரிமையாளர்கள் / குடியிருப்பாளர்கள்.

* ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொரு திங்கட்கிழமையும், வெள்ளிக்கிழமையும் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை அழிக்கும் சுத்திகரிப்புப் பணிக்காக அரை மணித்தியாலம் ஒதுக்கப்பட வேண்டும். இச்செயற்பாட்டை ஒருங்கிணைக்க ஒவ்வொரு பாடசாலையிலும் ஓர் ஆசிரியர் பொறுப்பாக நியமிக்கப்பட வேண்டும். இச்சிரமதானப் பணியில் பாடசாலை சுகாதாரக் குழுக்கள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.

* சகல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் வாரத்தில் ஒரு குறிக்கப்பட்ட தினத்தில் அரை மணி நேரம் டெங்கு சுத்திகரிப்புப் பணிக்காக ஒதுக்கப்பட வேண்டும். இச்செயற்பாட்டை ஒருங்கிணைக்க ஒவ்வொரு நிறுவனத்திலும் ஓர் உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டும்.

* ஒவ்வொரு வீடுகளிலும், காணிகளிலும் வீட்டு உரிமையாளர்கள், குடியிருப்பாளர்களினால் துப்புரவுப் பணி முன்னெடுக்கப்பட வேண்டும்.

* பொது இடங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் கிரமமான முறையில் துப்புரவு செய்து திண்மக்கழிவுகளை அகற்ற வேண்டும். கழிவுநீர் வாய்க்கால்களும் கிரமமாகச் சுத்திகரிக்கப்பட வேண்டும்.

* பொது சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள் வீடுவீடாகச் சென்று குடியிருப்பாளர்களுக்கு நுளம்பு பெருகும் இடங்களை இனங்காட்டி சுத்திகரிப்புப் பணிக்கான அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

* டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றச் செயலாளர்கள் டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்ய வேண்டும். ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

* பராமரிப்பின்றிக் கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் காணிகளைத் துப்புரவாக்க பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றச் செயலாளர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

* பிரதேசமட்ட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயலணிக் குழுக்களும், கிராமமட்ட டெங்குச் செயலணிக் குழுக்களும் மீள இயங்க வைக்கப்பட்டு டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

* இச்செயற்பாடுகள் யாவும் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் அடுத்த மூன்று மாதங்களுக்கு ஒழுங்காக நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயைத் தடுக்க அனைவரது ஒத்துழைப்பும் பங்களிப்பும் மிக அவசியம் - என்றுள்ளது. (ஒ-1)



கடுகதி ரயில் ஆரம்ப வைபவத்தின்போது...

# மக்கள் தெரிவு செய்யும் சர்வாதிகாரியே நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி

## ஜாதிக ஹெல உறுமய கட்சி கூறுகிறது

கொழும்பு, ஜூன் 02

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஜனநாயகத்துக்கும், நல்லாட்சிக்கும் பேராபத்தானது என்று ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது.

இக்கட்சியின் செயலாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை குறித்துக் கட்சியின் நிலைப்பாட்டை அறிக்கை மூலம் பகிரங்கப்படுத்தி உள்ளார்.

அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மக்களால் தெரிவுசெய்யப்படுகின்ற சர்வாதிகாரியே நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி ஆவார். இலங்கையின் ஜனாதிபதி கட்டுப்பாடுகள் எவையும் இல்லாத பரிபூரண அதிகாரங்களைக் கொண்டுள்ளார்.

எனவே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஜனநாயகத்துக்கும், நல்லாட்சிக்கும் பேராபத்தானது - என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொழும்பு - கட்டுநாயக்காவுக்கு கடுகதி ரயில் சேவை ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 2

கொழும்பு - கட்டுநாயக்கா கடுகதி ரயில் சேவை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டு கொழும்பில் இருந்து கட்டுநாயக்கா வரையிலான ரயிலில் பயணித்தனர்.

கொழும்பில் நடைபெறவுள்ள சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவில் கலந்துகொள்வதற்காக இலங்கை வரும் வெளிநாட்டு நட்சத்திரங்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து குறித்த ரயிலினூடாகவே கொழும்பை வந்தடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# வைத்தியசாலைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுக்கும் இடையில் கடந்த வருடம் இடம்பெற்ற இறுதிப் போரில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பான மிக முக்கியமான குற்றச்சாட்டுகளைத் தகுந்த ஆவணங்களுடன் சுட்டிக்காட்டி இருக்கின்றோம்.

2009ஆம் ஆண்டு முதல் ஐந்து மாதங்களாக இடம்பெற்ற இப் போரில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மற்றும் வன்முறைகள் பொதுமக்களுடைய அடிப்படை உரிமைகளுக்கு எதிரானவை என்பதைக் குறிப்பிட்டிருக்கின்றோம்.

மனிதாபிமான உதவி நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் பொதுமக்கள் மீது திட்டமிட்ட வகையிலேயே படையினர் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர் என்பதை அங்கிருந்து கிடைக்கும் ஆதாரங்களின் மூலம் உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது.

இந்த ஆதாரங்களின் பிரகாரம், இப்போரின் போது இலங்கைப் படையினரால் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் படுகொலை செய்யப்படுகின்றமை குறித்து தெரிந்திருந்தும், அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கோ, பொதுமக்களைப் பாதுகாப்பதற்கோ அரச தரப்பு முயற்சிக்கவில்லை என்பதை நம்பக்கூடியதாக இருக்கிறது.

இது சர்வதேச போர் நியமங்களுக்கு எதிரான நடவடிக்கை என்றும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிரானவை என்றும் சர்வதேச நெருக்கடிகள் குழு கருதுகின்றது.

### நெருக்கடிகள் குழு அறிக்கைக்கு பல்வேறு தரப்புகள் ஆதரவு

இந்த அடிப்படைகளிலேயே இலங்கையில் இடம்பெற்றுள்ள போர்க்குற்றங்கள் குறித்த விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சர்வதேச நெருக்கடிகள் குழு வலியுறுத்துகின்றது.

சர்வதேச நெருக்கடிகள் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து வெளிப்படையான பொறுப்புணர்வுடன் கூடிய ஒரு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு பல்வேறு அமைப்புகளும், ஊடகங்களும் ஆதரவு தெரிவித்து வருகின்றன.

தகுந்த ஆதாரங்களுடன் வெளியிடப்பட்ட எமது இந்த அறிக்கை தொடர்பில் இலங்கை அரசு பொறுப்புணர்வுடன் கூடிய பதில் எதனையும் இதுவரை அளிக்கவில்லை.

இந்த நிலையில், இலங்கையில் நீண்டகாலமாக நிலவிவந்த போக்கிலிருந்து இலங்கை அரசு விடுபட்டுள்ளது என்பதையும் தமிழ் மக்கள் உண்மையில் விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டு இருக்கின்றனர் என்பதையும் அம் மக்கள் நம்பும் வகையில் உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

இதற்கு இத்தகைய ஒரு சர்வதேச விசாரணைக்கு இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும். போர்க் குற்றங்கள் குறித்து விசாரணையை நடத்தாமலோ அல்லது விசாரணைகளை நடத்துவதற்கு அனுமதிக்காமலோ இலங்கை அரசு ஒருபோதும் அதன் நன்மதிப்பைக் காப்பாற்ற முடியாது. - எனக் குறிப்பிட்டுள்ளது. (ஒ-சி)

# போக்குவரத்து நடைமுறையில் மாற்றம்

கொழும்பு, ஜூன் 02

சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவை முன்னிட்டு, கொழும்பின் பல பகுதிகளில் போக்குவரத்து நடைமுறையில் மாற்றங்கள் செய்யப்பட உள்ளன.

சுகததாச உள்ளக அரங்கு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் மற்றும் கொள்ளுப்பிட்டி சினமன் கிராண்ட் ஹோட்டல் ஆகியவற்றை உள்ளடக்கும் வகையிலேயே இந்தப் போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

இருப்பினும் இந்தப் போக்குவரத்து நடைமுறையின் போது வீதிகள் எவையும் மூடப்படமாட்டாது என்று கூறிய அவர், எக்காரணம் கொண்டும் பொதுமக்கள் எவ்வித அசௌகரியங்களுக்கும் உள்ளாக மாட்டார்கள் என்றும் சொன்னார்.

# நவநீதம்பிள்ளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரி. அவர் ஓர் அரசியல்வாதி அல்லர். இலங்கை விடயம் தொடர்பாக அவரால் எதுவும் பேசமுடியாது. ஆனால், யுத்தக் குற்றச்சாட்டு தொடர்பாக இலங்கையில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்

சர்வதேச விசாரணை தேவையா, இல்லையா என்று சர்வதேசத்தின் நிலைப்பாட்டை அறிந்துகொள்வதற்கென அண்மையில் ஜெனிவா மனித உரிமைகள் அமைப்பால் வாக்கெடுப்பொன்று நடத்தப்பட்டது. சர்வதேச விசாரணை தேவையில்லை என்று 29 வாக்குகளும், தேவை என்று 19 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

சர்வதேசத்தின் இந்தத் தீர்ப்பை நவநீதம்பிள்ளை விளங்கிக்கொள்ளவேண்டும். ஆனால், நவநீதம்பிள்ளை இலங்கைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்படுகிறார்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் பாதுகாப்பதற்காக ஐ.நா. சபை அமைக்கப்படவில்லை. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளைப் பாதுகாப்பதற்காகவே அச்சபை அமைக்கப்பட்டது. ஆனால், நவநீதம்பிள்ளை ஐ.நா. சாசனத்தை மீறும் வகையில் செயற்படுகிறார்.

நாம் சர்வதேச நாடுகளின் தலையீட்டை விரும்பவில்லை. எமது நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளக் கூடிய பொறிமுறை ஒன்றை நாம் வைத்துள்ளோம். - என்றார்.

(ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய ஆட்சி இனங்களுக்கு இடையில் மீண்டும் மோதல்களை உருவாக்கும்

## ஹெல உறுமய வியாக்கியானம்

கொழும்பு, மே 2

கூடுதலான அதிகாரங்களோ, வடக்கு மற்றும் கிழக்கிற்கு சுய ஆட்சியோ தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வாக அமையாது. மாறாக மீண்டும் இனங்களுக்கு இடையில் மோதல்களையே உருவாக்கும் - என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் உட்பட ஏனைய பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வை வழங்க அரசு காலம் கடத்தக் கூடாது. அதேபோன்று தமிழ் அரசியல் தலைமைத்துவங்கள் பேதங்களை மறந்து நியாயமான தீர்வுகளுக்காக அரசிற்கு ஒத்துழைப்புகளை வழங்கவேண்டும் எனவும் அக்கட்சி தெவித்துள்ளது.

கூடுதலான அதிகாரங்களோ, வடக்கு மற்றும் கிழக்கிற்கு சுய ஆட்சியோ தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வாக அமையாது. மாறாக மீண்டும் இனங்களுக்கு இடையில் மோதல்களையே உருவாக்கும் எனவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கூறியவை வருமாறு -

தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசியல் நோக்கத்துடன் எதிர்க்கட்சிகள் கையாள்வதாலேயே தற்போது தேவையற்ற பிரச்சினைகள் உருவாகின்றது. வடக்கில் மீள் குடியேற்றப் பணிகள் காலதாமதமாவதற்கு அப் பிரதேசங்களில் புதைக்கப்பட்டிருக்கும் மிதி வெடிகளே காரணம்.

ஆனால் உள் நாட்டின் எதிர்க் கட்சிகள் தவறான கருத்துக்களை சர்வதேச நாடுகளிலும் உள்நாட்டிலும் பரப்புவதால் வடக்கில் மீள்குடியேற்றம் உட்பட ஏனைய அபிவிருத்திப் பணிகளும் தாமதமாகின்றன.

எவ்வாறாயினும் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் இனங்களுக்கு இடையே ஒற்றுமை வளர்ந்து கொண்டு வருகின்றது. எனவே கடுமையாக பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதே எமது விருப்பம். அதனால் அம் மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வை கூடிய விரைவில் வழங்க வேண்டும். இது அரசின் மிக முக்கிய பொறுப்பும் கடமையுமாகும். - இப்படி தேரர் கூறினார்.

# கண்ணிவெடிகள் அகற்றப்படாததாலேயே முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டனர்!

## முல்லைத்தீவு அரச அதிபர் விளக்கம்

கொழும்பு, ஜூன் 02

கண்ணிவெடிகள் அகற்றப்படாத இடம் ஒன்றில் தங்கி இருந்ததினாலேயே தாம் முஸ்லிம் மக்களை வெளியேற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்று முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

வன்னி மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் சுமத்திய குற்றச்சாட்டுக்கே இமெல்டா சுகுமார் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய உற்சவத்தின் போது, வியாபார நோக்கத்திற்காக வந்த முஸ்லிம்கள், கண்ணிவெடிகள் அகற்றப்படாத இடத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் தங்கியிருந்த போதே அவர்களை அங்கிருந்து வெளியேறும்படி கூறியதாக அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதாகப் படையினரும் ஐக்கிய நாடுகள் அமைப்பும் உறுதிசெய்த பின்னரே மக்கள் மீள் குடியமர்த்தப்படுகின்றனர். இதில் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் என்ற பேதங்கள் இல்லை என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்,

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் இந்த விடயம் குறித்து தம்முடன் தொலைபேசியில் உரையாடும் போது தம்மைப் பயமுறுத்தி மிரட்டும் வகையில் பேசினார் என இமெல்டா சுகுமார் குற்றம் சுமத்தியுள்ளார்,

இந்தநிலையில் அரச அதிகாரி ஒருவருடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெரியவில்லை எனக் குறிப்பிட்ட அவர், அரசியல்வாதிகளின் விருப்பத்துக்கு ஏற்ப மீள்குடியேற்றங்களை மேற்கொள்ளமுடியாது என்றும் தெரிவித்தார்.

# வவுனியாவில் இருந்து வந்த புன்னாலைக்கட்டுவன் வாசி கைதடியில் திடீர் மரணம்

கைதடி, ஜூன் 2

தேனீர்ச்சாலை ஒன்றில் மென்பானம் அருந்திவிட்டு வெளியே வந்தவர் திடீரென விழுந்து மரணமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் கைதடி நடந்துள்ளது.

சம்பவத்தில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த மார்க்கண்டு நாகராசா (வயது 35) என்ற குடும்பஸ்தர் மரணமடைந்துள்ளார்.

இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-10-288)

# "உதயன்" செய்தியாளர் காலமானார்

யாழ்ப்பாணம், ஜூன் 02

உதயன் - சுடரொளி பத்திரிகைகளின் பரந்தன் செய்தியாளராக நீண்டகாலம் பணியாற்றிய மு.கந்தசாமி (வயது 60) நேற்றுக்காலை காலமானார்.

சமாதான காலத்திலும் பின்னர் வன்னியில் போர் நடைபெற்ற போதும் அங்கிருந்து பணியாற்றிய கந்தசாமி இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கியிருந்த போதும் தனது செய்திப்பணியைத் தொடர்ந்தார்.

வன்னியில் அவரது சொந்த இடமான விசுவமடு, புன்னைநீராவிப் பகுதியில் கடந்த பத்து நாள்களுக்கு முன்னர் மீளக் குடியமர்ந்த இவர், நேற்றுமுன்தினம் திடீர் சுகயீனமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று அதிகாலை அங்கு மரணமானார்.

ஊடகத்துறையுடன் சமூக சேவைகளிலும் ஈடுபாடு கொண்ட இவர் விவசாயத்துறையில் பல்வேறு புதிய கண்டுபிடிப்புக்களை அறிமுகம் செய்து விவசாய மன்னனாகத் தெரிவுசெய்யப்பட்டுக் கௌரவிக்கப்பட்டிருந்தார். (ஒ-1)

### யுத்தக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயகம் ஏன் இவ்வாறானதொரு நிபுணர்கள் குழுவை நியமிக்க முயற்சி எடுத்துள்ளார் என்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி அவதானம் செலுத்தியுள் ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்து மேலும் அவர் கூறியவை வருமாறு -

ஐக்கிய நாடுகள் சபை எமது உள் நாட்டு விவகாரங்களில் தலையிடுவதை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கின்றது. அவர் இவ்வாறு நிபுணர்கள் குழு ஒன்றை நியமிப்பதற்கான காரணம் என்ன? அதாவது இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபைக்கு அரசு சிறந்த முறை யில் விளக்கம் அளிக்கவில்லையா? அந்த விடயத்தில் அரசு பலவீன மாக இருந்துள்ளதா என்று பார்க்க வேண்டும்.

அரசு இந்த விடயத்தில் என்ன செய்கின்றது என்று நாம் வினவுகின்றோம். ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிக்கு ஆரம்பத்திலிருந்து அரசு எதிர்ப்பு வெளியிட்டு வந்தபோதிலும் ஐ.நா. அந்த விடயத்தை கைவிடவில்லை. ஆனால் இவ்வாறு உள்விவகாரங்களில் தலையிட இடமளிக்க முடியாது. - இப்படி ரவி கருணாநாயக்க கூறினார்.

# ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டம் குறித்த இறுதித் தீர்மானம் ஒகஸ்ட் மாதத்தில்!

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

இலங்கைக்கான ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகைத் திட்டத்தை நீடிப்பது குறித்த இறுதித் தீர்மானம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி அறிவிக்கப்படும் - என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள வரிச் சலுகைத் திட்டத்தை நீடிப்பதா அல்லது ரத்துச் செய்வதா என்பது குறித்த இறுதித் தீர்மானம் ஓகஸ்ட் மாதம் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சலுகைத் திட்ட நீடிப்பு தொடர்பில் இரண்டு தடவைகள் இலங்கை இராஜதந்திரிகள் பிரஸல்ஸிற்கு விஜயம் செய்து ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சலுகைத் திட்டத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தகுதியை இலங்கை பெற்றுக் கொண்டுள்ளது அவர் தெரிவித்தார். (சி)

### பூநகரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, பூநகரி - சங்குப்பிட்டி பிரதேசத்திற்குச் சென்று பார்வையிட்ட பின்னர் இந்தப் படகுச்சேவையை வெகுவிரைவில் ஆரம்பிப்பதற்கான பொறுப்பை எடுத்துக்கொண்டார் என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார். (ஒ-சி)

### துவாரகாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்றும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டியுள்ளது.

இது சம்பந்தமாக மேலும் கருத்துத் தெரிவித்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் உபுல் பிரேமரத்ன, இராசையா துவாரகா, விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டிலேயே கைதுசெய்யப்பட்டார்.

எப்படி துவாரகாவால் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைக்காமல் இருந்திருக்க முடியும்? அவர் வாழ்ந்த கிளிநொச்சி பகுதி கடந்த 30 வருடங்களாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியாகும் என்று அவர் தெரிவித்தார்.

INFORMATION TECHNOLOG PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Technology and Research

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office : 021 222 3641
Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

Diploma Courses
- Diploma in DTP
- Diploma in MS Office
- Diploma in Hardware Technology

On-Line Class
- Diploma in PC Application & Office Management (MS Office syllabus included)

Work Shop Classes
- PC Maintenance & Hardware
- Adobe Photoshop

Certificate Courses
- MS Word
- MS Excel
- MS Access
- CorelDRAW
- PageMaker
- Visual Basic
- Java
- HTML & J Scripts
- Pascal
- C/C++

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்

வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் : 18/06/2010
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் : 19/06/2010

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் 250/-

G-TEC Computer Education
சர்வதேச புகழ் பெற்ற G-TEC கணனி நிறுவனத்தின் கற்கை நெறிகளை தகவல் தொழில் நுட்ப பூங்கா ஊடாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தகவல் தொழில் நுட்ப பூங்காவில் ஏற்கனவே கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு வழங்கப்படும் அரச சான்றிதழுக்கு மேலதிகமாக சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ் ஒன்றையும் பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதால் இது தொடர்பான தங்களது பதிவுகளை அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக விபரங்கள் நேரில் அறியத்தரப்படும்.

Centre for Information Technology
-Executive Officer

உதயன்
ஊடகவியல் பயிற்சிப் பட்டறை
உதயன் நிறுவனத்தினால் ஊடகத்துறையில் ஆர்வமுள்ளோருக்கான பயிற்சிப்பட்டறை-1
இடம்: உதயன் கேட்போர் கூடம்
காலம்:
02.06.2010 முதல் 06.06.2010 வரை
முதலாவது பயிற்சிப்பட்டறைக்குத் தெரிவானோருக்கு தபால்மூலமும் தொலைபேசி வாயிலாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அறிவித்தல் கிடைத்தவர்கள் ஜூன் 2 ஆம் திகதி காலை 9 மணிக்கு உதயன் பணிமனைக்கு சமுகம் தரவும்.
குறிப்பு: இப்பயிற்சிப் பட்டறைக்கு விண்ணப்பித்த ஏனையோர் அடுத்த கட்டப் பயிற்சிகளில் உள்வாங்கப்படுவர்.
பயிற்சி இணைப்பாளர்

A/L 2012 பொருளியல்
N.B. கஜீதரன்
பிரிவு II
Mon.- Fri. 6-7 am.
(புதிதாகச் சேரும் மாணவர்களுக்கானது)
SHAMROCK
ஈச்சமோட்டை

வான் வாடகைக்குண்டு
விற்பனை முகவர்களின் விநியோகத் தேவைக்கு உகந்த வான் மாதாந்த வாடகை அடிப்படையில் நீண்ட காலத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு :
T.P.:- 0774528818

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org